கல்கி

KALKI 19.3.95 ரூ. 3.00



மயக்கும் மல்டி மீடியா!





"தஞ்சை மாவட்டத்தில் விற்பனைக்கு வந்த எல்லா இடங்களையும், அதிகாரத்திலுள்ளவர்களின் பினாமிகள் வாங்கி விட்டார்கள். இனி ரயில்வே நிலையமும், கலெக்டர் அலுவலக வளாகமும் தான் பாக்கி. விற்பனைக்கு வந்தால் அதையும் வளைத்துப் போட்டுவிடுவார்கள்" என்று ஒரு வேதனை கலந்த ஜோக் தமிழகமெங்கும் வலம் வருகிறது. இனி வாங்குவதற்கு சொத்துக்கள் தஞ்சையில் இல்லாத நிலையில் 'சக்தி' வாய்ந்தவர்கள் மற்ற மாவட்டங்களுக்குக் காலடி எடுத்து வைத்துள்ளார்கள் என்ற கருத்தை மெய்ப்பிப்பது போன்ற ஒரு சம்பவத்தை அம்பலப் படுத்துகிறார் குமரி அனந்தன்.

"வ.உ.சி. மாவட்டத்தில் உள்ளது எனது தொகுதியான சாத்தான்குளம். இந்தப் பகுதியில் சமீப காலமாக ஏகப்பட்ட நிலப் பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் விவகாரம் என்னவென்றால், நில உரிமையாளர்களுக்கு, தெரியாமலேயே அவர்களது நிலங்களின் உரிமை மற்றவர்கள் கைக்குப் போய் இருக்கிறது! அதிகார வர்க்கத்திலுள்ளவர்களின் துணையோடு மோசடி செய்து, கிட்டத்தட்ட 1500 ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டுள்ளார் சென்னையைச் சேர்ந்த சிவா என்பவர்."

"விஷயத்தை இன்னும் கொஞ்சம் விளக்கிச் சொல்லலாமே?"



• குமரி அனந்தன்
(படம் : ராஜன்)

"சர்வே எண் 462/3 இன் கீழ் உள்ள ஒரு ஏக்கர் 38 செண்ட், ஈனமுத்து கோனார் என்பவருக்குச் சொந்தமானது. ஆனால் அந்த நிலத்தை அவருக்கே தெரியாமல், போலிக் கையெழுத்துப் போட்டு சகல அதிகாரம் கொண்ட பத்திரம் ஒன்றால் (power of attorney) தம் பெயருக்கு மாற்றிப் பதிவு செய்து கொண்டிருக்கிறார் இந்த சிவா. இதே போல் ஆறுமுகக் கோனார், பெருமாள் வேளான், மலையாண்டித் தேவர் ஆகியோரது நிலங்களும், மோசடியால் கைமாறி உள்ளன. கிட்டத்தட்ட 1500 ஏக்கரை இப்படி நூற்றுக்கணக்கான விவசாயிகளிடம் இருந்து கபளீகரம் செய்ய, கிராம நிர்வாக அதிகாரிகளும் துணை நின்றிருக்கிறார்கள். முதல்வரின் தோழி சசிகலாவுக்காகத்தான் இந்த நிலங்கள் பினாமிகள் பெயரில் வாங்கப் படுகிறது என்றும், அவரது கட்டளையின் பேரில் தான் அதிகார வர்க்கம் மோசடிக்குத் துணை போகிறதென்றும் தொகுதி முழுக்கப் பரவலாகப் பேசப்படுகிறது. இது உண்மையாக இருக்கும் சாத்தியம் உண்டு என்பது தான் என் அபிப்பிராயம். சம்பந்தப்பட்டவர்களுக்கு நிலம் உரிமையானது என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன."

"தங்கள் நிலங்கள் மோசடியில் அபகரிக்கப் பட்டு இருப்பது விவசாயிகளுக்குத் தெரிய வந்தது

“ஜெயலலிதாவுக்கு ‘ஒன்பது’ ராசி. அவரது கார் எண் கூட்டுத் தொகை, வீட்டு நம்பர், டெலிபோன் நம்பர் கூட்டுத்தொகை எல்லாம் ஒன்பது. அவருக்காக யாராவது தீக்குளித்தால் ஒன்பது பேராக இருக்கும்! அமைச்சரவை எண்ணிக்கை 27 என்றால் 2+7=9! இப்படி ஒன்பது ராசி பார்க்கும் முதல்வரின் ஆட்சியில் சமீபத்திய சாதனை ஒன்பது விடுதலைப்புலிகள் தப்பியது! தப்பித்த தேதி 27. 2+7=9! இன்னும் துருவிப் பார்த்தால் தப்பித்த நேரம் கூட ஒன்பதாக இருக்கும்...!”

- வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் எழுதிய ‘உரிமைக்குக் குரல் கொடுப்போம்’ நூல் வெளியீட்டு விழாவில் ‘தராசு’ ஆசிரியர் ஷ்யாம் பேசியது.

ரசித்தவர்: ஸ்ரீனிவாசன்



எப்படி?”

“திடீரென்று தங்கள் நிலங்களில் ஆழ்கிணறு தோண்டும் இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டு, கிணறுகள் தோண்டப்பட்டதைப் பார்த்துப் பதறியடித்துக் கொண்டு போய் விசாரித்திருக்கிறார்கள். ‘இந்த நிலங்களை சிவா என்பவர் வாங்கி விட்டாரே’ என்ற பதில் பேரிடியாக இறங்கி இருக்கிறது. அலறி அடித்துக் கொண்டு போய் கிராம நிர்வாக அதிகாரிகளிடம் விசாரித்தால் ‘என்னய்யா பணத்தை வாங்கிக் கொண்டு நிலத்தை எழுதிக் கொடுத்துட்டு ஏன் தகராறு பண்ணறே’ என்று கேட்கிறார் அவர். இப்போது விவசாயிகள் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறார்கள். மூன்று போகம் விளையக் கூடிய நிலங்களாக இல்லாவிட்டாலும், விவசாயிகளுக்கு வருடம் முழுவதும் அரை வயிற்றுக் கஞ்சிக்காவது வழி செய்த நிலங்கள் அவை.”


“இவ்வளவு பெரிய நிலப்பரப்பை மோசடியாகக் கபளீகரம் செய்வது சாத்தியம்தானா?”

“தமிழ்நாட்டில் இன்று எது வேண்டுமானாலும் நடக்கும். எனக்கு வந்த தகவல்படி 1500 ஏக்கர்தான் என்றாலும், மார்க்ஸிஸ்ட் தோழர்கள் 6000 ஏக்கர் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதம் 25 ஆம் தேதிக்குள் மோசடியாகக் கைப்பற்றப்பட்ட நிலங்கள் விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்படாவிட்டால் தமிழ்நாடு காங்கிரஸ் சாத்வீக முறையில் நில மீட்புப் போராட்டம் நடத்தும்.”

விவசாயிகள் சுலபமாக ஏமாறுவதற்கு ஓர் அடிப்படைக் காரணத்தையும் விளக்குகிறார் அனந்தன் : “அந்தக் காலத்துக் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு கிராமத்தில் உள்ள சர்வே நம்பர்கள், நிலத்தின் உரிமையாளர்கள், எல்லாம் மனப்பாடமாக இருக்கும். ஆனால் இப்போது புதிதாக சர்வீஸ் கமிஷன் மூலம் வந்துள்ள கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு நிலங்களைப் பற்றிய விவரங்கள் சரியாகத் தெரிவதில்லை. அதிகாரத்தைப் பயன்படுத்தும் மோசடிக்காரர்களுக்கு, இந்த நிலை வசதியாக இருக்கிறது” என்று சொல்லும் அனந்தன், அண்ணா பல்கலைக் கழக இடம் ஜெ. ஜெ. திரைப்பட நகருக்குக் கைமாற்ற இருப்பதையும் கடுமையாகக் கண்டிக்கிறார்:

“அந்த இடம் பல்கலைக் கழகத்திற்கு மிகவும் தேவைப்படும் இடம். உலகம் முழுவதும் உள்ள அறக்கட்டளைகள் நிதியுதவியைப் பெற்று எதிர்காலச் சமுதாயத்துக்குத் தேவையான ஆராய்ச்சிகள் நடைபெறும் இடம். ஆகையால் தமிழக அரசு திரைப்பட நகருக்கு வேறு இடம் பார்த்துக் கொள்ளட்டும். இல்லையேல் இதற்கும் சேர்த்துப் போராட்டம் நடத்துவோம்!”

- ப்ரியன்



கலகல கோவை

கோவை மாவட்ட வாசகர்களே:... சிறுவாணியாக ஓர் அறிவிப்பு! உங்களுக்கென்றே கல்கியில் சில பக்கங்கள் ஒதுக்கப் போகிறோம். அவற்றை உங்கள் 'கல கல' படைப்புகளால் நிரப்புங்கள் பார்க்கலாம்!

இதோ நிபந்தனைகள்:


- இப்போது கோவை மாவட்டத்தில் வசிப்பவர்கள் மட்டுமே எழுதலாம்.
- எழுதும் விஷயங்கள் – ஜோக், துணுக்கு, உண்மைச் சம்பவம், புது – மரபுக் கவிதை, மாணவர் நியூஸ், நையாண்டி – என எதுவாயினும் போஸ்ட் கார்டில் மட்டுமே எழுதலாம்.
- எழுதப்படும் விஷயம் 'கலகல' என்று அமைய வேண்டியது கட்டாயம்.
- கல்கி ஆசிரியர் குழுவினர் தேர்ந்தெடுக்கும் 'கலகல' ஐட்டங்கள், ஏப்ரல் 9 கல்கி புத்தாண்டு சிறப்பிதழில் தொடங்கி 'கலகல கோவை' பக்கங்களில் இடம்பெறும்.
- பிரசுரமாகும் படைப்புகளுக்குச் சன்மானம் உண்டு.
- உங்கள் படைப்புகளின் தரத்தைப் பொறுத்து அதிக பட்சமாக நான்கு வாரங்கள் வரை கலகல கோவை பகுதி தொடர்ந்து வெளியாகும்.
- தலைசிறந்த படைப்புக்குச் சிறப்புப் பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- புத்தாண்டு சிறப்பிதழில் இடம் பிடிக்க கடைசி தேதி: 24.3.95. அப்புறமும் எழுதிக் கொண்டிருங்கள்! ஒருவர் எத்தனை படைப்புக்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். போஸ்ட் கார்ட் முகவரி பகுதியில் கலகல கோவை என்று குறிப்பிடவும்.

இதர மாவட்ட வாசகர்கள் பதற வேண்டாம்; உங்களுக்கும் வாய்ப்பு வரும்.

–ஆசிரியர்.


"பட்ஜெட் சீசனாம்...
எஸ்.ஐ., மாமூல் ரேட்
ரிவைஸ் பண்ணி
ஏரியா வாரியா லிஸ்ட்
அனுப்பியிருக்காரு!"
- கிச்
"பட்ஜெட் என்றால் என்ன?"
"வீட்ல அப்பா போட்டு,
அம்மா இஷ்டத்துக்கு மாத்து
வாங்களே, அது!
- மலர்
"என் ஒய்ஃப்
மகா புத்திசாலி."
"எப்படிச்
சொல்றே?"
"ரயில்வே பட்
ஜெட் வரப் போகு
துன்னு சொன்னதும்
பஸ்லே,
ஆட்டோலே,
சைக்கிள்லே
பட்ஜெட் டெல்லாம்
எப்பன்னு கேக்கறா!"
- விஜிதா
"டி.வி.யிலே என்ன
வரிவரியாகத் தெரியுது?
ஆன்டெனா சரியில்
லையா?"
"அதெல்லாமில்லை.
பட்ஜெட் பற்றிய நிகழ்ச்சி
இல்லையா? அதுதான்
சிம்பாலிக்காக் காட்ட
றாங்க."


பட்ஜெட் பஜார்!
"கல்யாண பட்ஜெட்ல காப்பி செலவை முதல்ல எழுதாதீங்கன்னு சொன்னா கேட்டாத்தானே...?"
"என்யா பட்ஜெட்டுலே வழக்கமான வரிகளைத்தான் விதிச்சிருக்காங்கன்னு சொல்ல வேண்டியதுதானே? 'மாமூலான வரி'ன்னு நீ சொன்னதிலே, ஒரு நிமிஷம் 'மாமூலுக்குத்தான் வரி'யோன்னு பயந்து போயிட்டேன்."
- குல்லு
"இன்னிக்கு நம்ம குடும்ப பட்ஜெட்டுலே உங்களுக்கு பாக்கெட் மணி எவ்வளவு தருவேன்றதை முடிவெடுப்போம்னு சொன்னேன். அதுக்காக?!"
- குல்லு



தமிழக மக்கள்
இரயில்வே பட்ஜெட்
மத்திய அரசு பட்ஜெட்
இதோ நானும் பிடிக்கப் பார்க்கிறேன்...
தமிழக அரசு பட்ஜெட்
3
2
1
தமிழக அரசு
கிறிஸ்துவர்கள் எதிர்ப்பு
கிறிஸ்துவர் கோரிக்கை
எரிமலை வெடிக்கிறதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க...
இந்து முன்னணி தலைவர்



கல்கி



1995
மார்ச் 19
பவ
பங்குனி 5
மலர் : 53
இதழ் : 33

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா — பாரதியார்.

புலிகள் தப்பியதைவிடவும் பேரவமானம்!

'மானேஜர் கிளார்க்கிடம் எரிந்து விழ, அவர் பியூன் மீது பாய, வீடு திரும்பிய பியூன் மனைவியைத் திட்ட, அவள், மகன் முதுகில் மொத்த, அவன் தங்கச்சியை அடிக்க, அவள் மரப்பாச்சியைக் கல்லிலே மோதி உடைத்தாள்' என்று குட்டிக் கதை சொல்வார்கள். இந்த மாதிரிதான் சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து தப்பிய ஒன்பது விடுதலைப் புலிகள் மீது உள்ள கோபத்தை சிறை அதிகாரிகள் எஞ்சியுள்ள கைதிகள் மீது காண்பித்து, அவர்களை உருட்டுக் கட்டையாலும் இரும்புத் தடியாலும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் தப்ப தங்களையொத்த அதிகாரிகள் கருங்காலிகளாக மாறியது தான் காரணம் என்பதை மறந்து, தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் முடியாத கைதிகளைத் தாக்கியுள்ளார்கள். ஒருவேளை விடுதலைப் புலிகள் தப்பக் கொடுக்கப்பட்ட லஞ்சத்தில் கணிசமான பங்கு தங்கள் கரத்துக்கு வந்து சேராததன் காரணமாக எழுந்த கோபமோ என்னமோ!

மனித உரிமைகள் என்பது இன்று உலகெங்கும் மிகத் தீவிரமாகப் பேசப்படும் ஒரு விஷயம். இதற்குப் பாடுபடவென்று உலகளாவிய கழகங்களும் அமைப்புக்களும் இயங்கி வருகின்றன. இந்த மனித உரிமைகள் இரண்டு வகைப்படும். ஒன்று அரசியல் ரீதியான உரிமைகள்; மற்றது தனிமனித உரிமைகள்.

ஜனநாயகமானாலும் சரி, சர்வாதிகாரமானாலும் சரி, மக்களின் அரசியல் உரிமைகளைக் குறைக்கவும் நசுக்கவும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளோருக்கு ஆயிரம் வழிகள் உள்ளன. இவை குறித்து அந்தந்த நாட்டு மக்களே விழிப் புணர்ச்சியுடன் செயல்பட்டு உரிமைகளைக் காத்துக் கொண்டால்தான் உண்டு. இன்னொரு புறத்தில் வேண்டப் படாதவர்களை கொடுமைப்படுத்துவதும் சித்திரவதை செய்வதும் அதிகாரத்தில் உள்ளோருக்கு மிக மிக எளிதாக இருக்கிறது. இதை உலகளாவிய முறையில் Amnesty International போன்ற அமைப்புக்கள் எதிர்ப்பதுடன், இத்தகைய அக்கிரமங்களை அம்பலப் படுத்தி, அதன் மூலமே இக்கொடூரங்களுக்கு முடிவு கட்ட முயற்சி செய்கின்றன.

இவ்வாறு தனி மனிதர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் கொடுமைப்படுத்தப்படுவது இரண்டு சந்தர்ப்பங்களில் மிக அதிகமாக நடக்கின்றன. ஒன்று, ராணுவப் படையெடுப்பின் போது, அல்லது, எல்லை மீறிப்போகும் ஒரு நிலைமையைக் கட்டுப்படுத்த ராணுவம் அழைக்கப்படும் போது. இரண்டாவது, சிறைச்சாலைகளில். கைதிகளை மிருகங்களை விடவும் கேவலமாக நடத்துவது இங்கு சகஜமாகி விடுகிறது. இதனால்தான் மனித உரிமைக் கழகங்கள் சிறைச்சாலைகளை உன்னிப்பாகக் கவனிக்கின்றன. அவ்வாறு PUCL என்ற அமைப்பு கண்காணித்ததில், சென்னை மத்திய சிறைச்சாலையில் கைதிகள் அடித்து நொறுக்கப்பட்டிருப்பது தெரியவர, உயர்நீதி மன்றத்தில் முறையிட்டது. உயர்நீதி மன்றம் உடனே நிலைமையை ஆராயுமாறு ஒரு நீதிபதியை நியமித்தது. அவரும் விசாரணை நடத்தி, தமது அறிக்கையை உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பித்து விட்டார். இந்த அறிக்கையின்படி, மத்திய சிறைச்சாலையி லிருந்து விடுதலைப் புலிகள் தப்பிய பிறகு, எஞ்சியுள்ள சிறைக் கைதிகள் சிறை அதிகாரிகளின் கோபத்துக்கு உள்ளாகி தாக்கப்பட்டதில், அவர்கள் பழுவேட்டரையரை விடவும் அதிகமான விழுப்புண்களைத் தாங்கி நிற்கிறார்கள்! உடம்பெல்லாம் ரத்தக் களறியாகியுள்ளது!

இந்தச் சம்பவம், விடுதலைப் புலிகள் தப்பியதால் ஏற்பட்ட அவமானத்தை விடவும் பலமடங்கு அதிகமான அவமானத்தை ஜெ. அரசுக்கு ஏற்படுத்த வேண்டும். ஆனால் எத்தகைய அவமானத்தையும் துடைத்துப் போட்டுவிட்டு நிற்கும் ஜெ. அரசு, இதை மட்டும் லட்சியம் பண்ணவா போகிறது?

மயக்கும்

ஆதௌள கீர்த்தனாரம்பத்தில் அபாக்கஸ் இருந்தது. அது ஜப்பான்காரர்கள் கணக்குப் போட. நமக்கு கல்சிலேட்டு ,பலப்பம். வாழ்க்கையில் சிக்கல் இல்லை. கூட்டுக் குடும்பம். வத்தல் குழம்பு. ஆனையடி அப்பளம். மாட்டு வண்டி....

எல்லாம் மாறிவிட்டது. சிறு குடும்பம். பல்லவன் பஸ்ஸில் நெரிசல். ரேஷனில் பாமாயில். நாலு சானலில் சினிமா விழுகிற டி.வி. கம்ப்யூட்டர். சகலமானதற்கும் கம்ப்யூட்டர்.

கம்ப்யூட்டர் வந்த புதிதில் சமர்த்தாகக் கணக்கு மட்டும் போட்டுக் கொடுத்தது. 'போன மாசத்தை விட இந்த மாசம் நம்ம சவுக்காரம் எத்தனை கட்டி அதிகம் விற்றது? ஊர் வாரியாக விவரம் வேணும்' என்று அறியப் பொத்தானை அமுக்கினால் இருக்கிற தகவல், திரையில் நகர்ந்து போனது. கோடு போட்ட காகிதத்தில் மாய்ந்து மாய்ந்து அடித்துக் கொடுத்ததைப் பார்த்து அலுத்துப் போனவர்கள் சொன்னார்கள் - "இதெல்லாம் திரையில் வரைபடமாக வந்தால் நன்றாக இருக்குமே...."

சரிதான் என்று, குறுந்தாடி வைத்த, வைக்காத விற்பன்னர்கள் அதிக சக்தி வாய்ந்த கம்ப்யூட்டர் சில்லுகளை உருவாக்க, கம்ப்யூட்டர் கணக்கும் போட்டு, ஒழிந்த நேரத்தில் படமும் வரைந்து காட்டியது.

வெறும் கோடுதானா? கலர் இல்லையா? இந்தா பிடி கலர்.... போட்டோ வராதா? இதோ வருகிறது... போட்டோ மட்டும் போதாது... படம் நகர வேண்டும்.... பேச வேண்டும்.

'பிராசசிங் பவர்' என்ற சக்தி அதிகமாக அதிகமாகக் கம்ப்யூட்டர் கணக்குப் போட உபயோகித்த நேரம் ரவையூண்டாகக் குறைய, மிஞ்சினதெல்லாம் ஜிகினா வேலைக்கு என்றானது.

லேட்டஸ்ட் ஜிகினா 'மல்ட்டி மீடியா.'



மல்டி மீடியா என்றால் என்ன?

'முழுமையாக வெண்ணெயில் செய்த பண்டம்' என்பது போல நெஞ்சையள்ளக் கூடிய வியாக்கியானம் எதுவும் மல்டி மீடியாவுக்குத் தரமுடியாது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் 'கொஞ்சம் ஒலி, கொஞ்சம் புகைப் படம், கொஞ்சம் சினிமா' என்று கலந்து கட்டியாகக் கம்ப்யூட்டரில் தருவது மல்டி மீடியா.


அதாகப்பட்டது... நீங்கள் சென்னைக்குப் புதுசு. ரயிலில் எழும்பூரில் வந்து இறங்கியிருக்கிறீர்கள்... மாம்பலம் உஸ்மான் தெரு போய்த் தங்க நகை வாங்க வேண்டும்...

பஸ்ஸில் ஏற பயம். ஆட்டோவில் குறுக்கு வழி என்று செங்கல்பட்டு மார்க்கமாகக் கூட்டிப் போவார்கள்....

எக்மோர் ஸ்டேஷனில் ஒரு மல்டி மீடியா கம்ப்யூட்டர் இருந்து, அதில் போதுமான தகவலும் இருந்தால்.....

திரையில் சென்னையின் வரை படம் விரியும். நீங்கள் போக வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்ததும், அதற்கான பாதை ஒளித்தடமாக நெளியும். 'இது நுங்கம்பாக்கம்... வள்ளுவர் கோட்டம்... திருமலைப்பிள்ளை தெரு... பனகல் பார்க்...' என்று குரல் சொல்லிக் கொண்டு போகும். கடைசியாக, ஒரு வழிப்பாதையான உஸ்மான் தெரு கோலாகலமான ஒலி ஒளிக் காட்சியாகத் தட்டுப்படும்... அப்புறம் நீங்கள் பத்துப் பேருக்கு வழி சொல்வீர்கள்!

மேலே குறிப்பிட்டதில், கம்ப்யூட்டர் தங்கு தடையில்லாமல் பேசி, இயங்கிக் கொண்டே போனால் அது சாதா மல்டி மீடியா. நீங்கள் நடுவில் நிறுத்தி, 'வள்ளுவர் கோட்டத்தில் என்ன விசேஷம்' என்று கேட்டால், உட்கார்ந்த போஸில் வள்ளுவரும் ரதமும் திரையில் தட்டுப்பட 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று சீர்காழி குரலில் குறளும் இசையோடு கேட்க வசதி இருந்தால், அது இடையூடாடி



மல்டி மீடியா!

இயக்குகிறதான 'இன்டராக்டிவ் மல்ட்டி மீடியா.'

இதெல்லாம் தர கம்ப்யூட்டரில் என்ன வேண்டும்?

பலசரக்குக் கடையில் கம்ப்யூட்டர் விற்கிற காலத்தில் (வரப் போகிறது) மல்டி மீடியா என்று போய்க் கேட்டால், கல்லாவிலிருந்து இப்படிச் சத்தம் உயரும்....

"சகாதேவா... அம்மாவுக்கு ஒரு சிடி-ராம்... ஒரு சவுண்ட் போர்ட்... ஒரு வீடியோ போர்ட்... சின்தசைசர்.. ரெண்டு ஸ்டீரியோ ஸ்பீக்கர் பொட்டலம் கட்டிக் கொடு...."

சிடி-ராம் என்பது கம்ப்யூட்டரில் தகவல் சேகரித்து வைக்க மின்காந்தத் தகடு. ஐநூறு பிளாப்பியளவு, அதாவது அறுபது கோடி எழுத்து அளவிலான தகவலை சேகரித்து வைக்கக் கூடியது.

'சவுண்ட் போர்ட்' என்ற ஒலிப்பலகை கம்ப்யூட்டரில் சத்தம் உருவாக்கப் பயன்படுவது. சின்தசைசர் அதற்கு ஒத்தாசை.

'வீடியோ போர்ட்' வேறு எதுக்கு? கம்ப்யூட்டரில் படம் காட்ட. நகர்கிற படம்.

இதையெல்லாம் வைத்து மல்டி மீடியா எப்படி உருவாக்கலாம்?

முதலில் ஒலியை எடுத்துக் கொள்வோம்.

வாரியார் பேச்சு, பெரியார் பேச்சு, வீட்டுக்காரி ஏச்சு, செம்மங்குடி பாட்டு, கொல்லங்குடி (கருப்பாயி) பாட்டு, கொட்டாங்குச்சி வயலின், குன்னக்குடி வயலின், வளமான தொப்பையோடு மலையாளிகள் சேர்ந்து நின்று வாசிக்கிற 'பஞ்ச' வாத்தியம், பரீட்சைக்குக் கிளம்பும் போது ஆகாசவாணியில் ஒலிபரப்பாகிற கோட்டு வாத்தியம், குட்டியானை சைஸ் பியோனா என்று எதை வேண்டுமானாலும் கம்ப்யூட்டர் அறியக்கூடிய சங்கேதமாக மாற்றி, கம்ப்யூட்டரில் தகவல் ஏடுகளாகச் சேர்த்து வைக்கலாம். 'அலை வடிவ ஏடு' என்று பெயர்.

"டிஜிடைஸ் செய்து வேவ்பார்ம் ஆடியோ ஃபைலாகக் கம்ப்யூட்டரில் போட்டேன்" என்று கம்ப்யூட்டரில் கரை கண்ட யாராவது அலட்டிக் கொண்டால் அசர வேண்டாம். மேலே சொன்னதைப் பரிபாஷையில் சொல்கிறார்கள். அம்புட்டுத்தான். நீங்கள் வேண்டுமானால் பதிலுக்கு 'ஏன்? மிடி இல்லையா?' என்று வாயைப் பிடுங்கலாம்.

இந்த மிடி 'பொம்பளைங்க சமாச்சாரம்' இல்லை. 'மியூசிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட் டிஜிடல் இன்டர்பேஸ்' என்ற ஆங்கிலத் தொடரின் நான்கு எழுத்து இணைந்து மிடி (MIDI) யானது. எந்த வாத்தியக் கருவியையும் உபயோகப்படுத்தாமல் கம்ப்யூட்டரே பண்ணுகிற இசை. செய்விக்க நீங்கள் இளையராஜாவாக இருக்க வேண்டியதில்லை. கம்ப்யூட்டர் அறிந்தால் போதும். அடுக்கு ஆணைத் தொடர் மென்பொருள் என்ற சீக்வென்சிஸ் சாப்ட்வேரும், மிடி கண்ட்ரோலர் என்ற யமஹா கீபோர்ட் போன்ற உபகரணமும் தேவை. 'வேவ்டேபிள் கார்ட்' என்ற சமாசாரமும்.

மிடியால் என்ன பயன்?

உங்கள் குரலை கம்ப்யூட்டரில் பதிவு செய்து, அந்த ஒலித்

டைப் ரைட்டருக்கு டாட்டா!

கம்ப்யூட்டர் தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களில் ஒன்று வேல் கம்ப்யூட்டர்ஸ். இதன் இயக்குநர் தர்மரிடம் மல்டி மீடியாவின் எதிர்காலம் பற்றிக் கேட்டோம்.

"உலகில் இனி மல்டி மீடியா சிஸ்டம் புகாத துறையே இல்லை எனும் காலம் வரப் போகிறது" என்கிறார் அவர்.

ஆடியோ, வீடியோ, அமைப்புகளின் நுட்பமான [illegible] இதில் சாத்தியமாவதால் திரை இசை, விளம்பரப் படங்கள், பெரிய நிறுவனங்களின் கணக்கு வழக்கு என்று எத்துறைக்கும் மல்டி மீடியா பொருந்துகிறது.

சமீபத்தில் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சென்னை வந்திருந்த போது - காஞ்சிப் பெரியவர் பற்றி ஒரு டாக்குமெண்ட்ரி, மல்டி மீடியாவில் தயாரித்து அவரிடம் போட்டுக் காட்டி அசத்தியிருக்கிறது 'வேல்'.

இவர்களின் அடுத்தக் கட்ட நடவடிக்கை, டைப் அடிக்காமல் - பேசுவதையே (ஒலிவடிவை) கம்போஸ் (வரி வடிவம்) பண்ணிக் கொள்ளக் கூடிய டெக்னாலஜியை கம்ப்யூட்டரில் சாத்தியமாக்குவது.

"ஓரிரு வருடங்களில் சாத்தியமாகிவிடும்!" என்று நம்பிக்கையோடு சொல்கிறார் தர்மர்.

துணுக்குகளை வைத்துக் கொண்டு, நீங்கள் பேசாததையெல்லாம் பேசியதாக (நிறைய மெனக்கெட்டு) பதிவு செய்ய முடியும்.

எஸ்.பி. பாலசுப்ரமணியம் வராமலேயே, எஸ்.பி.பி. குரலில் பாட்டு ரிகார்ட் செய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் - தப்பு சார், வேணாம்... நீங்கள் இ.பி. இரண்டாயிரத்து ஒண்ணு காலண்டர் மாட்ட ஆணியடிக்கிற போது பிரகாசமாகும்.

ஒலியைக் கூட அமுக்கிப் பிடித்துக் கம்ப்யூட்டரில் போட்டுவிடலாம். படம் தான் பிரச்னை. நிறைய இடத்தை அடைக்கும். கம்ப்யூட்டரில் சினிமா மாதிரி படம் வர வேண்டும் என்றால் கேட்கவே வேண்டாம். 'ஹரிதாஸ்' படத்தை டிஜிடைஸ் செய்து முப்பத்தாறு ரீலையும் கம்ப்யூட்டரில் பிரேம் பிரேமாக அப்படியே சேகரித்து வைக்கச் சொன்னால், சிடிராம் வாங்கி மாளாது. வரிசைப் படியாக அடுக்கி, செகண்டுக்கு முப்பது பிரேமாக நகர்த்திக் காட்டப் பின்னும் கஷ்டம், பெருங் கஷ்டம்.

இத்தகு இன்னலைத் தவிர்க்கச் செய்ய வேண்டியது யாதெனில், ஒவ்வொரு பிரேமையும் கம்ப்யூட்டர் சங்கேதமாக மாற்றி, நான்றாகக் குறுக்கி அப்புறம் சேகரித்து வைக்க வேண்டியது.

"அனலாக் வீடியோவை டிஜிடல் வீடியோ இன்டர்பேஸ் மூலம் ஒரு சதவிகிதமாகக் கம்ப்ரஸ் செய்து எப்எல்ஐ ஃபைலாக்கி மல்ட்டி மீடியா செய்ததாக' யாராவது உதார் விட்டால்.... விஷயம் மேலே கூறப்பட்டதுதான்.

'ஹரிதாஸை'யும் 'காதலனை'யும் டிஜிடைஸ் செய்து, சமவிகிதத்தில் பிரேம்களைக் கலந்து சாமர்த்தியமாக அனிமேஷன் செய்து, பாகவதர் பாட பிரபுதேவா ஆட ஒரு படம் தயாரித்தால்.... வேண்டாம். அடிக்க வருவார்கள்.

அந்தக் கதையெல்லாம் இருக்கட்டும். இப்போதைக்கு மல்ட்டி மீடியாவில் என்ன எல்லாம் இருக்கிறது என்று பார்க்கலாமா?

குழந்தைகள் விளையாட 'அமந்தா கதைகள்' என்ற மல்ட்டி மீடியா சாப்ட்-வேர். ஒரு ஒட்டகமும், பூனையும் முக்கியக் கதா பாத்திரங்களான இந்த வீரசாகசக் கதைகளின் விசேஷம், ஒவ்வொரு தடவை விளையாடும் பொழுதும் ஒரு மாறுபட்ட கதையை உருவாக்கிக் கொள்ளலாம். வேறு வேறு லொகேஷன், வேறுவேறு சம்பவக் கோர்வை... இந்த மாதிரி ஒரு சாப்ட்வேர் செய்து வைத்துக் கொண்டால், அதிக சிரமப்படாமல் நூறு தமிழ் சினிமா தயாரிக்கலாம் (மிடி மூலமாக இசையமைத்து).

'வாழும் புத்தகங்கள்' (Living Books) என்று இன்னொரு மல்ட்டி மீடியா. அழகாக விரிகிற கதைகள். 'நானும் பாட்டியும் மட்டும்' என்று பத்து வயசுப் பையனின் பார்வையில் நகர்கிற கதை. கம்ப்யூட்டரில் படித்துக் கொண்டு, படம் பார்த்துக் கொண்டு போகலாம். உரையாடல் வருகிற பொழுது வசனம் ஒலிக்கும். பின்னணியில் இசையும், மற்ற சத்தங்களும் கேட்கும். விலை அதிகமில்லை. ஐம்பது டாலர்தான்... தமிழில் நல்ல நாவல்களைப் பட்டியல் போட்டு இந்த மாதிரி யாராவது செய்யலாம். விமர்சகர்களுக்கு இடையே சண்டை வந்தால், கம்ப்யூட்டரே பட்டியல் தயாரிக்க வைக்கலாம்.

மேற்கத்திய இசை கிலோ என்ன விலை என்று கேட்கிறவர்களுக்காக, 'பீதோவனின்

ஒன்பதாவது சிம்பனி' என்ற நேர்த்தியான மல்ட்டி மீடியா. கம்ப்யூட்டரில், வியன்னா இசைக்குழு பீதோவனை இசைக்க இசைக்க, நம் விருப்பப்படி சிம்பனியின் எந்தப் பகுதிக்கும் சென்று, ஒரு வாத்தியத்தையோ, இசைத் துணுக்கையோ உன்னிப்பாகக் கேட்கலாம். அந்த இசைக் கருவியின் விசேஷம், அங்கே பயன்படுத்தப்பட்ட முறை பற்றி எல்லாம் ஒரு இசை வல்லுனரின் குரல் விளக்கமும் கேட்கும். பீதோவன் பற்றி, அவர் வாழ்ந்த காலம் பற்றி எல்லாம், இசையைக் கேட்டுக் கொண்டே கம்ப்யூட்டர்திரையில் படிக்கலாம்.

கர்நாடக சங்கீதத்தில் விஷய ஞானம் வேண்டப்பட்டவர்களுக்கு, இதுபோல ஒன்று செய்தால்.... பாட்டோடு சேர்த்து, 'சாரங்காவுக்கு ஏன் ஸ்வாமி பைஜாமா மாட்டி ஹமீர்கல்யாணியாக்கினீர்' என்று கப்புடு விமர்சனத்தோடு....

மொழி கற்றுக் கொடுக்க சவுகரியமான சாப்ட்வேர் மல்ட்டி மீடியாவில் வந்திருக்கிறது. 'முப்பது நாளில் ஸ்பானிஷ் பாஷை கற்றுக் கொள்ளுங்கள்.' ஸ்பெயின்காரர் குரலில் ஒவ்வொரு வாக்கியத்தையும் திரும்பத் திரும்பக் கேட்டு நீங்கள் முப்பத்தொண்ணாம் நாள் ஸ்பெயின் போய் ஓட்டலில் 'சூடா என்ன இருக்கு' என்று ஸ்பானிஷில் விசாரித்து, விலையைக் கேட்டு, மேற்படி பாஷையிலேயே மயக்கம் போட்டு விழலாம்.

தெரியாத வார்த்தைக்கு சத்தமாக அர்த்தம் சொல்லி, படத்தையும் காட்ட மல்டி மீடியா அகராதி இருக்கிறது. இதுபோல, தெரியாத விஷயத்துக்கு விலாவரியாக விளக்கம் சொல்லி பிலிம் காட்ட மல்ட்டி மீடியா என்சைக்ளோபீடியா.

பஞ்சபாண்டவர் எத்தனை பேர் என்று கேட்டால், கட்டில் கால் போல மூணு பேர் என்று வார்த்தையில் சொல்லி, இரண்டு விரலைக் கம்ப்யூட்டர் நிச்சயம் காட்டாது.

மல்டி மீடியாவின் எதிர் காலம் என்ன?

கம்ப்யூட்டரும் டெலிவிஷனும் கைகுலுக்குகிற எச்டிடிவி (HDTV) என்ற ஹை டெபனிஷன் டீ.வி.

இப்போது பரவலாக இருக்கப்பட்ட 'முப்பத்திரெண்டு பிட்' கம்ப்யூட்டர்கள் கூடிய சீக்கிரம் ரிடையராகி, 'அறுபத்து நாலு பிட்' கம்ப்யூட்டர்கள் வரும்போது, உலகத்தில் இதுவரை வெளியான சகல திரைப் படங்களையும் பதிவு செய்து ஒரே ஒரு கம்ப்யூட்டர் மூலம், கேபிள் டீ.வி., தொலைபேசி இணைப்பு வழியாக உங்கள் வீட்டு டெலிவிஷனில் காட்டலாம். உங்களுக்கு வசதியான நேரத்தில் உங்களுக்காக மட்டும் 'கணவனே கண்கண்ட தெய்வம்' ஆரம்பிக்க வைக்கலாம். நேற்றைக்கு விட்ட இடத்திலிருந்து 'வீரா' பார்க்கலாம். உங்களுக்கு மட்டுமில்லை. கேபிள் டீ.வி. இணைப்பு வைத்திருக்கிற லட்சக் கணக்கானவர்களுக்கும் இதே போல, விருப்பப்பட்ட படத்தை, விருப்பப்பட்ட இடத்திலிருந்து பார்க்க வசதி....

ஈமெயில் என்ற எலக்ட்ரானிக் மெயிலில், 'அன்புள்ள ஐயா... போன வாரம் நீங்க வாங்கிய ஒரு கிலோ கத்தரிக்காய்க்கான விலை ரூபாய் ஆயிரத்து மூன்னூறை எப்ப அனுப்பறீங்க?'' என்று குரலில் ஏற்ற இறக்கத்தோடு சொல்கிற கடிதம் அனுப்பலாம்.

முப்பரிமாணத் தோற்றங்களோடு மாயா லோகம் சிருஷ்டிக்கும் 'வெர்ச்சுவல் ரியலிட்டி' என்ற பொய்மெய்யும் மல்ட்டி மீடியாவும் கலக்கிற நாள் தொலைவில் இல்லை. அப்போது இன்னும் என்னென்ன ஜகஜ்ஜாலங்களோ!

— இரா. முருகன்.

அட்டையில்: **மல்டி மீடியா சிஸ்டத்துடன் சௌம்யா.**


சிஸ்டம் உதவி: **வேல் கம்ப்யூட்டர்ஸ்.**

வண்ணப்படம்: **யோகா**

"உன்னோட முதல் பையனை கொல்லையிலயும், இரண்டாவது பையனை வாசல்லயும் எதுக்கு படுக்க வெச்சிருக்கீங்க?"

"ஒரு குழந்தைக்கும், இன்னொரு குழந்தைக்கும் இடைவெளி விடணுங்கறதை என் கணவர் தப்பா புரிஞ்சுக்கிட்டார்!"

— கொங்கணாபுரம் வே. செந்தில்



தேசம் கிடக்கிறது தேசம்!

பன்னீர்ஜி

தேசம் கிடக்கிறது தேசம்!

வர்த்தகமானால் பதுக்கு
முதலாளி எனில் சுரண்டு.
அரசுப் பதவியானால்
வாங்கி வாங்கி 'ஸ்வாஹா'.
போதாதெனில்
வேலை நிறுத்தம் செய்.
உபதொழில் வைத்துக் கொள்.
அவசரமானால்
அரசியலை மேற்கொள்
கல்விக்கடை திற
கள்ளச் சாராயம் காய்ச்சு.

தான தர்மங்களைத்
தனி அறையில் செய்யாதே.
ஆயிரம் ரூபாய் நன்கொடைக்கு
ஆறாயிரம் ரூபாயிலேனும்
விளம்பரம் செய்.

ஏழை கிடக்கிறான் ஏழை!

புறம்போக்கு நிலங்களையும்
பொதுச் சொத்தையும் அபகரி.
பாதாள அறை வைத்து
பங்களாக்கள் கட்டு.
கழிப்பறையில் கூட
கலைநுணுக்கம் செய்.
படிப்பறையை மட்டும்
கட்டவே கட்டாதே!
பூச்செடி வைக்கக் கூட
இடம் விடாதே.

மாலை நேரங்கள்
மகிழ்ச்சிக்கு உரியவை.
புடைசூழப்போ
மேடைகளைக் கவர்ந்துகொள்.
மாலைகளுக்கு
முன்கூட்டியே பணம் செலுத்திவிடு.
கைதட்டல்களுக்கு
ஏற்பாடு செய்துகொள்!

ஒருமைப்பாடு முதல்
உலக இலக்கியங்கள்வரை பேச
கூலிக்கு எழுதி வாங்கி
காற்புள்ளி அரைப்புள்ளி தவறாமல்
ஒப்புவி!
அதற்குமுன்
அழைப்பிதழில் உள்ள நாமங்களை
'அவர்களே!' போடக் கற்றுக்கொள்...
பிறகென்ன?
காத்திருக்கின்றன பல்கலைக் கழகங்கள்...
வாழ்த்துக்கள்!



Kalki Shopping Page

TO KNOW THE MEANING OF DEMOCRACY DONT SEARCH FOR IT IN THE LIBRARY. TRAVEL IN A BUS.

"ஜனநாயகம் என்றால் என்னவென்று புரிந்து கொள்ள நூலகத்தில் உட்கார்ந்து கொண்டு அர்த்தம் தேடாதே... ஜனங்களுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்" என்று ஒரு அறிஞன் சொன்னான்.

அதுவே தான் சினிமாவும். சினிமாவைப் புரிந்து கொள்ள நூலகத்தில் உட்கார்ந்து கொண்டு புத்தகங்களைப் படிப்பது பயன் தராது. காமிராவை எடுத்துக் கொண்டு வெளியே போக வேண்டும். David Lean என்கிற அந்த திரைப்பட மேதை தனது 83வது வயதிலும் படம் எடுத்துக் கொண்டிருந்தார். "இப்பொழுதுதான் சினிமாவை சரியாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறேன்" என்று 83வது வயதிலே அவர் சொன்னார்.

நல்ல திரைப்படப் படைப்பாளிகளுக்கு வயது என்பது ஒரு பொருட்டே அல்ல! 'ஓய்வு பெறுவது' என்பது அவர்களது அகராதியில் இல்லை. அப்படிப்பட்ட கலைஞர்கள் காலமாகும் போது தான் காலம் அவர்களுக்கு ஓய்வைக் கொடுக்கிறது. David Lean, சத்தியஜித்ராய், ராஜ்கபூர், Alfred Hitch cock இவர்களுடைய வாழ்க்கை வரலாறு இதைத்தான் நிரூபிக்கிறது.

33

"ஒரு திரைப்பட இயக்குநர் எப்பொழுது Retire ஆகவேண்டும்?" என்று Alfred Hitch cock அவர்களிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்ட போது, "At the 12th reel" என்று அவர் பதில் சொன்னார்.

சாதாரணமாக ஒவ்வொரு ஆங்கில திரைப்படமும் முடிகிற கட்டம் 12வது ரீலில் என்னும்போது, வாழ்க்கையையும் ஒரு சினிமாவாகக் கண்டு, கடைசிவரை ஓய்வு கிடையாது என்று உணர்த்திய ஹிட்ச்காக்கின் நகைச்சுவை உணர்வை நினைத்து நினைத்துச் சிரிக்கிறேன்.

"உங்களுக்கு வயதாகி விட்டதே! கதாநாயகனாக நடிப்பதை நிறுத்திக் கொண்டு குணசித்திர வேடங்களை ஏற்று ஏன் நீங்கள் நடிக்கக் கூடாது" என்று Stewart Granger என்கிற பழம்பெரும் ஹாலிவுட் நடிகரிடம் கேட்ட போது அவர் சொன்ன பதில்:

"குணசித்திர வேடம் ஏற்கிற வயதுப் பக்குவம் எனக்கு இன்னும் வரவில்லை; ஆகவே தான் கதாநாயகனாகவே நடிக்கிறேன். ஆனால் வயதான கதா நாயகனாக!"

எம்.ஜி.ஆர். கூட நடித்துக் கொண்டிருந்த வரையில் கதாநாயகன் தானே!

ஆம்! சில நடிக, நடிகையருக்கு வயது எந்த மாற்றமும் கொடுப்பதில்லை.

மனோரமா, நம்பியார், வி.கே.ஆர். போன்ற கலைஞர்கள் இதில் அடக்கம். அதிலும் வி.கே.ராமசாமி அவர்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவரது இளம் வயதிலேயே வயதான வேடத்தில் திரையில் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக 'தந்தை' கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கும் அவர், இன்றைக்கும் ஒரு 'இளமையான தந்தை'.

எனது நினைவலைகளை ஓட விடும் போது எனது 'நூற்றுக்கு நூறு' திரைப்படத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்ரீவித்யா என் சிந்தனையில் வந்து போகிறார்.

'மஞ்சு'!

பணக்காரச் சூழலில் வளர்ந்த கல்லூரி மாணவி. பெற்ற தாயிடமிருந்தே நாகரீகம் கற்றுக் கொள்கிறாள். தாய் உடை உடுத்திக் கொண்டு சென்ற பிறகு தானும் அதே போல் தொப்புளுக்குக் கீழே புடைவையை இழுத்துக்



நினைவலைகள்

கொண்டு தன் அழகைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறாள். தந்தை தனது டைப்பிஸ்டிடம் காதல் லீலைகள் புரிகிறார். அதையும் கதவிடுக்கின் வழியாகப் பார்க்கிறாள். பணக்கார நாகரீகம் அவளைப் பற்றிக் கொள்கிறது.

கல்லூரியில் தனது கணிதப் பேராசிரியர் மீதே ஒரு காதல் வெறியை வளர்த்துக் கொள்கிறாள். தன்னை அவர் காதலிக்க மறுப்பதைத் தெரிந்து கொண்டவுடன் அந்தப் பேராசிரியர் மீது மிகப் பெரிய பழியைச் சுமத்துகிறாள்–

இவள்தான் மஞ்சு!

இது சாதாரண 'வில்லி' கதாபாத்திரமல்ல. 16,17 வயது கூட நிரம்பாத ஒரு பெண் சிறுபிள்ளைத் தனமாகச் செய்து விடுகின்ற மிகப்பெரிய வில்லித்தனம்.

இதற்குப் பொருத்தமான ஒரு புதுமுக நடிகையை தேடித்தேடி அலுத்துப் போன கட்டத்தில்தான் திருமதி எம்.எல். வசந்தகுமாரி அவர்களின் மகள் ஸ்ரீவித்யா அவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டேன். வாணிமகாலில் அன்று ஸ்ரீவித்யாவின் நடன நிகழ்ச்சி. நிகழ்ச்சி முடிந்தவுடன் அவரை Green Room சென்று சந்தித்தேன்.

'பளிச் பளிச்' சென்று முத்திரைகளை உதிர்க்கும் அகலமான கண்கள். நம்மை ஊடுருவிச் செல்லும் ஆழமான, தீட்சண்யமான பார்வை. Xray eyes.

இந்தக் கண்களை வைத்துக் கொண்டு காமிராவினால் நன்றாக விளையாடி விட முடியும் என்கிற நம்பிக்கை first imprssion. ஏறத்தாழ 22 வயதைத் தாண்டிய உருவ அமைப்பு; 12 வயதைத் தாண்டாத முகம். இந்தக் கலவை தான் அன்றைய ஸ்ரீவித்யா.

பொதுவாகவே கலையென்பது கொஞ்சமாவது ரத்தத்திலே ஊறிப் போயிருக்க வேண்டும். ஒரு சங்கீத மேதையின் மகள் நடனக் கலையில் தேர்ச்சி பெறுகிறார். அவள் நடிப்புக்கலையிலும் ஏன் தேர்ச்சி பெற மாட்டார்?

ஸ்ரீவித்யா 'மஞ்சு'வாக மாறினார்.

'நூற்றுக்கு நூறு' வெளி வந்தவுடன் ரசிகப் பெருமக்கள் 'அடையாளம் கண்டு கொண்டது இரண்டு விஷயங்கள். ஜெய்சங்கர் அவர்களுக்கு அதுவரை கிட்டாத ஒரு கதாபாத்திரமும் அவரது நடிப்புப் புலமையும்; ஸ்ரீவித்யா நடித்த கதாபாத்திரத்தின் Dynamism; அதை அவர் கையாண்ட லாகவம்.

''அவருடைய உடல்வாகு காரணமாகவோ என்னவோ ஸ்ரீவித்யாவைக் கதாநாயகியாக்கப் பார்த்திருக்கிறார்கள்'' என்று ஏதோ குற்றம் சாட்டுவதைப் போல் ஒரு பத்திரிகை விமர்சனம் செய்திருந்தது கூட இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. ஆனால் அதே பத்திரிகைதான் பின்னால் வந்த ஸ்ரீவித்யாவின் 'சொல்லத்தான் நினைக்கிறேன்' நடிப்பைப் பற்றி எழுதும் போது வானளாவப் புகழ்ந்து எழுதியிருந்தது.

மீண்டும் அதே பத்திரிகை 'அபூர்வ ராகங்கள்' படம் வெளிவந்து அதில் பைரவியாக நடித்த ஸ்ரீவித்யாவின் நடிப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது ''ஸ்ரீவித்யாவின் கண்களை வைத்துக் கொண்டு பெரிய 'செட்' போட்டிருக்கிறார் பாலசந்தர்'' என்று விமர்சனம் எழுதியிருந்தது.

ஆகவே ஒரு விமர்சகரின் கண்ணோட்டத்தை விட ஒரு படைப்பாளியின் கண்ணோட்டம் சரியாகவே இருந்திருக்கிறது.

BACK TO MANJU:

மஞ்சுவின் பாத்திரத்தில் எத்தனை விதமான உணர்ச்சிப் பிரவாகங்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்கிற உண்மை எனக்குத் தான் தெரியும். அதிலேயும் அந்தக் கதாபாத்திரம், கதாநாயகன் மீது பொய்யாக பழி சுமத்தும் ஒரு unsympathetic குணசித்திரம். அப்படிப்பட்ட குணசித்திரத்தில் முதன் முதலாக நடித்து வெற்றிகரமாகப் பெயரெடுப்பதென்பது சாதாரண விஷயமல்ல. இது ஸ்ரீவித்யாவுக்கு மட்டு மல்ல; எனக்கும் ஒரு சவாலாகவே அமைந்தது.

"To an actor or actress the camera is the eye of the public"என்று Robert Bresson சொன்னார்.

கே.பாலசந்தர்

அதே படத்தில் அப்பொழுது கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்த லட்சுமி அவர்கள் கூட "இந்த மஞ்சு Role ஐ நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கலாம். It is a beautiful role; I would love to do it" என்று என்னிடம் சொன்னபோது "என்னதான் சொன்னாலும் இந்தக் கதையில் அது கதாநாயகி பாத்திரமில்லையே" என்று நான் பதில் சொன்னேன்.

"எப்பொழுது வேண்டுமானாலும் கதாநாயகியாக நடித்து விடலாம். இப்படிப்பட்ட மாறுபட்ட negative குணசித்திரங்களில் நடிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே" என்று லட்சுமி சொன்னார். இப்படிப்பட்ட உண்மைக் கலைஞன் attitude தான் லட்சுமி அவர்களுக்கு 'ஊர்வசி' பட்டத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது.

நடிகைகளில் பலவகை. சொன்னதை அப்படியே செய்து விட்டுப் போய் விடுவார்கள் சிலர். சிலரிடம் முட்டிக் கொள்ள வேண்டும். 'எடுக்கப் போகின்ற காட்சிகளைப் பாதியாகச் சுருக்கி விடலாம்; வந்த வரைக்கும் போதும்' என்று நினைக்கச் செய்பவர்கள் சிலர்.

இன்னும் சிலர், சின்னதாக எடுக்க வேண்டுமென்று நினைத்த காட்சியை நன்றாக விரிவு படுத்தி, அந்தக் காட்சியிலே நடிகையின் முழுத்திறனையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைக்க வைத்து நமக்கு Inspirationஆக அமைவார்கள்.

இந்த மூன்றாவது வகைதான் ஸ்ரீவித்யா. சில நேரங்களில் ஒரு பாரா நிறைய எழுதியிருக்கின்ற வசனங்களை ஒரே ஒரு வாக்கியமாகக் குறைத்து, மற்றவைகளைப் பார்வையின் மூலம், சின்னப் புன்னகையின் மூலம் தெரியப் படுத்துகின்ற மாதிரி மாற்றி அமைக்கும் அனுபவங்கள் கூட ஸ்ரீவித்யாவுடன் எனக்கு நேர்ந்திருக்கின்றன.

இப்பொழுது நினைத்துப் பாருங்கள்: 'சொல்லத்தான் நினைக்கிறேன்' படத்தில் தனது காதலை அதுவரை புரிந்து கொண்டிராத சிவகுமாரிடம் "நீங்க ஒரு Gentleman sir" என்று அகண்ட கண்களில் கண்ணீருடனும், உதடுகளில் இழையோடும் புன்னகையுடனும் சொல்கின்ற அந்த 'ஷாட்'! நான் எத்தனை முறை பார்த்தாலும் அந்த ஷாட் எனது கண்களை ஈரமாக்கி விடும்.

என்னுடன் ஸ்ரீவித்யா பணிபுரிந்த படங்கள் ஐந்து. இந்தப் படங்கள் அனைத்தும்– அவருக்கு அனுபவங்களோ என்னவோ– என்னை இயங்க வைத்து, "கண்களை வைத்துக் கொண்டே பெரிய பெரிய 'செட்'டுகள்" போட வைத்த அனுபவப் பாடங்கள்.

"Men learn while they teach" — Seneca.

ஒரு திரைப் படத்தை எப்படியெல்லாம் இயக்குவது என்று திரைப்படங்கள் உருவாக்கும் போதே நானும் கற்றுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு ஒரு பரிசளிப்பு விழா மேடையில் நான் அவரை சந்தித்தேன். அவரும் பரிசு வாங்கினார்; நானும் பரிசு வாங்கினேன். Film Fare பரிசளிப்பு விழா. மேடையில் அமர்ந்திருந்த என்பக்கம் வந்து ரகசியமாகச் சொன்னார்:

"என் பேரு ஸ்ரீவித்யா. நான் நல்லா வசனம் பேசுவேன்; நல்லா நடிப்பேன்" என்று தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார்!

அந்த 70mm கண்களில் சின்ன mischief. 'நீண்ட காலமாக நீங்கள் இயக்கும் படங்களிலே என்னை ஏன் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை?' என்று கேட்பது போல் தொனித்தது அவரது இந்த அறிமுகம்.

நானும் என்னைப் பார்க்க வரும் புதுமுக நடிகையிடம் கூறுவது போலவே, "உன் போட்டோ ஒன்று அனுப்பிவை! உனக்குத் தகுந்தமாதிரி ஏதாவது வேஷம் வரும்போது நான் நினைவில் வைத்துக் கொள்கிறேன்" என்று குறும்பாகவே பதில் சொன்னேன்.


"ஒவ்வொரு வருஷமும் ஏதாவது நல்ல படமா எடுத்துட்டு ஏதாவது ஒரு award வாங்கிடறீங்களே; மத்தவங்களுக்கும் ஒரு chance குடுங்க ஸார்" என்று சொல்லிவிட்டு என் பதிலுக்குக் காத்திராமலே மேடையில் தனக்கென்று ரிசர்வ் பண்ணப்பட்டிருந்த இருக்கையில் போய் அமர்ந்து கொண்டார்.

அப்பொழுது நான் சொல்ல நினைத்ததை இப்பொழுது சொல்கிறேன்:

THE SHOE MAKER MAKES A GOOD SHOE BECAUSE HE MAKES NOTHING ELSE.

— EMERSON

(தொடரும்)


ஏலக்காய் எப்பவும் தேவையா? இல்லை. எப்பனா தேவை.
நான் கூட இவருக்கு அப்படித்தான். உன்னைய ஒஹோன்னு வச்சுக்கரேன்னு இங்க மலைல கொண்டாந்து வச்சாரு. சுத்தி நாப்பது ஏக்கர் ஏலக்கா தோட்டம். நடுவுல கல்லு வூடு. ஆறு எருமை, இரண்டு பசு, ஒரு நாய், நானு. நான் இருக்கேனா செத்தேனான்னு கூட உலகத்துக்குத் தெரியாது.
அவரு செத்ததும் வெளிய வந்துட்டேன். நாப்பது ஏக்கர் நிலம்; நாப்பத்தி மூணு வயசுப் பொம்பளை. வுடுமா உலகம்? அதான், உக்கிர பகவதி ஆஸ்ரமம்னு பேரு எழுதி, காவி கட்டிக்கிட்டேன்...
9.4.95
தமிழ்ப் புத்தாண்டு சிறப்பிதழில்
பாலகுமாரன் எழுதும்
என்னுயிரும் நீயல்லவோ
ஏலம் மணக்கும்
காதல் தொடர் ஆரம்பம்!

உள்ளும்

"என்னடி கலா... என்னவோ பர்ஸனலா பேசணும்னு கோவிலுக்குக் கூட்டிட்டு வந்துட்டு, இப்ப பேச எதுவுமே இல்லாத மாதிரி உம்முன்னு இருந்தா என்ன அர்த்தம்?" ஜெயந்தி கேட்டாள்.

"ஜெயந்தி... எனக்காக ஒரு ஹெல்ப் பண்ணணும்... நீங்க..."

"வந்து உட்கார்ந்து அரை மணி நேரமாச்சு. அம்பது தடவை இதையே சொல்லிட்டே... என்ன ஹெல்ப்புன்னு சொன்னாத்தானே செய்ய முடியும்?"

கலா சிரித்தாள். தயங்கினாள்.

"எவனையும் லவ் பண்ணித் தொலைக்கிறியா?"

"ஆமாக்கா... எப்படி கண்டுபிடிச்சீங்க?"

"ம். அது பெரிய சீக்ரெட் பாரு. நீ இத்தனை தடவை வார்த்தைகளை முழுங்கறப்பவே நினைச்சேன். ஏதோ தப்பு இருக்குன்னு."

யோகி

"லவ் தப்பா?"

"தப்பு இல்லே. தப்பானவன் மேல் லவ் வந்துட்டா தப்புத்தான்."

"அவர் தப்பானவர் இல்ல. நல்லவர். உங்களுக்கு கூடத் தெரியும்."

"யாரு அது—"

திரும்ப கலா தயங்கினாள். "நா ஒண்ணும் உன் ஆளைத் தட்டிக்கிட்டுப் போயிட மாட்டேன். சரி.. அவர் உன்னை விரும்பறாரா?"

"விரும்பற மாதிரிதான் தெரியறது. ஆனா இன்னும் அவர் அதை வெளிப்படுத்தல."

"யாருடி அந்தப் பரிதாப மனுஷன்?"

கலா முறைத்தாள்.

"நம்ம ஆபீஸ்க்கு ஸ்க்ரீன் ப்ரிண்டிங் பண்ணுவாரே... ராமு... அவர்தான்."

"ராமு... ஓகே... உன் அழகுக்கு, உன் படிப்புக்கு சரியான ஜோடிதான். நா எந்த வகையில் உனக்கு ஹெல்ப் பண்ண முடியும்னு நினைக்கிறே?"

"அதான் எனக்கும் தெரியலே."

"சரியாப் போச்சு... இதுக்குத்தானா இத்தனை அறுஅறுத்தே."

"ப்ளீஸ் ஒரு வழி சொல்லுங்க."

கலாவும் ஜெயந்தியும் ஒரே அலுவலகத்தில்தான் பணிபுரிகின்றனர். நெருங்கின சினேகிதிகள். கலாவுக்கு பின்னால் கலாவின் நிழல் இருக்கிறதோ இல்லையோ ஜெயந்தி இருப்பாள். ஜெயந்திக்குப் பின்னால் அவளின் நிழல் இருக்கிறதோ இல்லையோ கலா இருப்பாள். ஆபீஸில் கூட கேலியாய்க் கேட்டார்கள். 'எங்கே உங்க நிழலை காணோம்?' என்று.

அத்தனை நெருக்கம். இரவு தூங்கும் நேரம் தவிர்த்து இருவரையும் சேர்ந்து இருக்கப் பார்க்கலாம். இருவருக்குமே இன்னும் திருமணம் முடியவில்லை.

புறமும்

ஜெயந்திக்கு வயசு சற்று அதிகம்தான். இருபத்தி ஏழு. ஆனாலும் இன்னும் ஓர் இடமும் அமையவில்லை.

"ஜெயந்திக்கா... நீங்கதான் ஒரு வழி சொல்லணும். என்னை விட நீங்கதான் அவர்கிட்டே நல்லாப் பேசறீங்க. எப்போதாவது பேசிட்டே இருக்கும் போது அவர் மனசில் நான் இருக்கேனான்னு பாருங்க. என் லவ்வையும் எடுத்துச் சொல்லுங்க."

"நீ என்கிட்ட உதைபடப் போறே. எனக்கு இதுதான் வேலையா? நீ லவ் பண்றதுக்காக அவர் யாரையும் லவ் பண்றாரான்னு துப்பறியச் சொல்றியா?"

"அக்கா.... உதவுங்க..."

"சரி... வாய்ப்புக் கிடைக்கும் போது பேசறேன்..."

இரண்டொரு நாளில் அந்த வாய்ப்பு கிடைத்தது. பஸ் ஸ்டாண்டில் ராமுவைப் பார்த்தாள் ஜெயந்தி. ராமு சோஷியல் டைப் என்று கூற முடியாது. ஜெயந்தியிடம் சற்று ப்ரீயாகப் பேசுவான். கலாவிடம் வழியப் பேசுவான். ஜெயந்தி அதைப் பார்த்து இருக்கிறாள். ராமுவின் அருகே சென்றாள். கலா தனக்கு இப்படி ஒரு வேலை வைப்பாள் என்று ஜெயந்தி எண்ணவில்லை.

ராமு கையில் ஒரு நாவல் வைத்து இருந்தான். காதலுக்காக உயிரைத் துறந்த ஒரு காதலனின் கதை. சரி பேச்சை ஆரம்பிக்கத் தோதாய் அமைந்து விட்டது - அந்தப் புத்தகம்.

"நாவலைக் கொடுங்க" ஜெயந்தி வாங்கினாள்.

"இது மாதிரி ஒருத்தருக்காக ஒருத்தர் உருகறதை எல்லாம் ஏற்றுக் கொள்ள முடியுதா ராமு?"

"ஏன்... ஏற்றுக் கொள்ள முடியாது... உண்மையான காதல் உயர்ந்தது மிஸ் ஜெயந்தி..." ஒருவித அனுபவித்தலுடன் பேசினான் ராமு.

"காதலைப் பற்றி உங்களுக்கு ஓர் உயர்ந்த எண்ணம் உண்டு போல் இருக்கு."

"ஆமா..." என்று ராமு சிரித்தான்.

"அப்போ யாரையாச்சும் லவ் பண்றீங்களா... ரொம்ப வெட்கமும் படறீங்க. அப்ப இருக்கும்."

அதற்கும் சிரித்தான். "ஆமா மிஸ் ஜெயந்தி... உங்ககிட்ட சொல்றதுக்கென்ன. நா ஒரு பெண்ணை லவ் பண்றேன். ஆனா அவங்க அதை எப்படி எடுத்துப்பாங்கன்னு தெரியலை... நீங்கதான் ஹெல்ப் பண்ணணும். உங்ககிட்ட நானே இதைப் பத்தி பேச எண்ணி இருந்தேன்."

"போச்சுடா" என்று சிரித்தாள் ஜெயந்தி.

"யாரு... அந்த எக்ஸ்?"

ராமு தயங்கினான். பிறகு, "உங்க ப்ரண்ட் கலாதான்" என்றான்.

"மேரேஜ் வரை போகும்தானே இந்தக் காதல். இல்ல, சும்மா ஜாலிக்கு இல்லையே?"

"சீ... அப்படியெல்லாம் கிடையாது..." என்று வேகமாக மறுத்தான். பிறகு, "கொஞ்சம் சொல்லுங்க" என்றான்.

"சரி என்றேன்."

மறுநாள் கலாவிடம் சொன்ன போது சந்தோஷக் கூச்சலிட்டாள். கட்டிக் கொண்டு முத்தமிட்டாள். இவர்களுக்கு போஸ்ட்மேன் போலவே தன்னை ஆக்கி விட்டார்களே என்று எண்ணிக் கொண்டாள். ராமு கவிதையாகக் கடிதம் எழுதிக் கொடுப்பான். கலாவுக்கு கவிதை வராது. "ப்ளீஸ்க்கா... நீங்க நல்லா எழுதுவீங்க. எழுதிக் கொடுங்க!" என்பாள்.

ஜெயந்தி அழகாக குண்டு குண்டான கையெழுத்தில் கவிதை எழுதிக் கொடுத்தாள். சற்றே அவள் விழியில் ஈரம் கசிந்தது.

கலாவின் வீட்டிற்குக் காதல் தெரிய வந்தது. நல்லவேளையாக எதிர்க்கவில்லை. ராமு பண்புள்ளவனாக இருந்ததால் கலா வீட்டில் ஏற்றுக் கொண்டார்கள். ராமு வீட்டிலும் இதைப் பெரிசு பண்ணவில்லை. "நல்லா இருந்தா சரிதான்!" என்றார்கள்.

கல்யாணம் நல்லபடியாய் முடிந்தது. கலாவுக்குத் தொடர்ந்து வேலைக்குச் செல்ல விருப்பமில்லை. வேலையை ராஜினாமா செய்தாள். ராமு அவளது விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை.

ஜெயந்திக்கு சற்று வருத்தம்தான். அவள் வேலையை ராஜினாமா செய்தது.

அன்று ரிஸிக்னேஷன் லெட்டர் கொடுக்க வந்தவள்தான். அதற்குப் பிறகு சந்திக்கவே இல்லை. ஜெயந்திக்கு கலாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. நேரம் கிடைக்கவில்லை. போன் பண்ணலாம் என்றால் கலாவின் அக்கம் பக்கத்து வீட்டு போன் நம்பர் தெரியாது.

கலாவாவது போன் பண்ணலாம். சரி.. இன்றாவது போய்ப் பார்க்க வேண்டும் என்று ஆபீஸ் முடிந்ததும் கலாவின் வீட்டிற்குச் சென்றாள். வீட்டில் கலா இல்லை. ராமு மட்டும்தான் இருந்தான்.

"வாங்க... வாங்க" என்றான்.

"கலா எங்கே?"

"அவ அம்மா வீட்டுக்குப் போய் இருக்கா. வந்துடுவா. இருங்க" என்றான்.

“ உங்க கிட்ட சொல்றதுக் கென்ன. நா ஒரு பெண்ணை லவ் பண்றேன். ”



“அப்புறம் பார்க்கவே முடியலை. உங்களை மறக்க முடியாது. ரொம்ப உதவியா இருந்திங்க...” என்று காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.

பத்து நிமிஷம் பார்த்தாள். பிறகு கிளம்பினாள். “நா அப்புறமா வர்றேன்.”

“இருந்து பார்த்துட்டுப் போங்க.”

“இல்ல... வர்றேன். கோவிலுக்குப் போறேன். போயிட்டு திரும்பும் போது வர்றேன்” என்று கிளம்பினாள்.

பக்கத்தில்தான் அம்மன் கோவில். பன்னிரெண்டு வாரம் வெள்ளிக்கிழமை விளக் கேற்றினால் ஏதாவது வரன் அமையும் என்று அம்மாவுக்கு யாரோ சொல்ல அம்மா தன்னிடம் போகும்படி கூற நம்பிக்கை இல்லாவிட்டாலும் அம்மாவிற்காக இந்தக் கடமை.

சாமி கும்பிட்டு விட்டு கலாவின் வீட்டைத் தொட்ட போது, தன்னைப் பற்றிப் பேச்சு அடிபடவே ஜெயந்தி வாசலிலேயே நின்றாள்.

“யாரு ஜெயந்தி வந்தாளா... காப்பி போட்டு கொடுத்திங்களா... உங்களுக்கு எதுக்கு அந்த வேலை... வந்தா நா இல்லேன்னா அனுப்பி விட வேண்டியதுதானே. அவகிட்ட ஜாக்கிரதையா பேசுங்க. ஆம்பளைங்களைப் பார்த்த வழிவா. அவளுக்கு ஒரு கழுதை வயசாகியும் ஏன் கல்யாணம் ஆகலைன்னு நினைக்கிறீங்க. அவ கேரக்டரை பார்த்துட்டா எவரும் ஒப்புக்க மாட்டாங்க. நா இல்லாதப்ப அவ ஏன் வரணும்? ஏற்கெனவே உங்களைப் பார்த்தா ஈன்னு பல் இளிப்பா.”

“சும்மா இரு. அபத்தமாப் பேசாதே. கோவிலுக்கு வந்தாளாம்...”

“அவ வந்தா ஜாஸ்தி பேசாதிங்க. அப்புறம்...” என்றாள் கண்டிப்பாய்.

ஜெயந்தி சப்தம் போடாது மெல்ல நடந்தாள். அதற்குப் பிறகு அவள் கலாவை சந்திக்கவே இல்லை.

மணிக்கொடி

57

இரண்டாவது வட்டமேஜை மகாநாடு முடிந்து காந்தியடிகள் நாடு திரும்பினார். மகாநாட்டின் முடிவுகளும் விளைவுகளும் அவருக்கு திருப்தியளித்திருக்கவில்லை. டாக்டர் அம்பேத்கர் அரிசனங்களுக்குத் தனித் தொகுதி கேட்டதும், காந்தியடிகளின் மறுப்பு எடுபடாது போய்விட்டதும் அவரைப் பெரிதும் வருத்தி இருந்தன. இந்துக்களான அரிசனங்களைத் தனியாகப் பிரிப்பது இந்துக் களையே துண்டாடுதலுக்கு ஒப்பானது என்று காந்தியடிகள் கருதினார். மதங்களின் பெயரிலான பிரிவுகளையே அவர் விரும்பாத போது, ஒரே மதத்தினரை - அதுவும் 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்ற அடைமொழியுடன் - பிளவுபடுத்துதலை அவரால் தாங்க முடியவில்லை. இருப்பினும் அம்பேத்கர் இம்மியும் விட்டுக் கொடுக்காததால், அடிகள் கனத்து வலித்த இதயத்துடன் திரும்பி வந்தார். இந்த அழகில் இந்தியாவில் அரசாங்கம் செய்திருந்த அட்டூழியங்கள் அவரை மேலும் துயர் கொள்ளச் செய்தன.

தாம் இல்லாத போது அரசாங்கம் உப்புவரியை அதிகமாக்கியது பெரிய மோசடியாக அவருக்குப் பட்டது. உப்புவரியையே எடுக்க வேண்டும் என்று சத்தியாக்கிரகம் செய்திருந்த அவருக்கு அதனை அதிகப்படுத்தியது எவ்வளவு ஆயாசத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மனங்கசந்து போன நிலையில், காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தாம் மறுபடியும் தொடங்கப் போவதாக அறிவித்தார். அரண்டு போன சர்க்கார் ஜனவரி நான்காம் நாள் அவரைக் கைது செய்து எரவாடாவில் சிறை வைத்தது. மேலும் நான்கு அடக்குமுறைச் சட்டங்களையும் இயற்றியது. காங்கிரஸ் தடை செய்யப்பட்ட அமைப்பாகியது!

காந்தியடிகள் இல்லாதபோது, புரட்சியாளர்களால் சில வெள்ளையர்கள் கொல்லப்பட்டிருந்தனர். சுநீதி சௌத்ரி, சாந்தி கோஷ் எனும் இரண்டு இளம் பெண்கள் ஸ்டீவன்ஸ் எனும் ஜில்லா மாஜிஸ்திரேட்டைச் சுட்டுக் கொன்றது நாடெங்கிலும் பரபரப்பாய்ப் பேசப்பட்டது.

1932 ஆகஸ்டில் நீண்டத் தகாதாருக்கென்று தனித் தொகுதிகள் எனும் வகுப்புவாதத் தீர்ப்பை இங்கிலாந்துப் பிரதமர் வழங்கினார். சிறையில் இருந்த காந்தி அதைத் தடுக்க எடுத்த முயற்சிகள் வீணாகவே, சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்து, செப்டம்பர் 20 ஆம் நாளில் நோன்பைத் தொடங்கி விட்டார்.

காந்தியடிகள் சிறைப்பட்டதன் விளைவாக எழுந்த கலவரங்களில் நாடு முழுவதும் கிட்டத்தட்ட அறுபத்தையாயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

தேசத் தந்தையின் உண்ணாவிரதத்தின் விளைவை எண்ணிப் பார்க்க அஞ்சிய மதன் மோகன் மாளவியா, தக்கர் பாபா, ராஜாஜி, சரோஜினி நாயுடு, எம்.சி. ராஜா, டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் எரவாடா சென்றனர். ராஜாஜியும் அம்பேத்கரும் தனியாகச் சந்தித்துப் பேசித் தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டனர்.

அந்த முடிவின்படி கூட்டுத் தொகுதி முறையும், ஆனால் தாழ்த்தப்பட்டவர்க்கு அதிகத் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதும் ஏற்கப்பட்டுப் பூனா உடன்படிக்கை செப்டம்பர் 24 ஆம் நாள் கையெழுத்தானது. காந்திஜியும் தமது உண்ணா நோன்பை நிறுத்திக் கொண்டார். அவ்வாண்டு ஆகஸ்டு நவஜீவன் இதழில் தாழ்த்தப்பட்டவர் என்பதை அரிசன் என்று காந்தியடிகள் குறிப்பிடத் தொடங்கி விட்டிருந்தார். அவரின் முன்னேற்றக் கருத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் நாட்டின் பல கோவில்கள் அரிசனங்களுக்குத் திறக்கப்பட்டன.

இவ்வாறு காந்திஜியின் சாத்துவிகப் போர் ஒருபுறம் நடக்க, மற்றொரு புறம்



அதே ஆண்டில் 97 பயங்கரவாதச் செயல்கள் நடந்தன. வங்காள கவர்னரைச் சுட முயன்று பிடிபட்ட வீணாதாஸ் எனும் மாணவி தண்டிக்கப் பட்டாள். மிட்னாப்பூர் மாஜிஸ்டிரேட்டு சுடப்பட்டுப் படுகாயமுற்றார். மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டது சிட்டகாங் ஐரோப்பியர் கிளப், சூர்யா சென்னின் படையால் பிரீதி லதாவின் தலைமையில் தாக்கப்பட்டதாகும். தாக்குதல் நடைபெறு முன்னரே அத்துடன் சம்பந்தப்பட்ட கல்பனா தாஸ் கைது செய்யப்பட்டாள். தாக்குதலில் ஒரு பெண்மணி இறந்தார். பதின்மூன்று பேர் காயமுற்றனர். பிடிபட்ட பிரீதிலதா சயனைட் சாப்பிட்டு இறந்தாள். அவளது சட்டைப் பையில் ஒரு துண்டுச் சீட்டு இருந்தது. அதில், 'நமது போராட்டம் 1930 ஏப்ரல் 18 இல் தொடங்கியது. பாரதமாதா அடிமைப்பட்டிருக்கும் வரை இது தொடரும். புரட்சிக்கார இளைஞர்க்குப் பெண்களாகிய நாமும் உதவ வேண்டும்' என்று எழுதப்பெற்றிருந்தது.

அதே ஆண்டில் சென்னையில் சுதந்தர நாள் விழாவன்று பாஷ்யம் எனும் இளைஞர் நள்ளிரவில் கோட்டையின் உச்சிக்குப் போய்க் கராச்சி மாநாட்டில் வடிவமைக்கப்பட்ட மூவண்ணக் கொடியை நட்டார். பிரிட்டனின் கொடியை அகற்றினார். கொடியின் நடுவே 'பிரிட்டிஷ் அரசுக்கு இன்றே கடைசி நாள்' என்று எழுதியும் வைத்திருந்தார். அவரைப் போல் பம்பாய்க் கூட்டம் ஒன்றிலிருந்து பிரிட்டிஷ் கொடியை நீக்கி மூவண்ணக் கொடியைப் பறக்கவிட்ட ஓர் இளைஞர் பிடிபட்டுப் படுகாயப் படுத்தப்பட்டார். அதே ஆண்டில் திருப்பூரில் குமரன் எனும் இளைஞர் தடை செய்யப்பட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டு அடிபட்டு மயங்கிய நிலையிலும் கொடியைப் பிடித்துக் கொண்டே இருந்தார். அவர் மரணமுற்ற பிறகும் கொடி அவர் பிடியிலேயே இருந்தது.

அமைதி ஊர்வலம் சென்ற மக்களை யெல்லாம் போலீசார் சகட்டு மேனிக்கு அடித்து நொறுக்கினார்கள். ஆயிரக்கணக்கானோர் நாடு முழுவதும் கைதானார்கள்.

ராமசாமிக்கு கங்காவிடமிருந்து கடிதம் வந்து பல நாட்கள் ஆகிவிட்டிருந்தன. இத்தனை நாட்களில் கங்காவிடமிருந்து அவருக்கு ஒரே ஒரு கடிதம்தான் வந்திருந்தது. குறிப்பிடும்படி அதில் செய்தி இல்லாவிட்டாலும், புரட்சியாளர்களிடையிலேயே சோர்வு ஏற்பட்டிருப்பதை அது தெரிவித்திருந்தது. காந்தியளவுக்கு நாடு தழுவிய

போராட்டமாகத் தங்களால் செய்ய முடியவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து வருவது பற்றியும் கங்கா அதில் குறிப்பிட்டிருந்தான். காந்திஜியின் பால் கங்கா ஈர்க்கப்பட்டுள்ளானோ என்ற இன்பமான அதிர்வை அந்தக் குறிப்பு அவருள் கிளர்த்தியது. அது பற்றிய தகவலைத்தான் அவர் மிகுந்த ஆவலுடன் எதிர் நோக்கினார். ஆனால் அதன் பிறகு அவனிடமிருந்து கடிதமே இல்லை. ஏதாவது அடாவடிச் செயலில் ஈடுபட்டுச் சிறைப்பட்டிருக்கவாமோ என்ற எண்ணம் வந்தது. அப்படியேயானாலும் கைதிகளுக்கும் கடிதம் எழுதும் வசதி இருக்கிறதே என்ற நினைப்பும் வந்ததில், பவித்ரா மாதிரி.... என்று தொடங்கிய எண்ணத்தை முடிக்க விரும்பாமல் அவர் தலையைக் குலுக்கிக் கொண்டார். 'அப்படி எல்லாம் இருக்காது. இருக்கக்கூடாது. அவன் சிறைப்பட்டிருக்கக்கூடும். எல்லா ஜெயில் அதிகாரிகளும் கடிதம் எழுதும் உரிமையைத் தருவார்கள் என்று சொல்ல முடியாது' என்ற எண்ணத்தில் ஆறுதல் பெற முயன்றார்.

கதவு தட்டப்பட, சிந்தனை கலைந்து வாசற் கதவைத் திறக்க எழுந்தார். இதற்குள் அவரை முந்திக் கொண்டு எழுந்து போய்த் திரும்பி வந்து பாதி வழியில் அவரைச் சந்தித்த விசாலம், "நான் கதவைத் திறக்கல்லே, ராமசாமி. ஜன்னல் வழியாப் பார்த்தேன். தாடியும் தலைப்பாவுமா ஒரு பஞ்சாப்காரன் நின்னுண்டிருந்தான். உடனே வந்துட்டேன். ஒரு வேளை சி.ஐ.டி. போலீசாக்கூட இருக்கலாம். யாருன்னு கேக்காம கதவைத் திறக்காதே" என்று அறிவுரை கூறினாள்.

ராமசாமி வியப்புடன் நகர்ந்தார்.

58

சிட்டகாங் ஆயுதக்கிடங்குத் தாக்குதலுக்குப் பிறகு ஜலாலாபாத் குன்றில் தங்கிக் கொண்ட புரட்சியாளருக்கும் வெள்ளையருக்குமிடையே நடந்த போரில் பிடிபட்டுச் சிறைத் தண்டனை பெற்றிருந்த ஜெய்சங்கர் கக்லா, அகமத்கான், சுபேந்திரநாத் தாகூர், ரத்னாகர், ராஜ்குமார் ஆகிய ஐவரும் சிறையில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த நள்ளிரவு கடந்த நேரத்தில் அதன் கதவை மிக எளிதாய்த் திறந்து கொண்டு உள்ளே வந்த முக்காடிட்ட ஆள், "ஜெய், ஜெய்...." என்று அவனது தோளில் தட்டினான். ஜெய்சங்கர் கக்லா வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். நிலாக்காலமாதலால் உயரத்தில் இருந்த சிறு சன்னல் வழியே வெளிச்சம் உட்புகுந்து கொண்டிருந்தது.

"நீங்கள் ஐந்து பேரும் இங்கிருந்து இப்போதே தப்பிப் போய் விடுங்கள், ஜெய்...."

"மாணிக்லால்... ஐ ஆம் சாரி. நீங்கள் இப்போது இன்ஸ்பெக்டர் ஜெனரல்..."

மற்ற நால்வரும் எழுந்து உட்கார்ந்தார்கள்.

"இல்லை, ஜெய். நான் உங்களுடைய பழைய நண்பன் மாணிக்லால் திங்ரா. லண்டனில் வாழ்ந்த காலத்தில் மதன்லால் திங்ராவுக்குத் திருஷ்டிப்பரிகாரம் என்று உன்னால் வர்ணிக்கப்பட்ட அந்த மாணிக்லால் திங்ரா என்றோ இறந்து விட்டான், ஜெய். நீங்கள் ஐந்து பேரும் உடனே தப்பிப் போய்விடுங்கள். பின் கதவு திறந்து வைக்கப்பட்டுள்ளது."

"இந்தச் சிறையின் காவல்காரன்?"

"அவன் மயங்கிக் கிடப்பதற்கு ஏற்பாடு செய்தாகிவிட்டது, ஜெய். கேள்வி கேட்டுக் கொண்டிருக்காதே. இந்தா, உங்கள் சிறை உடைகளைக் களைந்து விட்டு இந்தப் பைஜாமா குர்தாக்களை அணிந்து கொண்டு புறப்படுங்கள்."

மாணிக்லால் திங்ரா தன்னுடன் எடுத்து வந்திருந்த துணி மூட்டையைப் பிரித்தான்.

ஜெய்சங்கரின் விழிகள் நீரில் மிதந்தன. ஐவரும் சுறுசுறுப்பாக உடை மாற்றம் செய்து கொண்டார்கள்.

"மாணிக்லால், உன்னை நாங்கள் மறக்கவே மாட்டோம். அன்று லண்டனில் நடந்ததை மறந்து விடு."

"அதை நான் என்றோ மறந்து விட்டேன், ஜெய். உங்களைக் காட்டிக் கொடுக்க அன்று எனக்கிருந்த வளராத உள்ளத்தால் முனைந்த நான் இன்று அதற்கு ஒரு சிறு பிராயச்சித்தம் செய்து விட்டதாகவே நினைக்கிறேன். இது போன்ற உதவிகளை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தேச பக்தர்களுக்கு நான் செய்வேன்."

ஜெய்சங்கர் கண்ணீர்த்துளிகள் கன்னங்களில் உருண்டு விழ, விரைவாக நகர்ந்து நண்பனை அணைத்துக் கொண்டான். மற்ற நால்வரும் கூட மாணிக்லால் திங்ராவை

"என் மனைவிக்கு என்ன வியாதி டாக்டர்?"

"பயப்படாதீங்க போஸ்ட் மார்டத்துலயாவது கண்டு புடிச்சிடலாம்!"

— டி.எஸ். திருமலைராயன்



அணைத்துக் கொண்டு பிறகு விடை பெற்று நெஞ்சு கொள்ளாத நன்றியுடனும் சுதந்திர உணர்வுடனும் தப்பிப் போனார்கள்.

விசாலத்தின் அறிவுரைப்படி முதலில் ராமசாமி சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். வந்திருந்தவன் போலீசாகவே இருந்தாலும் கதவைத் திறந்துதானே ஆக வேண்டும் என்று நினைத்து, "யார் நீங்கள்? யார் வேண்டும் உங்களுக்கு?" என்றார்.

"நான் போலீஸ் டிபார்ட்மென்ட். சி.ஐ.டி. முதலில் கதவைத் திறவுங்கள்" என்று அந்தச் சீக்கியன் கட்டைத் தொண்டையில் அதிகாரமாய்ச் சொன்னான்.

கலவரமடைந்த ராமசாமி கதவைத் திறந்தார். பரண்மீது டிரங்குப் பெட்டியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பவித்ரா பற்றிய கடிதம்தான் உடனே அவரது நினைவில் நெருடியது. சீக்கியன் உள்ளே வந்தான். சற்றே ஒதுங்கி அச்சத்துடன் நின்றிருந்த விசாலத்தைப் பார்த்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து விசாலத்தைக் கட்டிக் கொண்டான்.

"அட, பாவி... அய்யோ. ராமசாமி, இவனைத் தள்ளுடா. குடிச்சுட்டு வந்திருக்கான் போலேருக்கு..."

"முட்டாள்!" என்று கூவியபடி பாய்ந்தார் ராமசாமி. அடுத்த வினாடி தலைப்பாகை, ஒட்டுத்தாடி, மூக்குக் கண்ணாடி ஆகிய இணைப்புகள் எகிறி விழ, தானும் தரையில் மல்லாந்து கிடந்தான் கங்காதரன்.

"வயசாயிண்டிருக்கே ஒழிய, உங்களுக்கு ஆனாலும் பலம் ஜாஸ்திதாம்ப்பா," என்றபடி கங்கா எழுந்து உட்கார்ந்தான்.

அடுத்த கணத்தில் அங்கு எவ்வளவு மகிழ்ச்சியும், இன்பமான அதிர்ச்சியும் நிலவின என்பதை விவரிக்கச் சொற்களுக்கு வல்லமை இல்லை. அளவு கடந்த பரவசத்தைத் தாங்க முடியாமல் விசாலம் உடனே தரையில் உட்கார்ந்து அழலானாள்.

"சாரி, கங்கா. வா, வா. வந்து உக்காந்து எல்லாம் விவரமாச் சொல்லு. வடக்கே போய் இத்தனை நாளும் என்ன பண்ணினே, எந்த அளவுக்கு சாதிச்சே... ஒரு லெட்டர் போட்டிருக்கலாமோல்லியோ?" என்ற ராமசாமி சிரிப்பே உருவானார்.

கங்கா எழுந்து வந்து ஊஞ்சலில் ராமசாமிக்கு அருகே உட்கார்ந்து கொண்டான்.

"அழாதே. அத்தே. எழுந்திரு. உன் கையால காப்பி குடிச்சு எத்தனை நாளாச்சு?"

விசாலம் கண்களைத் துடைத்துக் கொண்டு இலேசான சிரிப்புடன் எழுந்தாள். "இனிமே இந்த வீட்டு வாசப்படிய விட்டு இறங்கு. சொல்றேன்!"

"முதல்ல காப்பி கொண்டாத்தே. அப்புறம் உனக்கும் ஒருதரம் சொல்றேன், என்னோட வீர தீரப் பிரதாபத்தையெல்லாம்."

விசாலம் போனதும், "பெரிசா எதுவும் சாதிக்கல்லேப்பா. வடக்குலயே பயங்கர வாதம் படிப்படியாக் குறைஞ்சு போயிடுத்து. இப்ப கிட்டத்தட்ட ஒண்ணுமே இல்லேன்னு ஆயிடுத்து. தலைவர்கள்ளாம் செத்தாச்சு. மத்தவாள்ளாம் ஜெயில்ல. தப்பினவா சிதறிக் கிடக்கோம். நீங்க சொல்றது தாம்ப்பா சரி." என்றான்.

"காந்தி வழியைத்தானே சொல்றே?"

"ஆமாம்ப்பா. லெட்டர் குடுத்தனுப்பினேனே, அந்த ரங்கையாவை அப்புறம் நாங்க சந்திக்கவே இல்லே. அவன் என்ன ஆனான்னே தெரியல்லே."

"அவன் ஏதோ விவசாயிகள் போராட்டத்துல கலந்துண்டு ஜெயிலுக்குப் போனதா அவனோட அண்ணா எழுதி இருந்தார்" -

அவனுடைய அண்ணா யாரென்பதை அவனுக்கு அவர் சொன்னார்.

"அட! அது சரி, ரமணி எங்கே?"

"வெளியில போயிருக்கான். வர்ற நேரந்தான்."

"இப்ப சத்தியா நான் காங்கிரஸ் காரம்ப்பா..."

"வெரி குட். காந்தியை எப்பவாது சந்திச்சியா, அல்லது அவர் பேச்சையாவது கேட்டியா?"

"பம்பாய்ல காங்கிரஸ் ஹவுஸ்ல பார்த்தேம்ப்பா. என்னமாப் பேசறார் மனுஷன்! வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுதான். எம் பேச்சுக்கு மறு பேச்சே கிடையாதுங்கறாப்ல ஒரு ஆணித்தரமான பேச்சப்பா. நேரு அவரைப் பத்தி என்ன சொல்றாராம் தெரியுமா?"

"என்ன?"

"நேருவுக்கும் காந்திக்கும் பெரிய அளவில் அபிப்பிராய பேதங்கள் இருக்காம். அடிக்கடி வாக்குவாதம் வருதாம். ஆனா, 'எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராயம் எனக்கு இருந்தாலும் கடைசியில காந்திஜி



''ஆச்சர்யமாயிருக்கு டாக்டர், காத்திருக்கிற பேஷண்ட் ஒருத்தருக்கு இருதயம் வெளியில் இருக்கு!''

''அட! பத்து வருஷத்துக்கு முன்னாடி பாதி ஆபரேஷனில் தப்பிச்சு ஓடிட்ட பரமசிவம் திரும்பி வந்துட்டானா!''

— வேதபுரி எஸ். ரமேஷ்

யோட பர்சனாலிட்டி என்னை ஜெயிச்சுட்டது'ன்னு ஒரு தரம் சொன்னாராம்ப்பா. நேரு பெரிய இண்டெலெக்சுவல்னு பேரு. அவரே இப்படி மயங்கிப் பொத்துனு விழுந்தா நாமெல்லாம் எந்த மூலைக்குப்பா? அவர்கிட்ட ஏதோ ஒரு வசீகர சக்தி இருக்குப்பா. அந்தச் சிரிப்பு இருக்கே....! எப்பேர்ப்பட்ட முரடனும் அதுக்கு மசிஞ்சுடுவாம்ப்பா.''

"அப்ப நீ மசிஞ்சுட்டே?"

"என்னை மறைமுகமா முரடன்கறேள்!"

விசாலம் காப்பியுடன் வந்தாள். "இந்தாடா காப்பியைக் குடிச்சுட்டுக் கைகால் அலம்பிண்டு வா. கொஞ்ச நேரத்துல சமையல் பண்ணிடறேன். ரமணியும் வந்துட்டா, மூணு பேரும் சேர்ந்து உக்காந்து சாப்பிட்டுடலாம்'' என்றாள்.

"உன் சமையல் சாப்பிடாம நாக்கு செத்துப் போயிடுத்து. மிளகு குழம்பு பண்ணேன்!"

விசாலம் உள்ளே போனாள்.

"மிஸ்டர் ராஜாராமன் ஆத்துல எல்லாரும் சவுக்கியந்தானேப்பா? அஞ்சனா மாமி? அமராவதி?"

"ம்ம்...."

கங்கா சட்டென்று தலை உயர்த்தி அவரைக் கவனித்தான். ராமசாமியின் முகம் இருண்டதாய் அவனுக்குப் பட்டது.

"அந்தப் பொண்ணு பவித்ரா கிட்டேருந்து கடுதாசி உண்டாமாப்பா?"

இப்போது ராமசாமி அவனைக் கவனித்தார். அவனது பார்வை தாழ்ந்திருந்தது. ஊஞ்சலை உந்தி உந்தி ஆட்டிக் கொண்டிருந்த கால்கட்டை விரல்கள் மீது பதிந்திருந்தது.

"லெட்டர் வந்து கொஞ்ச நாளாயிட்டாப்ல இருக்கு. அவா ஆத்துலயும் இந்த நிமிஷம் வரைக்கும் நாங்க கவலைப் பட்டுண்டிருந்த மாதிரி கவலைப் பட்டுண்டிருக்கா.... சரி. நீ போய்க் கை, கால் அலம்பிண்டு கொஞ்சம் ஓய்வெடுத்துக்கோ. அப்புறம் எல்லாம் பேசலாம்."

வட்டமேஜை மாநாடுகளின் முடிவு இந்தியாவை ஒரு கூட்டரசு - ஃபெடரேஷன் - ஆக்கும் நிலையை நோக்கிப் போவதான சாத்தியத்தை ஏற்படுத்தியதால், முஸ்லிம்கள் இந்துக்களின் ஆட்சிக்கு உட்பட நேரும் என்று நினைத்து பாகிஸ்தான் தேசிய இயக்கம் இப்போது மேலும் வலுப்பெற்றது.

1937 இல் அந்தமான் சிறைச்சாலைக் கைதிகள் சிலர் மோசமான உணவு, படிக்கப் புத்தகங்கள் தராமை, மருத்துவ வசதி இன்மை ஆகியவற்றுக்கு எதிராய் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். இந்த உண்ணாவிரதம் ஐம்பத்திரண்டு நாட்கள் தொடர்ந்தது. அவர்களுள் நரேந்திரநாத் பானர்ஜியும் அவன் நண்பர்கள் மல்ஹோத்ரா, தீனதயாள், கிருஷ்ணாராவ் ஆகியோரும் இருந்தனர். சிலரின் நிலை கவலைக்கிடமாகவே, அவர்களுக்கு வலுக்கட்டாயமாக இரப்பர்குழாய்களில் மூக்கு வழியே உணவு செலுத்தப்பட்டது. அப்படியும், மகாவீர் சிங், மோஹித் மோய்த்திரா, மோகன் கிஷோர் ஆகியோர் இறந்தனர். மத்திய, மாகாணச் சட்டசபைகளில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டது. அந்தமான் கைதிகளையெல்லாம் இந்தியாவுக்குக் கொண்டு வந்து விட வேண்டுமெனும் வலுவான கோரிக்கை நாடு முழுவதும் மக்களாலும், அரசியல் கட்சிகளாலும் விடுக்கப்பட்டது. ஊர்வலங்கள், கண்டனங்கள், கூட்டங்கள் மூலம் இது விடாமல் வற்புறுத்தவும் பட்டது. காந்திஜியும் இது பற்றிய கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தார். கொஞ்சங்கொஞ்சமாய்க் கைதிகளை இந்தியாவுக்கு அனுப்ப அரசும் ஒப்புக் கொண்டது. நரேந்திரநாத் தனது முறைக்காக ஆவலுடன் காத்திருக்கலானான்.

1938 ஜனவரி 18 ஆம் நாளில் கிளம்பிய கடைசிக் குழுவில்தான் நரேந்திரநாத் பானர்ஜியும் அவன் நண்பர்களும் இடம் பெற்றார்கள். கடைசி நபராகத் தான் இடம் பெற்றது நிக்கல்சனின் கைங்கரியத்தால் என்று நினைத்து நரேந்திரநாத் பானர்ஜி மனத்துள் சிரித்துக் கொண்டான். இந்தியாவுக்குக் கடிதம் எழுத யாரும் அனுமதிக்கப்படவில்லை. 'அங்கு போய் எழுதிக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டார்கள், கடைசியில் அவனும் அவன் தோழர்களும் கல்கத்தா டம்டம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். அங்கே நரேந்திரநாத்துக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

(தொடரும்)



Godzilla fights King Monster

ஹாலிவுட்டுக்குச் சமமாக ஜப்பானில் பிரும்மாண்டமாக எடுக்கப்பட்டுள்ள படம். 'காட்ஸில்லா' என்ற பயங்கரமான ஜந்துதான் ஹீரோ. இந்த மிருகம் கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் ஜப்பானியர்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்டிருப்பது. அவர்கள் நலனுக்காகப் போராடுகிற, டினோசார் போன்றதொரு மிருகம்.

இந்தப் படத்தில் காட்ஸில்லா, 23வது நூற்றாண்டு மனிதர்கள் உருவாக்கும் இங்கிடோராவைக் கொல்வதுதான் கதை.

ஒருவகையில் குழந்தைகளுக்கான அதீத கற்பனை போல் இது தோன்றினாலும் கூடவே நாட்டுப் பற்று என்ற விஷயமும் ஆழமாக ஊன்றப்படுகிறது.

23வது நூற்றாண்டில் ஜப்பான், தொழில் நுட்பத்தில் எக்கச்சக்க வளர்ச்சி கண்டு விடும் என்பதால் அந்த எதிர்காலத்தை இன்றைய 20ம் நூற்றாண்டிலேயே அழித்து விடவேண்டும் என்று ஒரு கோஷ்டி புறப்படுகிறது! காட்ஸில்லா அந்த முயற்சியை முறியடிக்கிறது.

ஆறே சீன்கள்தான் படம். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகர முடியாத அளவுக்குக் கட்டுக்கோப்பு. இதிலும் காதல் உண்டு. ரொம்ப மெல்லிதாக ஒரு அறிவியல் எழுத்தாளன் மூலம் வெளிப்படுகிற காதல். அச்சங்கள்தான் உண்மையாகின்றன. அனுமானங்கள் பலிக்கின்றன.

பத்தடி உயரத்தில் கதை இருப்பதுபோல் தோன்றினாலும் ஆங்காங்கே யதார்த்தமான 'டச்'கள் உண்டு. குழந்தைகளோடு படத்தைப் போய்ப்பாருங்கள். ஒரு மாறுபட்ட அனுபவம் நிச்சயம் கிடைக்கும்!

ஊருக்குள் ஒரு ரௌடி. அவனை அவனுடைய தம்பியே திருத்த முனைவதுதான் கதை. கொஞ்சம் போராட்ட சாயம் பூசி, பாசப் பிணைப்பு, தண்ணீர் பிரதேச கிளுகிளு காதல் என்று கோலிவுட்டின் பிதுரார்ஜிதங்களையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள்.

எது எப்படியோ, விஜய் புடம் போட்டிருக்கிறார். அதற்கு முதல் சபாஷ். என்ன ஒரு ஆட்டம்! கூடவே முகத்தில் மெச்சூரிட்டி. இதுவே தொடர்ந்தால் சரி.

டப்பாங்குத்துதான் இசை. விஜய் இரண்டு பாடல்கள் பாடியிருக்கிறார். அந்த ரிஸ்க்கை, இனி எடுக்காதிருப்பது மக்களுக்குச் செய்யும் பெரும் சேவை.

டான்ஸ் மாஸ்டருக்கும் காமிராமேனுக்கும் ஆளுக்கொரு வெள்ளி மோதிரமாவது நிச்சயம் போட வேண்டும். என்ன ஒரு காம்பினேஷன்! அழகுக்கு அழகூட்டியிருக்கிறார்கள்.

டைரக்டர் ஐயா சமுகத்துக்கு: உங்கள் திரைக்கதை வெகு கச்சிதம். கடைசி வரை உட்காருவதற்கான ஏற்ற இறக்கங்கள் ஓ.கே. ஒரே ஒரு வேண்டுகோள். அடுத்த படத்திலாவது பெண்களை இத்தனை கொச்சைப் படுத்தாதிருக்க முயற்சி பண்ணுங்கள்.

-துளசி



பார்த்திபன் கனவு

5. ஒற்றர் தலைவன்

நல்ல சமயத்தில் வந்து தன்னைக் காப்பாற்றிய குதிரை வீரனிடம் விக்கிரமனுக்கு நன்றி உணர்ச்சி உண்டாயிற்று. அவ்வீரனுடைய கேள்விக்கு மறுமொழியாக, "ஐயா! நான் வியாபாரி. உறையூருக்குப் போவதற்காக இந்தக் குறுக்கு வழியில் வந்தேன். வந்த இடத்தில் இந்த ஆபத்து நேர்ந்தது. நல்ல சமயத்தில் நீங்கள் வந்து உதவி செய்தீர்கள்" என்றான்.

"வியாபாரியா நீர்? துலாக்கோல் பிடிக்கும் கையா இவ்வளவு லாகவமாய்க் கத்தி சுழற்றுகிறது? நம்ப முடியவில்லை, ஐயா! என்ன வியாபாரம் செய்கிறீரோ?"

"இரத்தின வியாபாரி நான்; கத்தியை உபயோகிக்கவும் பழகியிருக்கிறேன்...."

"அழகுதான்! இரத்தின வியாபாரியா இம்மாதிரி காட்டு வழியில் தனியாகக் கிளம்பினீர்? அதுவும் இராவேளையில்..."

"நரசிம்ம சக்கரவர்த்தியின் புகழைக் கேட்டு ஏமாந்து போனேன். அவருடைய ஆட்சியில் திருட்டுப் புரட்டே கிடையாது என்று கடல்களுக்கு அப்பால் உள்ள தேசங்களில் எல்லாம் ஜனங்கள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன்."

"ஓகோ! வெளிநாட்டிலிருந்து வந்தீரா! நினைத்தேன் அப்போதே. எந்த நாட்டிலிருந்து வருகிறீர், ஐயா?"

"எனக்குச் செண்பகத் தீவு."

"செண்பகத் தீவா? நானும் கேள்விப்பட்டிருக்கிறேன், அந்த நாட்டில் இரத்தினங்கள் அதிகம் உண்டு என்று. நல்லது; இரத்தின வியாபாரம் செய்ய வந்த நீர் முதலில் காஞ்சிக்கல்லவா போக வேண்டும்? இவ்வளவு அவசரமாக உறையூருக்குக் கிளம்பியது ஏனோ?"

"சொல்லுகிறேன், ஐயா! ஆனால் தாங்கள் யார் என்பதைத் தெரியப்படுத்தவில்லையே!"

"நான் யாராயிருந்தால் என்ன?"

"என் உயிரைக் காப்பாற்றியவர் யார் என்று நான் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"உம்முடைய உயிரை நான் காப்பாற்றவில்லை; நீரேதான் காப்பாற்றிக் கொண்டீர்! மூன்று பேரை வேலை தீர்த்த உமக்கு இன்னும் ஒருவனைத் தீர்ப்பது பிரமாதம் ஒன்றும் இல்லை. ஆனாலும் நான் யாரென்று சொல்லுகிறேன். காஞ்சி சக்கரவர்த்தியைப் பற்றி நீர் கேள்விப்பட்டது பொய்யாகப் போயிற்று என்றீரே? அந்தச் சக்கரவர்த்தியின் ஊழியர்களில் ஒருவன் நான். ஒற்றர் படைத்தலைவன். நீர் தனியாக இந்தக் காட்டு வழியே போகிறீர் என்று எனக்குத் தகவல் வந்தது. ஏதாவது அபாயம் நேரலாம் என்று எதிர்பார்த்து உடனே புறப்பட்டு வந்தேன்..."

"அப்படியா? என்ன விந்தை? சக்கரவர்த்தியின் ஒற்றர் படை அவ்வளவு திறமையாகவா வேலை செய்கிறது? அப்படியானால், நான் எண்ணியது தவறு..."

"செண்பகத் தீவில் நடக்கும் ஆட்சியைப் போல் அவ்வளவு திறமையாக இங்கே அரசாங்கம் நடக்காமலிருக்கலாம், ஐயா! ஆனாலும், எங்களால் முடிந்தவரையில் கொலை, களவு நடக்காமல் பார்த்துக் கொண்டு வருகிறோம். பார்க்கப் போனால், இரவில் தனிவழியே வந்து நாலு உயிர்களின் மரணத்துக்குக் காரணமாயிருந்ததின் பொருட்டு உம்மை நான் பிடித்துக் கொண்டு போய்ச் சக்கரவர்த்தியின் முன்னால் நிறுத்த வேண்டும்."

விக்கிரமனுடைய கை அப்போது அவனுடைய வாளை இறுக்கிப் பிடித்ததை நட்சத்திரங்களின் மங்கிய ஒளியில் அவ்வீரன் கவனித்தான்.

"வேண்டாம் ஐயா, வேண்டாம். அவ்விதம் செய்கிற உத்தேசம் எனக்கு இல்லை. அயல் தேசத்திலிருந்து வந்தவரானதால், இந்த வழியின் அபாயம் தெரியாமல் வந்து விட்டீர். உம்மைப் போல் வேண்டுமென்று விபத்தில் அகப்பட்டுக் கொள்கிறவர்கள் இல்லாமற்போனால், அப்புறம் எங்களுக்குத்தான் என்ன வேலை இருக்கும்? ஒற்றர் படைத் தலைவன்தான் எதற்காக? நல்லது; நான் வந்த வேலை ஆகி விட்டது. பார்க்கப் போனால் நான் வந்திருக்க வேண்டியதில்லை. யாருடைய உதவியும் இல்லாமல் உம்மை நீரே காப்பாற்றிக் கொள்ளக் கூடியவராயிருக்கிறீர். நான் போய் வருகிறேன்" என்றான் அவ்வீரன்.

விக்கிரமனுடைய உள்ளம் குழம்பிற்று.

அவ்வீரனுக்குத் தான் தகுந்தபடி நன்றி செலுத்தவில்லையென்று அவன் கருதினான். அன்றியும், அவ்வீரனுடன் இன்னும் கொஞ்சம் சிநேகம் செய்து கொண்டு உறையூர் போவதற்கு அவனுடைய குதிரையை வாங்கிக் கொள்ளலாம் என்ற ஆசையும் உண்டாயிற்று. இரவை எங்கே, எப்படிக் கழிப்பது என்ற கவலையும் தோன்றியது.

"அப்படியன்று. அந்தச் சமயத்தில் தாங்கள் வந்திராவிட்டால், ஒருவேளை நான் உயிரிழந்திருப்பேன். எனக்கு உயிர் அளித்தவர் தாங்கள்தான். அதோடு இன்னொரு உதவியும் தாங்கள் எனக்குச் செய்ய வேண்டும்" என்றான் விக்கிரமன்.

"என்னிடம் யாராவது உதவி கேட்டால், அதை மறுக்கும் வழக்கம் கிடையாது. உதவி கேட்காதவர்களுக்குக் கொடுப்பதும் இல்லை."

"உறையூருக்கு நான் அவசரமாய்ப் போக வேண்டியிருக்கிறது. அதற்கு நீங்கள்தாம் உதவி செய்ய வேண்டும். உங்கள்...."

"நீர் கேட்கப் போவது தெரிகிறது. என் குதிரையைக் கேட்கிறீர். ஆனால், இந்த இராத்திரியில் இனிமேல் இக் காட்டு வழியில் போனால், உம்முடன் குதிரையும் துஷ்ட மிருகங்களுக்கு இரையாக வேண்டியதுதான். உம்மைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் என் குதிரையைப் புலிக்கு ஆகாரமாக்க எனக்கு இஷ்டமில்லை."

"வேறு என்ன யோசனை சொல்கிறீர்கள்?"

"இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு சிற்பியின் வீடு இருக்கிறது. என்னுடன் வந்தால், அங்கே படுத்திருந்து விட்டு அதிகாலையில் எழுந்து போகலாம்."

விக்கிரமன் சற்று யோசித்து, "அப்படியே செய்யலாம்" என்றான்.

கீழே கிடந்த மூட்டைகளை எடுத்துக் குதிரை மேல் வைத்துக் கட்டினார்கள். பிறகு, வீரன் குதிரையைப் பிடித்துக் கொண்டு காட்டுக்குள் புகுந்து செல்ல, விக்கிரமனும் அவன் பின்னால் சென்றான்.

6. சிற்பியின் வீடு

அடர்ந்த காட்டின் வழியே ஒரு கொடி வழி சென்றது. பட்டப் பகலிலேயே அந்த வழியில் இருள் சூழ்ந்திருக்கும். நடுநிசியில் கேட்க வேண்டியதில்லை. பெரிய பாதையில் ஆங்காங்கு எட்டிப் பார்த்த நட்சத்திர வெளிச்சம் கூட இந்தக் கொடி வழியில் கிடையாது.

அப்படிப்பட்ட இருளில், முன்பின் தெரியாத யாரோ ஒருவனைப் பின்தொடர்ந்து காட்டுக் கொடி வழியில் செல்லும் போது விக்கிரமனுடைய தீர நெஞ்சம் கூட 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. வழியோ மிகவும் குறுகலானது. இருபுறத்திலும் தழைத்திருந்த மரக் கிளைகளும் செடிகளும் கொடிகளும் அடிக்கடி விக்கிரமன் மேல் உராய்ந்தன.

வெகு சமீபத்திலிருந்து ஆந்தைகளும் கோட்டான்களும் கர்ணகடூரமான குரலில் சப்தமிட்டன.

எங்கேயோ வெகு தூரத்திலிருந்து ஒரு உறுமல் சப்தம் வந்தது. அதைக் கேட்ட குதிரை கனைத்தது. ஒற்றர் தலைவன் அப்போது குதிரையைத் தட்டிக் கொடுத்தான். அது, "நான் இருக்கிறேன்; பயப்படாதே!" என்று சொல்வது போலிருந்தது.

முதலில் குதிரையும், பிறகு ஒற்றர் தலைவனும் பின்னால் விக்கிரமனுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் ஒரு மரத்தின் வேரில் கால் தடுக்கி விக்கிரமன் கீழே விழுந்தான். ஒற்றர் தலைவன் அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கி விட்டான். அப்போது விக்கிரமனுக்கு உண்டான வியப்புக்கு அளவேயில்லை. 'ஆகா! இது எத்தகைய இரும்புக் கை! இந்தக் கையில்தான் எவ்வளவு வலிவு! இந்த ஒற்றர் தலைவன் சாதாரண மனுஷன் இல்லை. மகா வீரனாயிருக்க வேண்டும். சக்கரவர்த்தி ஒவ்வொரு வேலைக்கும் சரியான ஆளைத்தான் தேர்ந்தெடுக்கிறார்' என்று எண்ணினான்.

இன்னும் எவ்வளவு தூரம் இந்தக் கொடி வழியாகப் போக வேண்டுமோ என்று விக்கிரமன் எண்ணிய சமயத்தில் சட்டென்று இருள் சிறிது அகன்று வானம் தெரிந்தது. எதிரில் ஒரு கட்டடம் இருப்பது லேசாகப் புலப்பட்டது.

"நான் சொன்ன இடத்துக்கு வந்து விட்டோம். இந்த வீட்டில் இரவைக் கழிக்கலாம். பொழுது விடிந்ததும் நீர் கிளம்பலாம்" என்றான் ஒற்றர் தலைவன்.

"ஆகட்டும்; ஆனால் இது யாருடைய வீடு? இப்படிப்பட்ட அடர்ந்த காட்

அமரர் கல்கி

டின் நடுவே யார் வீடு கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள்? எதற்காக?" என்று விக்கிரமன் வியப்புடன் கேட்டான்.

"இந்த வீட்டைக் கட்டியவர் இப்போது இல்லை. அவர் இருந்த போது இங்கே இவ்வளவு அடர்ந்த காடாகவும் இல்லை. அது பெரிய கதை; இராத்திரி உமக்குத் தூக்கம் வராவிட்டால் சொல்கிறேன்" என்றான் ஒற்றர் தலைவன்.

பிறகு, அவன் வீட்டண்டை நெருங்கிக் கதவை இடித்தான்.

வீட்டின் சமீபத்தில் வந்ததும் விக்கிரமன் அது சாதாரண வீடு அல்லவென்பதைக் கண்டான். சித்திர மண்டபமோ, அல்லது சிற்பக் கோயிலோ என்று சொல்லும்படியிருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் கதவு திறந்தது. கதவைத் திறந்தவள் ஒரு தொண்டுக் கிழவி. அவள் கையில் ஒரு கல் விளக்கு இருந்தது. கிழவி கதவைத் திறந்ததும் முன்னே நின்ற ஒற்றர் தலைவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள். அப்போது அவளுடைய புருவங்கள் சிறிது மேலே சென்றன.

இடது கையின் ஆட்காட்டி விரலை அவன் லேசாகத் தன் உதடுகளின் மேலே வைத்து உடனே எடுத்து விட்டான். அந்தச் சமிக்ஞையின் கருத்தைக் கிழவி உணர்ந்திருக்க வேண்டும். உடனே அவளுடைய முகத்திலிருந்த வியப்புக்குறி மாறி விட்டது.

"வாருங்கள், ஐயா!" என்று சொல்லி விட்டு, கிழவி கதவை நன்றாய்த் திறந்தாள்.

இருவரும் உள்ளே பிரவேசித்தார்கள். அந்த வீட்டுக்குள் அடிக்கடி சென்று பழக்கப்பட்டது போல் குதிரை உள்ளே நுழைந்தது. அது நேரே கூடம், முற்றம் எல்லாவற்றையும் தாண்டிப் பின்புறக் கதவண்டை போய் நின்றது. கிழவி அங்கே சென்று அந்தக் கதவையும் திறந்தாள். குதிரை தானாக அதன் வழி புகுந்து சென்றது.


ஒற்றர் தலைவன் அப்போது விக்கிரமனைப் பார்த்து, "இந்தக் குதிரையின் அறிவை என்னவென்று சொல்வது? முன்னொரு தடவை இங்கே நான் வந்த போது பின்கட்டில் குதிரையைக் கட்டியிருந்தேன். இம்முறை அதுவே தன்



இருப்பிடத்தைத் தேடிக் கொண்டு போகிறது. நானும் போய் அதைக் கொஞ்சம் கவனித்து விட்டு வருகிறேன்; நீர் இங்கேயுள்ள சிற்ப வேலைகளைப் பார்த்துக் கொண்டிரும்" என்று சொல்லி விட்டுப் பின் கதவு வழியாகப் புகுந்து சென்றான். கிழவியும் கல் விளக்குடன் அவனைத் தொடர்ந்தாள்.

சுவரிலிருந்த மாடத்தில் நந்தா விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் விக்கிரமன் சுற்றுமுற்றும் பார்த்தான். அது நிச்சயமாக வீடு அல்ல - சிற்ப மண்டபம் தான் என்று அவனுக்குத் தோன்றிற்று. எங்கே பார்த்தாலும் அற்புதச் சிற்பத் திறமை வாய்ந்த சிலைகள் காணப்பட்டன. சுவர்களில் பல வர்ணங்களில் தீட்டப்பட்டிருந்த சித்திரங்கள் காட்சியளித்தன. அவை வரையப்பட்டு அநேக வருஷங்கள் ஆகியிருக்க வேண்டுமென்றாலும் ஓவியங்களின் உயிர்க்களை சிறிதும் குன்றவில்லை.

சிலைகளிலும் சித்திரங்களிலும் முக்கியமாக ஒரு பெண்ணின் உருவம் அதிகமாய்க் காணப்பட்டது. அந்த உருவத்தில் தெய்வீக சௌந்தரியத்தின் களை தோன்றிற்று. நாட்டியக் கலைக்குரிய பலவிதத் தோற்றங்களிலும் பாவங்களிலும் அந்தப் பெண் உருவத்தின் சிலைகளும் ஓவியங்களும் அமைக்கப்பட்டிருந்





அருள்வாக்கு

ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வோர் அங்கத்தில் அதிகக் கௌரவம் இருக்கும். சவுரிமான் என்று உண்டு. அதன் கௌரவம் வாலில்தான் இருக்கிறது. மயில் என்றால் அதற்குத் தோகை விசேஷம். தோகையை மயில் ஜாக்கிரதையாக ரட்சிக்கும். யானை எதை ரட்சிக்கும்? தன் தந்தத்தை தீட்டி வெள்ளை வெளேர் என்று வைத்திருக்கும். இந்தப் பிள்ளையார் என்கிற யானை என்ன பண்ணுகிறது என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்து, அதனால் மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும், தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை இவ்விதம் இந்த யானை காட்டியது. நியாயத்துக்காக, தர்மத்துக்காக வித்தைக்காக எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்பதை, தானே தந்தத்தைத் தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

தன. அவற்றின் அழகையும், கலைத் திறனையும் கண்டு விக்கிரமன் பிரமிப்பை அடைந்தான். உறையூர் சித்திர மண்டபத்திலும் மாமல்லபுரத்துக் கலை விழாவிலும் தான் முன்னர் பார்த்த சித்திரங்கள், சிற்பங்கள் எவையும் இந்தப் பாழடைந்த மண்டபத்துக்குள் மறைந்து கிடக்கும் சிற்பங்களுக்கு அருகில் கூட வர முடியுமா என்று வியந்தான். இவற்றையெல்லாம் அமைத்த மகா சிற்பி எவனோ என்று அறிந்து கொள்ள அவன் துடிதுடித்தான்.

இதற்குள் ஒற்றர் தலைவன் குதிரையின் போஷாக்கைக் கவனித்து விட்டு உள்ளே வந்தான். விக்கிரமன் அவனை நோக்கி, "ஐயா! என்ன ஆச்சரியமான சிற்பங்கள் இவை! எந்த மகாசிற்பி இவற்றை அமைத்தவன்? தெய்வீக அழகு பொருந்திய ஒரு பெண்ணின் உருவம் இங்கே அதிகமாய்க் காணப்படுகிறது! அந்தப் பெண் உண்மையாக இருந்தவளா? அல்லது சிற்பியின் சிருஷ்டியா? இந்த அற்புதச் சிற்பங்கள் எல்லாம் ஏன் இந்த இருண்ட காட்டுக்குள் கிடக்க வேண்டும்? ஏன் எல்லா ஜனங்களும் வந்து பார்க்கும்படி செய்யக் கூடாது? இதை எல்லாம் எனக்கு விவரமாய்ச் சொல்ல வேண்டும்" என்றான்.

"நான்தான் சொன்னேனே, அது பெரிய கதை என்று. மிஞ்சியுள்ள இரவைத் தூக்கமின்றிக் கழிக்க உனக்கு இஷ்டமிருந்தால், சொல்கிறேன். எனக்குப் பசி பிராணன் போகிறது. இதோ பாட்டி பொரிமாவும் வெல்லமும் கொண்டு வருகிறாள். முதலில் சாப்பிடுவோம்" என்றான் ஒற்றர் தலைவன்.

அவ்விதமே இருவரும் சாப்பிட்டார்கள். சாப்பிடும் போது, "தங்கள் பெயர் இன்னதென்று எனக்குச் சொல்லவில்லையே" என்றான் விக்கிரமன்.

"என் பெயர் வீரசேனன். உம்முடைய பெயர்?"

விக்கிரமன் சிறிது வியப்புடன், "என் பெயர் தேவசேனன்" என்றான்.

"ரொம்ப நல்லது; நம் இருவருக்கும் பெயர் ஒற்றுமை இருக்கிறது. ஆகையால், நீர் மனம் விட்டு என்னிடம் பேசலாம். உறையூருக்கு நீர் இவ்வளவு அவசரமாகப் போக விரும்பிய காரணம் என்ன? இரத்தின வியாபாரம் செய்வது உமது நோக்கமாயிருந்தால், முதலில் காஞ்சி நகருக்கல்லவா போக வேண்டும்?"

ஒற்றர் தலைவனிடம் நன்றியும் அன்பும் கொண்டிருந்த விக்கிரமனுக்கு இப்போது சந்தேகமும் பயமும் தோன்றின. ஒருவேளை இவன் நம்முடைய உண்மையைக் கண்டு பிடித்து விட்டால்?.... கொஞ்சம் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ள வேண்டும்.

மேக்சிமா-குரூப் நிறுவனங்கள்

MAXIMA

மேக்சிமா பெனிபிட் பண்ட் லிமிடெட்
மேக்சிமா கிரெடிட் லிங்க்ஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா சிட்ஸ் மெட்ராஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி

உங்கள் முதலீட்டிற்கு

25%

வட்டி+
1% ஊக்கத்தொகை
வழங்குகிறது

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக முதலீடு செய்யும் பொழுதே வழங்கப்படும்.

உங்கள் வருங்காலக் கனவுகளை நனவாக்கும் வளமான சேமிப்புத் திட்டங்கள்.

பிக்சட் டெபாசிட்	ஒவ்வொரு மாதம், காலாண்டு, அரையாண்டுகளில் வட்டி வழங்கப்படும்.	குறைந்தபட்ச முதலீடு ரூ.5,000/-
குமுலேட்டிவ் டெபாசிட்	45.60% P.A அதிக பட்ச வட்டியாக பெறுவீர்	ரூ.5,000/-
கோல்டன் டெபாசிட்	முதலீடு 3 வருடங்களில் இருமடங்காகும்	ரூ. 7,500/-

மேக்சிமா - உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

காலம்	வட்டி
12 மாதங்கள்	26.80 %
24 மாதங்கள்	30.40 %
36 மாதங்கள்	32.66 %
48 மாதங்கள்	39.67 %
60 மாதங்கள்	45.60 %

மேலும் விவரங்களுக்கு
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி
பதிவு அலுவலகம் : 1, வேதாந்த தேசிகர் தெரு, லஸ் பஜார் அருகில், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 4941849, Fax : 044-4347655. தந்தி : MAXFIN
தலைமை அலுவலகம் : 146, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018. தொலைபேசி : 456950 / 458549 / 452559
கார்ப்பரேட் அலுவலகம் : 'ஜெயம் பில்டிங்' AA-147, 3வது அவின்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040. தொலைபேசி : 6280468

Aparna

கிளை அலுவலகங்கள் : -

K.R. பில்டிங் 124-A. லேட்டிஸ்பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை - 600 020 தொ.பே. 415511

'ராஜ ராஜேஸ்வரி டவர்' 567-568, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர்-641 018. தொ.பே. 231938

மேக்சிமா - அதிகபட்ச நம்பிக்கைக்குரியது.

"என்னுடைய தாயார் உறையூரில் இருக்கிறாள். அவளைப் பார்க்கும் ஆவலில்தான் சீக்கிரமாய்ப் போக விரும்புகிறேன்."

"இதென்ன? நீர் செண்பகத் தீவைச் சேர்ந்தவர் என்றல்லவா சொன்னீர்?"

"என்னுடைய சொந்த ஊர் உறையூர் தான்; சில வருஷங்களுக்கு முன்பு பொருள் தேடுவதற்காகச் செண்பகத் தீவு சென்றேன். உறையூர் பல்லவ ராஜ்யத்துடன் சேர்ந்து விட்ட பிறகு, அதன் பழைய செழிப்பெல்லாந்தான் போய் விட்டதே? இராஜ குடும்பம் இல்லாத ஊரில் இரத்தின வியாபாரம் என்ன நடக்கும்?"

இராஜ குடும்பத்தைப் பிரஸ்தாபித்தால், ஒருவேளை ராணி அருள்மொழியைப் பற்றி வீரசேனன் ஏதாவது சொல்லக் கூடுமென்று விக்கிரமன் எதிர்பார்த்தான். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. அதன்பின் வீரசேனன் சாப்பிட்டு முடியும் வரையில் மௌன விரதத்தை மேற்கொண்டிருந்தான்.

சாப்பாடு முடிந்த பிறகு, விக்கிரமன் மறுபடியும் அந்தச் சிற்ப மண்டபத்தின் கதையைச் சொல்லும்படி கேட்டான்.

"ஐயா, தேவசேனரே, உமக்கு மரணத்தில் நம்பிக்கை உண்டா?" என்று ஒற்றர் தலைவன் கேட்ட போது, விக்கிரமனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இதென்ன கேள்வி? மரணத்தில் நம்பிக்கை உண்டா என்றால்?...."

"அதாவது மனிதர்கள் உண்மையில் மரணமடைகிறார்கள் என்பதாக நீர் நினைக்கிறீரா? 'உயிர் போய் விட்டது' என்று நாம் சொல்லும் போது, உண்மையில் உயிர் போகிறதா? அல்லது உடல் மட்டும் போய் உயிர் இங்கேயே இந்த உலகத்திலேயே, சுற்றிக் கொண்டிருக்கிறதா? இறந்து போனவர்கள் நம்மைப் பற்றி நினைக்கிறார்களா? நம்மைப் பார்க்க வருகிறார்களா? நம்முடைய நடவடிக்கைகளை அவர்கள் கவனிப்பதுண்டா?"

விக்கிரமனுக்கு ஏனோ தன்னுடைய தந்தை பார்த்திப மகாராஜாவின் நினைவு வந்தது. அவருக்குத் தான் கொடுத்த வாக்குறுதியும் ஞாபகம் வந்தது. அவர் இப்போது இவ்வுலகில் இருந்து தன்னுடைய செயல்களைக் கவனித்துக் கொண்டு வருகிறாரா?

"எனக்கும் உங்களைப் போல் சில சமயம் தோன்றுவதுண்டு. அந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பாரைத்தான் காணோம்."

"எனக்கென்னவோ, மரணம் என்பதே பொய் என்று தோன்றுகிறது. மரணத்துக்காக விசனப்படுவது பெரும் மூடத்தனம் என்று நினைக்கிறேன். இதோ இந்த வீட்டில் முப்பது வருஷத்துக்கு முன்னால் ஆயனச் சிற்பியும் அவருடைய மகள் சிவகாமியும் வாழ்ந்தார்கள். அப்போதெல்லாம் இங்கே ஜல்ஜல் என்ற சதங்கை ஒலியும், கல்கல் என்ற கல்லுளி ஒலியும் மாறி மாறிக் கேட்டுக் கொண்டிருக்கும். சிவகாமி அற்புத நடனம் ஆடுவாள். அவளுடைய நடனத் தோற்றங்களைப் பார்த்துப் பார்த்து ஆயனச் சிற்பி சித்திரம் எழுதுவார்! சிலைகள் அமைப்பார்..."

"ஓகோ! இந்தத் தெய்வீகக் களையுள்ள பெண் அந்தச் சிவகாமிதானா?"

"ஆமாம்; அப்போது நான் இங்கே அடிக்கடி வருவதுண்டு. மகேந்திர சக்கரவர்த்தியின் காலம்... அவருடைய புதல்வருக்கு அச்சமயம் உம்முடைய வயதுதானிருக்கும். அவருடன் - நரசிம்மவர்மருடன் - நானும் வருவேன். தூரத்தில் வரும்போதே, இந்த வீட்டுக்குள்ளிருந்து சதங்கையின் ஒலி கிளம்புவது கேட்கும். ஆயனரும் சிவகாமியும் இப்போது இங்கே இல்லை என்று என்னால் நம்பவே முடியவில்லை. அவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். இதோ! உற்றுக் கேட்டால் சதங்கையின் ஒலியும் கல்லுளியின் ஒலியும் என் காதுக்குக் கேட்கின்றன..."

விக்கிரமனுடைய ஆவல் அளவுகடந்து பொங்கிற்று. ஆயனரையும் சிவகாமியையும் பற்றி விவரமாய்ச் சொல்ல வேண்டுமென்று வீரசேனரை வேண்டிக் கொண்டான். அவரும் விவரமாகச் சொன்னார். ஆயனருடைய அபூர்வ சிற்பத் திறமையைக் குறித்தும், அவருடைய பெண்ணின் அற்புத சௌந்தரியத்தைப் பற்றியும், அவளுடைய நடனக் கலைத் திறனைப் பற்றியும் சொன்னார். நரசிம்ம சக்கரவர்த்தி, இளவரசராயிருந்த காலத்தில் அவருக்கும் சிவகாமிக்கும் ஏற்பட்ட தெய்வீகக் காதலைப் பற்றி லேசாகக் குறிப்பிட்டார். வடக்கேயிருந்து இராட்சதப் புலிகேசி படையெடுத்து வந்ததினால் அந்தக் காதல் தடைப்பட்டது பற்றியும், சிவகாமியைப் புலிகேசி சிறைபிடித்துச் சென்றது பற்றியும் விவரித்தார். சிவகாமியை விடுவிக்க நரசிம்மர் செய்த முயற்சிகளையும் சிவகாமியின் சபதத்தையும், அதை நரசிம்மர் நிறைவேற்றி வைத்ததையும், இவ்வளவுக்கும் பிறகு சிவகாமி தன்னுடைய காதல் பூர்த்தியாக முடியாத காதல் என்பதை உணர்ந்து நெஞ்சு உடைந்ததையும் பற்றிச் சொன்னார்.

கதையைக் கேட்டுக் கொண்டு வரும்



வண்ணப்படம் : யோகா

போது, விக்கிரமன் பல தடவை கண்ணீர் விட்டு விட்டான். நரசிம்ம சக்கரவர்த்தியின் மேல் அவனுக்கிருந்த மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. அவரிடம் அவனுக்கு அபிமானமே உண்டாகி விட்டது. பார்த்திப மகாராஜாவுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை நினைத்துக் கொண்டு, நரசிம்மர் தன்னுடைய குலப்பகைவர் என்பதை ஞாபகப் படுத்திக் கொண்டான்.

கதை முடிந்த சமயம், வெள்ளி முளைத்து விட்டது. ஒரு நாழிகைப் பொழுதுதான் அவர்கள் தூங்க முடிந்தது. பட்சிகளின் உதயகீதத்தினால் எழுப்பப்பட்ட விக்கிரமன் கண் விழித்த போது, முதல் நாள் இரவின் சம்பவங்கள் எல்லாம் கனவோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. சுற்றுமுற்றும் பார்த்து, "கனவல்ல; எல்லாம் உண்மைதான்" என்று நிச்சயம் பெற்றான்.

"ஐயா, தேவசேனரே! குதிரை சிரம பரிகாரம் செய்து கொண்டு சித்தமாயிருக்கிறது. நம்மைப் போல் அது இரவில் கண் விழிக்க வில்லையல்லவா? நீர் காலைக் கடன்களை முடித்ததும் உறையூருக்குக் கிளம்பலாம்" என்று ஒற்றர் தலைவனின் குரல் வெளியிலிருந்து கேட்டது.

அவ்விதமே காலைக் கடன்கள் முடிந்து, கிழவி அளித்த எளிய உணவையும் உட்கொண்டபின் விக்கிரமன் வீரசேனரிடம் விடைபெற்றான். அப்போது அவன், "ஐயா! உமக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். என் உயிரைக் காப்பாற்றியதற்குப் பிரதி ஒன்றும் செய்ய முடியாது. ஆனாலும் குதிரையை இலவசமாகப் பெற்றுக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. குதிரைக்கு ஈடாக இந்த இரத்தினங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று ஒரு கைப்பிடி இரத்தினங்களை அள்ளிக் கொடுத்தான்.

"நீர் சொல்வது தவறு. என் அருமைக் குதிரையை நான் உமக்குத் தானம் செய்யவில்லை; இரவலாகத்தான் கொடுத்திருக்கிறேன். உறையூரில் உமது காரியத்தை முடித்துக் கொண்டு இதே இடத்தில் வந்து திருப்பிக் குதிரையை ஒப்புவிக்க வேண்டும்" என்றான் ஒற்றர் தலைவன்.

"அப்படியே செய்கிறேன்; ஆனாலும் என்னுடைய நன்றிக்கு அறிகுறியாக இந்த இரத்தினங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்றான் விக்கிரமன்.

வீரசேனன் அதற்கிணங்கி இரத்தினங்களைப் பெற்றுக் கொண்டான்.

விக்கிரமன் குதிரை மீதேறியதும், ஒற்றர் தலைவன் குதிரையைத் தட்டிக் கொடுத்து, "ஐயா! இந்தக் குதிரை அடிக்கடி உறையூருக்குப் போய்ப் பழக்கமானது. அதற்கே பாதை நன்றாகத் தெரியும். அதன் வழியே விட்டு விட்டால் உம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடும். நீர் வழி விசாரிக்க வேண்டிய அவசியமே இல்லை" என்றான்.

குதிரை காட்டுப் பாதையில் போகத் தொடங்கியது. சிற்பியின் வீடும் ஒற்றர் தலைவனும் மறையும் வரையில் விக்கிரமன் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான். காலை வெளிச்சத்தில் அந்த ஒற்றர் தலைவனைப் பார்த்த போது ஆஜானுபாகுவான அவனது கம்பீரத் தோற்றமும் முகப்பொலிவும் விக்கிரமனுடைய மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. வெகுநேரம் வரையில் அந்தத் தோற்றம் அவனுடைய மனத்தை விட்டு அகலவில்லை.

(தொடரும்)

இது என்ன ராகம்!

நான் எதிர்பார்க்கவில்லை. குணா அப்படி சொல்வார் என்று. நெஞ்சு லேசாய்ப் படபடத்தது. தவறு என் மீதுதானோ என எனக்குள் கேள்விகள் ஓராயிரம். விடைக்காக நெஞ்சு அலைமோதியது.

நீளமான அவர் வாக்கியங்களுக்கு 'ஸாரி' என்கிற ஒற்றை வார்த்தை மட்டும் சொல்லி விட்டு, திரும்பிப் பார்க்காமல் வந்து விட்டேன்.

ஆனால் வீட்டுக்கு வந்தபின் மனசு கிடந்து தவிக்கிறது. என்னை... என் மனசை பொறுமையாய் புரியவைத்திருக்கலாமா... நெளிந்தேன்.

'அர்ச்சனா... நான் இங்க வேலைக்குச் சேர்ந்ததுல இருந்து உங்களை கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன். உங்க தனிமை, அளவான பேச்சு, சிரிக்காத முகம்... எல்லாமே வித்தியாசமா மனசுக்குப் படுது. நீங்க ஒரு விடோ என்பதால் மத்தவங்க கூட அளவாப் பேசி, மத்தவங்க தப்பாப் பேச இடம் தராம.... உங்க பயம் புரியுது. ஐ லைக் இட். இதுதான் உங்களை நேசிக்க வச்சதுன்னு சொல்ல முடியாது. இன்னும் என்னென்னவோ... உங்களை நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். உங்களுக்கும் சம்மதந்தானா?'

இன்னும் கூட குணாவின் அந்த வார்த்தைகள் துல்லியமாக காதுக்குள் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. 'ஸாரி' என்ற என் வார்த்தையைக் கேட்ட பின்னும், 'ஸீ யு அகெய்ன். லெட்'ஸ் ஹேவ் ஸம் குட் நியூஸ்...' என்றார். அதற்கு என்ன அர்த்தம்...? அவரைக் கட்டுப்படுத்துகிற மாதிரி நான் பதில் சொல்லவில்லையா? ஸாரி என்பதில் கடுமை இல்லையா...? அப்படியானால்... நானா? நான்...?

ச்சே, நத்திங். மூன்றே வருஷம் என் கணவருடன் வாழ்ந்திருந்தாலும் அதில் நான் அடைந்த நிறைவும் திருப்தியும் அலாதி. அது போதும் இந்த ஒரு பிறவிக்கு. கம்பெனியில் ட்ரான்ஸ்ஃபர் கேட்டு இடம் மாறிக் கொள்ளலாமா? போகிற இடத்தில் இதே மாதிரி குணாக்கள் இருக்க மாட்டார்கள் என்பதும் நிச்சயமில்லையே... ஏன் கோழையாய் ஓட வேண்டும். நான் யாரைப் பார்த்து பயப்படுகிறேன்? குணாவைப் பார்த்தா... அல்லது என்னைப் பார்த்தா? புரியவில்லை.

என்னவோ தெரியவில்லை. மறு நாள் காலையில் கூட அதே நினைவு தான். நான் ஒதுக்கி வைத்தாலும் மனசு என்னவோ அதையே இழுத்து வைத்து 'கொஞ்சி'க் கொண்டிருக்கிறது.

எப்படி? எதனால் இதெல்லாம்?

பேசாமல் ஆபீஸுக்கு இரண்டு நாள் லீவ் போட்டேன். வீட்டில் இருக்க முடியாது. நினைவே என்னை அழித்து விடும். எங்கே போகலாம்? கலா நினைவுக்கு வந்தாள்.

கலா தனியார் டி.வி. ஒன்றில் நிகழ்ச்சி தயாரிப்பாளராக இருக்கிறாள். வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினேன்.

என்னைப் பார்த்த கலா, "வா... அர்ச்சனா. என்ன திடீர்ன்னு?" என்று ஆச்சரியமாய் வரவேற்றாள்.

"பார்க்கலாமுன்னு தோணிச்சு. வந்தேன். ஏன் வரக் கூடாதா?"

"ச்சீ. கோவிச்சுக்கிறியே... இரு... கொஞ்சம் வெயிட் பண்ணு. சொல்லி விட்டு வந்திடறேன்..." என்றவள், பத்து நிமிஷத்தில் வந்தாள்.

"வா. வெளியே போய்ப் பேசலாம்..."

"உன்னை டிஸ்டர்ப் பண்றேனா...?"

"இல்லடி. இப்ப அப்படியொண்ணும் பிஸியில்லை. அது சரி... நீ என்ன டல்லா இருக்கே?"

அது ஏன்... நான் சந்தோஷமாக இருந்தாலும் சோகமாக இருந்தாலும் மட்டும் மற்றவர்கள் எளிதாய் கண்டு பிடித்து விடுகிறார்கள்?

"என்னை ஒருத்தர் லவ் பண்றார் கலா."

என்னிடமிருந்து இப்படிப்பட்ட வார்த்தையை கலா எதிர்பார்க்கவில்லையோ? அவள் அழகான முகம் டக்கென்று சுருங்கியது.

"ரியலி?"

"ம்ம்."

"யார்?"

"கம்பெனி ஆள்."

"வயசு?"

"கிட்டத்தட்ட என் வயசுதான்."

"ரொம்ப சந்தோஷமா இருக்கு அர்ச்சனா..."

என்னது... அது கலாதானா... யாரோ ஒருத்தன். நான் விதவை

என்று கூடப் பார்க்காமல் லவ் பண்றதாச் சொல்றான்! அந்தக் கேட்டு இவ சந்தோஷமா இருக்குன்னு சொல்றானே...

"என்ன கலா நீ...? நான் எப்படி ஏத்துக்க முடியும்?"

"ஏன்?"

"புரியாம கேட்கறியே... மனசு இன்னும் என் ஹஸ்பெண்டை மறக்கலை..."

"அதுக்காக?"

என்ன சொல்வது... எப்படிச் சொல்வது... என்னை அவளுக்குப் புரியவைக்க முடியவில்லை. புரிய வைக்கிற அளவுக்கு என் மனசும் இடமாய் இல்லை. பலவீனமான என் மனசை நான் இன்னும் சரியாய்ப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறேனோ.

"புருஷன் செத்த பிறகு நீ உன்னை விரும்பறவரை ஏத்துக்கறதுல என்ன தப்பு...? இதோ பார் அர்ச்சனா... உனக்கு வயசு முப்பதுதான். இன்னைக்கு இருக்கற உலகம் இப்படியே இருந்துடாது. உனக்கு ஒரு துணை

எஸ்.எஸ்.பூங்கதிர்


வேணாமா? உன்னைத் தேடி வர நல்ல வாழ்க்கையை ஏன் வேணாமுன்னு சொல்றே...?"

கலாவை ஏன் பார்க்க வந்தோம் என்றாகி விட்டது. எனக்கு ஆறுதல் சொல்வாள் என நினைத்தால்... குழப்புகிறாளே...!

படுக்கையில் வந்து விழுந்தேன்.

'குணா... நீ நல்லவன்தான். அழகானவன் தான். நல்ல வேலையில்தான் இருக்கிறாய்... என்னைக் கடைசி வரை பாதுகாப்பாய்... நம்பிக்கை இருக்கிறது. ஆனால்... என்னை மன்னித்து விடு. எனக்கு தைரியம் இல்லை.'

எனக்குள் நானே பேசிப் பார்த்தேன். இதைச் சொல்லும் போது குணாவின் முகம் எப்படி இருக்கும்? கண்கள் கலங்கிக் கண்





''இந்த டாக்டர் செருப்பு கடையும் வெச்சிருப்பாரோன்னு ஏன் சந்தேகப் படறே?''

''எனக்கு வைத்தியம் பார்த்த பிறகு பணம் எவ்வளவு கொடுக்கணும்னு கேட் டதற்கு ரூ.117.95ன்னு சொன்னாரே!''

– து.பூவராகன்

ணீர் வழியுமா? பார்க்க ஆசையாக இருந்தது. ..ஏன்...? ஒரு ஆணை அழவைத்துப் பார்க்க வேண்டும் என்று ஏன் தோன்றுகிறது? ஒரு ஆண், என் கணவர் - வாழ்க்கை முழுதும் என்னை அழவைத்து விட்டுப் போய் விட் டார் என்பதாலா... அதற்காகத்தான் இன் னொரு ஆண் கண்ணீரைத் துடைக்கிறேன் என்கிறானே... நம்பலாமா? ச்சீ, புத்தி போகி றது பார். மனசில் படிந்ததை 'ரப்பர்' போட்டு அழித்தேன். அழித்த கவடு தெரிந் தது. மனசு வலித்தது.

'நீயே உனக்குள் அவரை நேசிக்கிற அர்ச் சனா. இல்லேன்னா இவ்வளவு தூரம் என் னைத் தேடி இந்த விஷயத்தைச் சொல்ல வந்திருக்கு மாட்ட. அவர் சொன்னதும் உடனே பதில் சொன்னியே, அந்த நிமிஷமே அதை மறந்திருப்பே...'

கலா சொன்னது நிஜமா?... எனக்குள் விழுந்த சந்தேகம் என்னைச் சிலிர்க்க வைத் தது.

விடிந்ததும் கண்ணாடி முன் நின்றேன். இன்னும் அழகாய் இருக்கிறேனா... குறிப்பாக இளமை இன்னும் இருக்கிறதா? ஏன்...? ஏன்...? மனசு அலைபாய்கிறது? சட் டென்று 'இது தேவை இல்லாத கேள்வி' என்று உள் மனது கோபித்துக் கொள்கிறது.

குளிக்கும் போது குணா... குணா... குணா... எனக்குள் நுழைந்து, எனக்குள் மலர்ந்து, எனக்குள் சிரித்து...

ஆபீஸில் குணா அடிக்கடி என்னைப் பார்ப்பதை ஓரக்கண்ணால் கவனித்தேன். இத்தனை நாள் பார்வைக்கும் இன்றைய பார்வைக்கும் ஏதோ வித்தியாசம் இருப்பதை மட்டும் என்னால் உணர முடிந்தது. ஆனால் அந்தப் பார்வையின் அர்த்தம் மட்டும் புரிய வில்லை. அவர் பார்வை என் மேல் படும் போது எனக்குள் மின்னல்.

'குணா... இப்ப நான் பழைய அர்ச்சனா இல்லை. உன் வார்த்தையை நேசிக்கிற... உன் அன்பை பூஜிக்கிற... புது அர்ச்சனா. என்னை நம்ப முடியலையா? என்னாலே கூட நம்ப முடியலைதான். எப்படி மாறினேன்? புரி யலை... காலையில கிளம்பி வர வரைக்கும் கூட இந்த முடிவு இல்ல. குழப்பத்துலதான் இருந்தேன். ஆனா, இங்க வந்து உன்னைப் பார்த்த பிறகுதான்... குணா... என்னை ஏத்துப்பில்லே?'

மனசு தவிப்பது குணாவுக்குப் புரியுமா?

லஞ்ச்.

யாரும் இல்லை. என்னையும் குணாவை யும் தவிர...

டிபன் பாக்ஸை டேபிள் மேல் எடுத்து வைத்தேன். பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மூடி வைத்து விட்டு குணா எழுந்து வந்தார்.

மனசுக்குள் படபடப்பு... கல்யாணமான புதுப் பெண் மாதிரி...

''என்னை மன்னிச்சுடுங்க அர்ச்சனா...''

'திக்'கென்றது.

''ஏன்?'' என்னையும் அறியாமல் வார்த்தை வெளியே வந்து விழுந்தது.

''ஏன்?'ன்னு கேட்கறது உங்க பெருந் தன்மை. நான் ஏதோ அவசரப்பட்டு அன் னைக்கு உங்களை சந்தோஷப்படுத்தறதா நினைச்சு அப்படிக் கேட்டு கஷ்டப்படுத்திட் டேன். அது உங்க மனசை எந்த அளவுக்கு பாதிச்சிருக்குன்னு, எப்பவுமே லீவு போடாத நீங்க ரெண்டு நாள் லீவு போட்டுட்டு ஆபீ ஸுக்கு வராததுல இருந்து தெரிஞ்சுக்கிட் டேன். புருஷன் இருக்கும் போது இன் னொருத்தனை செட் பண்ணிக்கிற பொம்ப ளைங்க இப்பல்லாம் அதிகமாயிட்டு வராங்க. ஆனா, நீங்க...? உங்க புனிதமான தவத்தை நான் கலைக்க நினைச்சது தப்புத் தான். உங்க கூட வாழ கொடுத்து வைக்காம உங்க ஹஸ்பெண்ட் போயிட்டாரு. அவர் இடத்துல என்னை நினைச்சுப் பார்த்ததுக்கு... ஐயாம் ரியலி வெரி...வெரி...ஸாரி.''

சொல்லி விட்டு குணா வெளியே போய் விட, என்னால் பொங்கி வரும் அழுகை யைக் கட்டுப்படுத்த முடியாமல் எழுந்து பாத்ரூமுக்கு ஓடினேன், அழுவதற்காக.


சலவைக்கு சலவை!
சலுகைக்கு சலுகை!
இலவசம்!
ரூ. 1.25 மதிப்புள்ள ஒரு கேஸ்பர் கொசுக்களை விரட்டும் மேட் ஒவ்வொரு 300 கிராம் டோட்டல் பாருடன் அல்லது 250 கிராம் டோட்டல் கட்டியுடன்
CASPER
இலவசம்!
Total
BLUE DETERGENT BAR
ரூ. 2.50 மதிப்புள்ள இரண்டு கேஸ்பர் கொசுக்களை விரட்டும் மேட்கள் ஒவ்வொரு 500 கிராம் டோட்டல் பாருடன்
இலவசம்!
Total
BLUE DETERGENT BAR
500 gms
Rs. 10.75 only
CASPER
CASPER
டோட்டல்
நீல டிட்டர்ஜெண்ட் பார்
MSIL
A product of
Mysore Sales International Limited
Bangalore-560 052.

கடலில், சூரியா!

1

பத்மா ரவிசங்கர்

"Espionage is like roller skating, you partly go where you want to and partly where the damned thing takes you!"

S.N.M.ABDI

புது டில்லி, டிசம்பர் 19, 1994

இந்திய உளவுத் துறையின் ஏஸ் ஏஜண்ட் சூர்யாவிற்கு அவசர அழைப்பு வந்தபோது காலையில் கடும் குளிரில் டில்லி வெடவெடத்தது.

சூர்யாவிற்கு 32 வயது. திடகாத்திரன். மனம் மயக்கும் ஸ்திரமான புன்னகை தவழும் வசீகர முகம். கூரிய பார்வை; மூளை. அடாவடித் தடாலடி ஸ்பை. பார்க்கிங்கிலிருந்து முகப்பிற்கு வந்தான். 'புண்ணாக்கு வியாபாரம்' என்பது போன்ற அபத்த விளம்பர அழுக்குப் பலகை தாங்கிய சாதாரண கட்டடம்தான் அது.

உள்ளேதான் அத்தனை அசாதாரணங்களும்! அவசர டெலக்ஸ்கள், கம்ப்யூட்டர்கள், சென்சிடிவ் ரிசீவர்கள், பல வண்ணப் பொத்தான்கள், இன்ன பிற ஹைடெக் கனோபரங்கள் என்று இந்திய இன்டலிஜென்சின் நவீன நரம்பு மையம்!

அதன் மதிப்பு மிகு தலைவர் ஆத்மாவிற்கு ஊடுருவும் பார்வை; நானாவித டோஸியர் விவரங்கள் பொதிந்த அகன்ற நெற்றி. துறையின் பெருமிதச் சொத்து அவர்.

அவர் ஒரு பானத்தை இரு கோப்பைகளில் வார்த்தவாறு, "அசகாய சூரன் சூர்யாவிற்காக அலுவலக விதி தளர்த்தப்படுகிறது!" என்று கண்சிமிட்டினார்.

"எப்போதும் எதிரி தேசம் மண் கவ்வ!" என்று டோஸ்ட் செய்துவிட்டுப் பருகினர்.

"ஓர் அவசர வேலை மகனே! உடனே நீ சென்னை சென்று ஒரு விஞ்ஞானிக்குப் பாதுகாப்புச் செய்ய வேண்டும்."

"ஆசாமி யார் பாஸ்?"

"ஸ்பேஸ் சைன்டிஸ்ட் ப்ரகாஷ்ராவ்!"

சூர்யா சுத்தமாக அதிர்ந்து, "வ்வாட்!" நம்பாமல், "எங்கே... மறுபடி சொல்லுங்கள்" என்றான்.

"நம் விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானி ப்ரகாஷ் ராவ்."

தன் தலைவர் ஆத்மாவிற்கு நட்டு ஏதும் கழன்று விட்டதோ என்று வினோதமாகப் பார்த்தான். கார் விபத்தில் சிக்கிய ப்ரகாஷ் ராவ் முகம், உடல் முழுதும் கட்டுக்களுடன் கோமா நிலையில் புது டில்லி ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வர... என்ன உளறல் இது!

ஆத்மா நமுட்டுச் சிரிப்புடன், "ஹூம்.. நீ என்ன... உலகத்தையே குழப்பி வைத்திருக்கிறேன்!"

"சஸ்பென்சில் மண்டை வெடிக்கிறது பாஸ்."

"நான் சொல்லப் போவது டாப் சீக்ரட் சூர்யா. விஞ்ஞானி சென்னையில் தனிமையில் அதி ரகசியமாக அதி நவீன ராக்கெட்-பெயர் ஹஸ்த்திரா- பற்றிய ஆராய்ச்சியில் இருக்கிறார். அடுத்த நூற்றாண்டின் நவீனம் அது! மிக ரகசியமாக வைக்க விரும்பியது அரசு. எனவேதான் அந்த விபத்தை 'செட்டப்' செய்தேன்!"

"என்னது... செட்டப்பா!" வாய் பிளந்தான்.

"விபத்தில் நொறுங்கியது அவர் கார்தான். அடையா

ளம் மறைத்து, முகம் முழுதும் கட்டுக்களு டன் 'விஞ்ஞானியாக' ஒருவன்; அதுவும் கோமா நிலையில். இடையூறின்றி உலகம் அறியாமல் ஆராய்ச்சி தொடரப் போதாதா இந்த ஏற்பாடு?''

''ப்ரில்லியண்ட் பாஸ்! ராக்கெட் ரகசியங் கள் அம்பலமாகும் சமீபகாலச் சூழ்நிலை யில் இந்த தந்திரம் அவசியம்தான்.''

''அவருக்குப் பாதுகாப்பும் அவசியம் என்று உணர்கிறேன். ஓசைப்படாமல் நடக் கும் ரிசர்ச்சிற்கு ஒரு பாதுகாப்புப் படை வைத்து நாமே சங்கை ஊதிக் கெடுத்துவிடக் கூடாது! உன் போல் தேர்ந்தவன் ஒருவன் கண்காணித்து டிஸ்க்ரீட்டாகப் பாதுகாப்பு செய்தால் போதும் என நினைக்கிறேன்.''

பெருமிதமுடன் ஆமோதித்தான்.

''சைன்டிஸ்ட் ப்ரகாஷ் ப்ராஜக்ட் ஏறக் குறைய முடிவடையும் தருவாயில். உலகத் திற்கு, முக்கியமாக பாகிஸ்தான் மூக்கு வியர்க்குமுன்— விஞ்ஞானியைக் கவன முடன் பாதுகாத்து, ப்ராஜக்ட் முடிந்ததும் அதன் ஃபைலை என்னிடம் நீ ஒப்படைக்க வேண்டும். புரிந்ததா? சென்னை சென்றதும் நம் கிளைத் தலைமை அதிகாரி விஸ்வத் திற்குப் பிரத்யேக போனில் தகவல் மட்டும் அளித்து விடு. உதவிக்கு நம் துறை ஆசாமி கள் கூட வேண்டாம்; நம் ஒற்றில் ஓட்டை இருக்கலாம். அவசியமின்றிப் போலீஸ் துணை நாடாதே; எந்தப் புற்றில் எந்தப் பாம்போ..! காதும் காதும் வைத்தாற்போல் காரியம் முடிந்துவிட வேண்டும், என்ன?''

''டன் பாஸ்! அது என்ன விநோதமாக ஹஷ்த்திரா?''

''ராக்கெட் HUSH HUSH ரகசியம் என்ப தால் 'அஸ்த்திரம்' ஹஷ்த்திரா ஆகியது சூர்யா!''

ஆத்மா குறும்பாகச் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''நம் வயதான் விஞ்ஞானி சற்றுப் பொக்கை வாயாகையால் அஸ்த்திராவை ஹஷ்த்திரா என்று உச்சரிக்கிறார் மகனே!''

உளவுக் கிழவனுக்கு என்ன திமிர்! விர லில் துப்பாக்கி அமைத்து ஆத்மாவை நோக் கிச் சுட்டான் சூர்யா.

அன்று மாலையே சூர்யா சென்னைக் குக் கிளம்பினான். அவன் சில முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருந்தான். ஏனெனில் சூர்யா என்பவன் உளவுத் துறை யின் தூண்; வலையிலிருந்து நழுவும் நரி மூளை எத்தன்; எதிரிகளுக்கு நிரந்தரத் தலை வலி. அவனைக் கண்காணிக்க, முதுகில்



குக்க அழித்துவிடப் பலர் துடிப்புடன் காத் திருக்கிறார்கள். மாலையில் மாறியிருந்தான் சூர்யா:

ஒட்டுத் தாடி. பொருந்தாத முட்டை வடிவக் கண்ணாடி. நெற்றி வரை மறைத்த தொப்பி. வேறொரு பெயரில் விமான டிக்கட் பதிவு. எப்போதும்... எப்போதும் எச்சரிக்கை.

தோளில் ஒரு லெதர் பேக் தவிர்த்து யாதொரு லக்கேஜும் இல்லாமல் விமான நிலையத்திற்குக் கிளம்பினான். தன் காரைத் தவிர்த்துவிட்டு, மூன்று வாடகை வண்டிகள் மாற்றிப் பயணித்தான்.

எவரும் பின்பற்றவில்லை என்பது உறுதி யானதும் திருப்தியானான் சூர்யா.

ஆனால் அவன் கண்ணுக்கெட்டாத தொலைவில் பைனாகுலரில் ஒரு ஜோடி வெறித்த விரோத விழிகள் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தன!

சென்னை, டிசம்பர் 19, 1994

சென்னை விமான நிலையத்தில் சூர்யா கால் பதித்தபோது இரவு 7:30. சென்னை வியர்ப்பதில் வியந்தான். வாசலில் ஒரு டாக்ஸி தேர்ந்தெடுத்து அமர்த்திக் கொண் டான்.

கெச்சலாக இருந்த டிரைவர் "எங்கே சார்?" என்றான். இந்தியாவின் பல நகரங் கள், மற்றும் அண்டை நாடுகளின் 'பலான' நகரங்களின் 'டோப்போகிராஃபி' சூர்யா வுக்கு அத்துப்படி. சென்னை விதிவிலக் கல்ல.

"நான் மஃப்டி போலீஸ் அதிகாரி! சொல் றபடி கேட்கணும், என்ன?" என்றான் கண் டிப்பான குரலில்! "முதலில் பாரீஸ் கார்னர் போகலாம்."

டிராங்க் ரோடில் டாக்ஸி சீராகச் சென் றது. சாலையில் சோடியம் வேப்பர் விளக்கு களின் அபாரப் பகல் முயற்சி. இடைவெளி இல்லாமல் கவரொட்டிகள்; கட்- அவுட்டு கள். அனைத்திலும் பிரதானமாக ஒரு முகம். புன்னகைத்தான். 'சென்னை சென்றதும் ரொம்பத் தாழப் பறக்காதே ஜோ! கட்- அவுட்டுகள் ஜாக்கிரதை!' என்று ஏர் ஹோஸ்டஸ் சிரித்தது ஞாபகம் வந்தது.

இரண்டு நிமிடம் சென்றதும் அவனுக் குள் சிவப்பு விளக்கு திக்கென்று விழித்துக் கொண்டது. பின்னால் தொலைவில் ஒரு சிவப்பு மாருதி விடாமல் பின்பற்றுவதைக் கவனித்தான்!

"கொஞ்சம் வேகத்தைக் குறை."

சிவப்பு மாருதியும் வேகம் குறைவதைக் கவனித்தான். ஆபத்து. பின்பற்றும் நிழல் மகனைத் தொலைத்தே ஆக வேண்டும்.



எம்.எல்.ஏ: ஒரே இடுப்புவலி. குனிய முடியலை, நிமிர முடியலை. பதவியை ராஜி னாமா செய்யலாம்னு நினைக்கிறேன்.

நண்பர்: அடடா, இதுக்கும் பதவிக்கும் என்ன சம்பந்தம்?

எம்.எல்.ஏ: காலிலே விழும்போதெல்லாம் குனிய வேண்டியதாயிருக்கே...

- தேனி முருகேசன்

காரை நிறுத்தச் சொன்னான்.

நட்ட நடு சாலையில் டாக்ஸி நின்றது. இருக்கை மாறினர். சூர்யா கனவேகமாக் காரைக் கிளப்பினான்.

"ம்ம்... நல்ல கன்டிஷனில்தான் வைத் திருக்கிறாய்! இப்போது பார் வேடிக்கை..."

தேச சேவையில் குறுக்கிடா செய்கிறாய்... உள்ளுக்குள் உறுமினான். அடாவடி சூர்யா விதிகளைக் காற்றில் பறக்க விட்டான்.

சடுதியில் நூறைத் தொட்டு, தொடர்ந்து ஹாரனைப் பேய்த்தனமாக அலறவிட்டு, லஜ்ஜையின்றி ராங் சைடில் பயணித்து எதிர் வரும் லாரி, பஸ்களைத் தவிர்த்து இரண்டு முறை சிக்னல்களை சர்வ அலட் சியமுடன் அத்து மீறி, கிடைத்த வாகன இடைவெளிகளில் புகுந்து புறப்பட்டு...

கிண்டி வந்து சேர்ந்தபோது அந்த சிவப்பு மாருதி எங்கோ கண்காணாமல் பின் தங்கி விட்டிருந்தது. சூர்யா முறுவலித்தான். பீதியில் நடுங்கித் திகிலடித்துப் போய்க் கிடந்த டிரைவரிடம் திரும்பி "சாரி!" என்றான். நிம்மதி மூச்சுடன் வேகம் குறைத் துச் சீராகச் செலுத்தினான்.

அதே சமயம், பரங்கி மலையைச் சமீ பித்திருந்த சிவப்பு மாருதிக்காரன் வயர் லெஸை உசுப்பி சைதாப்பேட்டையில் காத் திருந்த பச்சை மாருதியை அழைத்து, "சாரி துரை! பயல் டபாய்ச்சுட்டுப் போயிட்டான்! ஓவர்."

நந்தனம் கடக்கையில் பச்சை மாருதி ஒன்று வால் பிடித்துக் கொண்டதைப் பார்த் துப் பெருமூச்சு விட்டான் சூர்யா. சற்று முன்னர் நிகழ்த்திய சாகசம் இனிச் சாத் தியமில்லை. காரணம் சாலையை வகுந்த மீடியன் க்ராதித் தடுப்புக்கள். நத்தையாக நகரும் நெரிசல்.

விஞ்ஞானியைக் காக்கும் பணி கவலை கொள்ளச் செய்தது. சூர்யா என்ற அசகாய ஒற்றனை மட்டுமே நம்பி ஒப்படைக்கப் பட்ட இரகசியமான பெரும் பொறுப்பு இது. அவனைக் குறி வைத்து எவரோ அவன் வரு கையை அறிந்திருக்கிறார்கள். இவர்கள் அவனைத் தொடர்ந்தால் போதும்; ராக் கெட்டைத் தட்டில் வைத்துக் கொடுத்தது போல...!

ஃபாலோ செய்யும் மாருதியில் இருவர் இருந்தது தெரிந்தது. தடியர்களைத் தற்சம யம் தாக்குவது உசிதமல்ல. யார் அவர்கள்? துரோக இந்தியரா? காசுக்காகச் செய்யும் கூலிப் படையா? பாகிஸ்தானியரா? வேறு நாட்டினரா? எவனாயிருந்தால் என்ன? அவர்களுக்கு 'அல்வா' கொடுத்தாக வேண் டும்...

மேம்பாலம் தாண்டியதும் எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிட்டியது. அண்ணா சாலையின் இடப்புறம் அருகருகாக ஒரு தியேட்டர், ரெஸ்டாரெண்ட் கண்டதும் மலர்ந்தான். தியேட்டர் முகப்பில் ஹவுஸ்ஃபுல் போர்டு. நல்லது.

ரெஸ்டாரெண்டின் வாயிலில் டாக்ஸி நின்றதும் தாராளமாகப் பணம் தந்துவிட்டு, "இங்கேயே ஒரு மணி நேரம் இருந்து விட் டுக் கிளம்பு!" என்றான்.

"புரியுதுங்க சார். உள்ளே சாப்பிடற உங் களுக்காக வெயிட்டிங் மாதிரி போஸ் கொடுக்கணும்!"

தேவலையே என்று சிலாகித்துச் சிரித் தான். உளவில் எல்லாமே ஏமாற்றுத்தான்...

ரெஸ்டாரெண்டின் பாத்ரூமில் மளமளவென மாறுவேடம் கலைத்துவிட்டுத் திரும்பினான். ரெஸ்டாரெண்டில் ஏசி. இசை இழை. தட்டில் இருப்பது ஈயா, மிளகா எனத் தெரியாத மங்கல் வெளிச்சம். முகப்பைப் பார்த்தபடி அமர்ந்தான். நேரம் 8:30.

கொஞ்சம் தேநீரும், நிறைய அவகாசமும் வாங்கிக் கொண்டான்.

பக்கவாட்டுப் பார்க்கிங்கில் பச்சை மாருதி கண்ணாடித் தடுப்பு வழியாகத் தெரிந்தது. இரு தடியர்களும் டாக்ஸியை செவ்வனே 'கவர்' செய்தபடி... நன்றாகக் காத்திருக்கட்டும்.

இரவு 9:00. மனிதத் தலைகள் தென்படத் துவங்கின. தியேட்டர் 'ஷோ' முடிந்திருக் கிறது. நிமிட முடிவில் ஏராளமாக ஜனத் திரள் பெருகியது. பிளாட்பாரத்தில், சாலை யில், ரெஸ்டாரெண்டில்... எங்கும்... எங்கும் மனிதர்கள்... பல்கிப் பரவிய வண்ணம்...

சூர்யா தாமதியாமல் எழுந்து - அந்த ஜன சமுத்திரத்தில் கரைந்து - வந்து நின்ற



கோயில் கொடி மரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிரகாரங்களில் விழுந்து வணங்குதல் கூடாது. விநாயகரை ஒரு முறையும் சிவமூர்த்தியை மூன்று முறையும் அம்பிகையை நான்கு முறையும் 'வலம்' வருதல் வேண்டும்.

—வாரியார் வாக்கு.

தகவல்: டி.எம்.முருகானந்தம்

****

ஒரு நெரிசல் பஸ்ஸில் பயணித்து – எங்கோ இறங்கி– ஏதோ ஒரு லாட்ஜில் இரவைக் கழித்து – ஓர் உளவாளியின் வாழ்க்கை!

சென்னை, டிசம்பர் 20, 1994

விஞ்ஞானி ப்ரகாஷ் ராவிற்குப் பஞ்சாக நரைத்த தலை. ரிம்லெஸ் கிளாஸ் வழியே 'லேசர்' கண்கள். சதா குப் குப்பென்று புகையும் பைப்.

பெசண்ட் நகரில் சந்தேகம் தராத பக்கா குடியிருப்புப் பகுதி அது. ஹூம்... இங்கே இந்தியாவின் நாளைய ராக்கெட் திட்டம் உருவாகிறது என்று எவர் நம்புவர்... நாளும் நாடறியா பல அந்தரங்கங்கள் இப்படித்தான் ஆங்காங்கே அரங்கேறிய வண்ணம்...

"சூர்யா காஃபி!" க்ளுக்கென்று சிரித்துவிட்டு, "டில்லியில் கோமாவென்று கதை பண்ணி எவனையோ என் மனைவி போலித்தனமாக அடைகாக்க – இங்கே நான் வெளித் தொடர்பு இழந்து சுய சமையலில்! ஹூம்... எல்லாம் நம் தாய்த் திருநாட்டிற்காக!"

ப்ரகாஷைப் பெருமிதமுடன் பார்த்தான் சூர்யா.

அடுத்திருந்த அறைக்கு இட்டுச் சென்றார். ஒரு பிசியும், பல காகிதங்களும் இறைந்திருக்க, மேசை மேல் சிறிய பிளாஸ்டிக் மாடல் ராக்கெட் பொம்மை.

"அதுதான் நம் ஹஸ்த்திரா! பெரிய சோதனைச்சாலை எதிர்பார்த்திருப்பாய்! சிக்கலான வரை படங்கள், புள்ளி விவரக் கணக்குள், தியரிக்கள் என ஏராளமாக பேப்பர் வொர்க்தான் முதலில். இன்னும் சில நாட்களில் செம்மையாக முழுமையாகி விடும் என நம்புகிறேன்."

"ஆல்ரைட் சார். நீங்கள் நிம்மதியாக உங்கள் ஆராய்ச்சியைத் தொடருங்கள். நான் அடிக்கடி வந்து தங்களைச் சந்திப்பது ஆபத்து. இயன்றபோது வருகிறேன். அதிகம் நெருங்காமல் எங்கிருந்தாவது கண்காணித்துக் கொண்டு உங்களுக்குப் பாதுகாவலாக இருப்பேன்..."

மதியம்... சில அத்தியாவசிய ரெடிமேடு ஆடைகள் வாங்கிக் கொண்டதும் அதிகாரி விஸ்வத்திற்கு தொலைபேசியில் தான் வந்து சேர்ந்ததை மட்டும் தெரிவித்தான். வேகமாகச் சிந்தித்தவாறு நடந்தான்.

நேற்று பின்பற்றிய 'மாருதி நெட்வொர்க்' ஆசாமிகள் இந்நேரம் தங்கள் ஆட்களை அலர்ட் செய்து நகரத்து ஹோட்டல்களைக் கண்காணித்தபடி தனக்காகக் காத்திருப்பார்கள். வசதியாக வசிக்க, பதுங்கிக் கொள்ள வீடுதான் வசதி. அதுவும் பெசண்ட் நகர் பக்கமிருப்பது சாலச் சிறந்தது.

பணத்திற்கு உள்ள மதிப்பே அலாதியானது. ஒரு புரோக்கரிடம் கூடுதலாகக் காசு வீசியதும் மாலையே அடையாறில் சிறிய வீடு மாத வாடகைக்குச் சிக்கியது.

டிசம்பர் 22, 1994

சூர்யா சுதந்திரமாக உணர்ந்தான். இதுவரை எந்த ஒரு பிரச்னையும் இல்லை. வால் ஏதும் தென்படவில்லை. அதை மேலும் உறுதி செய்து கொள்ளவே சுற்றிக் கொண்டு பயணித்து கடற்கரை லைட் ஹவுஸ் வரை வந்திருந்தான்.

சுண்டல் விற்பவனைக் கூடச் சந்தேகம் விலக்காமல் பார்த்தான். இரவு 8:00. சிலுசிலு காற்றிலிருந்து மீள மனமில்லாமல் எழுந்து கொண்டான். பின்னால் கண் பதித்து நடந்தான்.

ஆல் இந்தியா ரேடியோ தாண்டியதும் மைலாப்பூர் வஸ் நோக்கிச் சென்ற ஒரு தெருவில் பிரவேசித்தான். டீ.வி. கட்டிப் போட்டிருக்க, தெருவே காலி. அதன் முடிவில் நீளமான இருண்ட சந்து ஒன்று தென்பட்டது.

அதனுள் நுழைவதற்கு லேசாகத் தயங்கினான். ஹோல்டரில் துப்பாக்கி. உபரியாக பிளாக் பெல்ட். துணிந்து சந்தினுள் பிரவேசித்தான் சூர்யா. இருள். லேசாக அசுத்த வாடை.

சிறிது தூரம் சென்றதும் திடுக்கிட்டான். அங்கே... அங்கே....

அங்கே ஒரு கயவன் ஒரு இளம் பெண்ணைப் பலாத்காரம் செய்ய முயலுவதைக் கண்டான்!

(தொடரும்)



இறக்கும் போதும் சிரிக்கின்றார்!

சில பிரபலங்கள் இறப்பதற்கு முன் உதிர்த்த, முத்திரை வாக்கியங்கள் :

- தன்னைச் சுற்றி தனக்கு நெருங்கியவர்கள் அனைவரும் நிற்பதைப் பார்த்த எழுத்தாளர் லேடி அஸ்டார் :

"நான் இறந்து கொண்டிருக்கிறேனா அல்லது இன்று என் பிறந்தநாளா?"

- மாவீரன் அலெக்ஸாண்டர் :

"மிக அதிகமான மருத்துவர்களின் உதவியுடன் நான் இறந்து கொண்டிருக்கிறேன்!"

- நாவலாசிரியர் ஜொனாதன் ஸ்விஃப்ட் மரணப் படுக்கையில் இருந்த போது கவிஞர் ஹண்டெல் அவரைப் பார்க்க வந்துள்ளதாகச்செய்தி வந்தது :

"உடனே அழைத்து வாருங்கள். ஜெர்மானியராகவும் இருந்து கொண்டு மேதையாகவும் விளங்கும் உலக அதிசயமாயிற்றே அவர்!"

- ஹாலண்ட் பிரபுவின் கடைசி உத்தரவு:

"மிஸ்டர் செல்வின் வந்தால் உள்ளே அனுப்புங்கள். அப்போது நான் உயிரோடிருந்தால் அவரைப் பார்த்ததில் நான் மகிழ்வேன். இறந்திருந்தால் அவர் மகிழ்வார்."

- நிக்கோலஸ் பாய்லூ என்ற பிரபல பிரெஞ்சு விமர்சகரிடம் (அவர் உடல்நிலவரத்தை உணராமல்) ஒரு எழுத்தாளர் தன் லேட்டஸ்ட் நாடகத்தைப் படிக்கக் கொடுக்க :

"என்னை இன்னும் *சீக்கிரமே* மரணம் நெருங்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டீர்கள் போலும்!"

- பிரெஞ்சு எழுத்தாளர் பெர்னார்ட் ஃபான்டெனெல்லே :

"எனக்கு எந்த உபாதையும் இல்லை. தொடர்ந்து இந்த உலகில் இருப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. அவ்வளவுதான்."

- பொருளாதார மேதை ஆடம் ஸ்மித், சூழ்ந்திருந்த தன் நண்பர்களிடம் :

"இந்தக் கூட்டத்தை நாம் இத்துடன் முடித்துக் கொள்வோம். அடுத்த சந்திப்பு வேறொரு இடத்தில் நிகழும் என நம்புகிறேன்."

— குல்லூ

'I Wish I'd said that' என்ற நூலிலிருந்து.



எறும்பார் ரிப்போர்ட்:

மண்டேலாவுக்கு மண்டை இடி!

"இது அநியாயம்; அக்கிரமம்!" என்று ஆன்டனா துடிக்க, ஒரு பேப்பர் கட்டிங்கை என் முகத்துக்கு நேராக விசிறினார் மிஸ்டர் எறும்பு.

"இந்தப் படத்தைப் பாரு - கார்டியன் வீக்லீன்ற பிரிட்டிஷ் பத்திரிகைல வந்தது. நம்ம குடியரசு தினவிழா அணி வகுப்புல எடுத்த போட்டோ - காந்திஜி முகம் மாதிரி பிளாஸ்டிக் பலூன் பின்னணில... அதைத் தாண்டி ஒரு ஏவுகணை வண்டி வரப்போ போட்டோ எடுத்துப் போட்டு, 'டெல்லி குடியரசு தினவிழா அணி வகுப்பில் காந்தி பொம்மை, போர் ஆயுதத்தைப் பார்க்கிறது...' அப்படின்னு கீழே கமெண்ட்டும் குடுத்திருக்காங்க" என்றார்.

"அதனால என்ன?"

"சில்மிஷம் இல்லையா....?"

"இதுல என்ன சில்மிஷம் இருக்கு...? நம்ம நாட்டுல இருக்கிற முரண்பாடை அழகா ஒரு போட்டோ மூலமே கட்டிக் காட்டியிருக்காங்க."

"அமைதியாப் போராடி சுதந்திரம் வாங்கி இப்போ ஆயுதமா குவிக்கறோம்ங்கறாங்க - அப்படித்தானே....?"

"சும்மா பதறாதீங்க! அவங்க நினைக்கறதை விட அதிகமான அர்த்தத்தை நீங்களே கற்பனை செய்துக்குவீங்க போலிருக்கே? உலக அமைதியையே காந்தி விரும்பினாலும் தேசப் பாதுகாப்புக்குத் தயாராக இருப்பதை அவர் ஒன்னும் ஆட்சேபிக்கலைங்கறதை அந்தப் படம் உணர்த்தறதா சொல்வோமே!"

"சமாளி, சமாளி!" என்ற எறும்பார், "நம்ம குடியரசு தினத்துக்கு விருந்தினரா நெல்சன் மண்டேலா வந்திருந்தாரே... அவர் கூட இப்ப ரொம்ப டிரபிள்ல இருக்கார் பார்த்தியா" என்று 'டிராக்' மாறினார்.

"ஆமாம். ஏதேதோ பெரிய திட்டங்களெல்லாம் அறிவிச்சாரில்லையா... அதையெல்லாம் நிறைவேத்த முடியாம போயிருக்கும்..."

"ம்... மறுசீரமைப்பு திட்டம். அந்தத் திட்டப்படி இது வரைக்கும் ஆயிரம் வீடு கட்டிக் குடுத்திருக்கார், அவ்வளவுதான் - மத்தபடி ஒரு வேலை வாய்ப்பு கூட புதுசா உருவாக்கித் தர அவரால முடியல... இப்படி திண்டாடறவருக்குத் தோள் குடுக்காம, தோழமை கட்சித் தலைவர் புதெலிஸி திடீர்னு ஆதரவை நீக்கிகிட்டாரு... போதாக்குறைக்கு மனுஷனைப் பெண்டாட்டி வேற படுத்துறாங்க..."

"முன்னாள் பெண்டாட்டி..."

"சரி முன்னாள்... ஊழல் குற்றச்சாட்டுல தான் மாட்டிக்கிட்டு, இப்ப பிரச்னையை திசை திருப்பறத்துக்காக, 'அரசாங்கம் ஏழைகளையெல்லாம் அலட்சியப்படுத்துது...' அப்படின்னு அறிக்கை விடறாங்க!"


மண்டேலா

"ஆக அந்த ஊர்லயும் ஜனங்களுக்கு நம்மள மாதிரி நாய்ப் பிழைப்புதான்..."

"நாய்கள் பாடு எவ்வளவோ மேல். இப்ப அமெரிக்காவுல நாய்களுக்கு ஒரு புதுவிதமான மருந்து குடுக்கறாங்களாம் - உண்ணி தொல்லை வராம இருக்கிறதுக்கு. அந்த மருந்தைச் சாப்பிட்ட நாயைப் பெண் உண்ணிகள் கடிச்சா அதுங்க மலடாயிடுமாம். அதனால நாய் உடல்ல முட்டை இட்டுப் பெருகாதாம். மாசம் ஒருமுறை குடுக்கறாங்க. பக்க விளைவெல்லாம் இருக்காதாம்.... நம்ம ஊர்ல கொசுவுக்கு எதிரா அப்படி ஒரு மாத்திரை கண்டு பிடிச்சா எவ்வளவு நல்லாயிருக்கும்..." என்றார் மிஸ்டர் எறும்பு.

"கொசு மாதிரியே வெடுக்குன்னு கடிக்கிற இன்னொண்ணும் இருக்கு...." என்று நான் கொஞ்சம் குறும்புடன் பார்க்க, ஜிவு ஜிவு என்று முகம் சிவக்க கோபித்துக் கொண்டு போய் விட்டார் மிஸ்டர் எறும்பு.





சந்தை

● மேடையில் பேசலாம் வாருங்கள்/அறந்தை நாராயணன்/நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98/ரூ. 14/-.

பெரியாரைப் பிரிந்து வந்ததும் அண்ணா பேசிய பேச்சு, ஜீவாவின் பாரதி விழாப் பேச்சு எனச் சுவையான உதாரணங்களுடன் மேடைப் பேச்சுக்கான ஆரம்ப தைரியம் ஊட்டும் நூல்.

● மகளிர் வளர்த்த தமிழ்/அ.ச. ஞானசம்பந்தன்/கங்கை புத்தக நிலையம், சென்னை - 17/ரூ. 12/-.

சங்க காலப் பெண் புலவர்களின் கருத்து வளமும் கவிதை நயமும் ஆசிரியரின் அழகுத் தமிழில் புதுப்பொலிவு பெறுகின்றன.

● நகரச் சுவர்கள்/எஸ். வைதீஸ்வரன்/ஸ்நேகா, 348, டி.டி.கே. சாலை, சென்னை-14/ரூ. 35/-.

மேலே
வெள்ளைச் சுவரில்
மெல்லிய நிழல்கள்
சிலந்தியின் கலைக்கு
செலவற்ற விளம்பரங்கள்.

- முகம் மலரச் செய்யும் சிறு காற்றாகவும், நிலத்தின் தோலை எரிக்கும் சூரிய நெருப்பாகவும் ஆழமாக உணர்ந்து கொள்ள வேண்டிய கவிதைத் தெறிப்புகள்.

● பாட்டி சொல்லைத் தட்டாதே/புத்தகப்பித்தன்/கங்கா - காவேரி, 17, காரியாங்குடி தெரு, நாகை - 1/ரூ. 10/-.

அவ்வையின் அறிவுரைகள். பள்ளி மாணவர்களுக்குப் பயன்தரும்.

● மானுடமே சிறகைவிரி/கோ. வெள்ளைச்சாமி/இந்திய கலாசார நட்புறவுக் கழகம், செங்கல்பட்டு/ரூ. 18/-.

கற்பனை வேகமும் கந்தக வீச்சும் கைகோத்து வந்திருக்கிறது இக்கவிதைத் தொகுப்பில்.

● அழுகும் பொருள்களைப் பாதுகாப்பது எப்படி?/மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17/ரூ. 7.25.

இல்லத்தரசிகளுக்கும் அழுகு பொருள் விற்பனையாளர்களுக்கும் உதவக் கூடிய நூல்.

● வேர்ப்பற்று/இந்திரா பார்த்தசாரதி/தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 600 017/ரூ. 45/-.



ஓர் இளைஞனின் சுயசரிதம் மாதிரி விரியும் நாவல். சுதந்திரத்துக்கு முன்னும் பின்னுமாக - கால மாற்றம், சமூக மாற்றம் ஆகியவை தரும் பாதிப்பில் ஒரு தனி மனிதனின் இருப்புநிலை எத்தகைய மாறுதலுக்குள்ளாகிறது என்பதை விறுவிறுப்புடன் சித்திரிக்கிறது.

● தமிழில் ஆட்சிச் சொற்கள்/டாக்டர் செல்வராஜ்/அன்பு பதிப்பகம், சென்னை - 14/ரூ.75/-.

சங்க காலம் முதல் இக்காலம் வரை வரலாற்று அடிப்படையில் தமிழில் ஆட்சிச் சொற்களை வகைப் படுத்தியிருக்கிறார். நல்ல முயற்சி.









● புலிகள் தப்பிப்பதற்கு, வேண்டுமானால் என் மீது பழிபோடுங்கள். முதல்வர் ஜெயலலிதா மீது பழி சுமத்தாதீர்கள். உங்களுக்கு தைரியம் இருந்தால் என்னைப் பதவி விலகச் சொல்லுங்கள். பட்டுக்கோட்டைக்கு வழி எப்படி என்று கேட்டால் கொட்டைப் பாக்குக்கு விலை சொல்கிறார் குமரிஅனந்தன்:

– கே.ஏ. கிருஷ்ணசாமி.

● ஒரு ரூபாய் சம்பளம் பெற்ற ஜெயலலிதாவுக்குக் கடந்த ஆண்டு வருமானம் 27 கோடி ரூபாயாம். அதுவும் அவருக்கு ஐதராபாத்தில் உள்ள திராட்சை தோட்டம் மூலம் வருகிறதாம். ஆந்திராவில் மட்டும் திராட்சைத் தோட்டத்தில் திராட்சை காய்க்கிறதா அல்லது 500 ரூபாய் நோட்டு காய்க்கிறதா?

– திருநாவுக்கரசு.

● ஆட்சி எனும் யானையின் பக்கத்தில் நிற்கும் பெருமிதத்தில் அமைச்சரால் என்னைப் போன்றவர்களைக் குதிரையுடன் ஒப்பிட்டுப் பேச முடிகிறது. அதுவும் நொண்டிக் குதிரை என்று....

– முரசொலியில் கருணாநிதி.

● ''முதல்வர் பதவியில் இருந்து என்னை நீக்கினால் தேசிய அளவில் மோசமான அரசியல் பின்விளைவு ஏற்படும் என்று நான் கூறியது பற்றி, தவறான அர்த்தம் தருவது கவலை அளிக்கிறது.

– கேரள முதல்வர் கருணாகரன்.

● ''எதையும் தாங்கும் இதயம்'' என்ற அண்ணாவின் தாரக மந்திரத்தின் அடிப்படையில் ஆட்சி நடத்தும் புரட்சித் தலைவி, மக்களின் நலன் ஒன்றுதான் முக்கியம், மாற்றாரின் அவச்சொற்கள் தள்ளப்பட வேண்டிய ஒன்று என்கிற சித்தாந்தத்தில் ஆட்சி நடத்தி வருகிறார்.

– கா.ப. பட்டாபிராமன்.

● ''நாட்டில் ஊழல், பித்தலாட்டம் என்று இருக்கும் வேளையில் அதற்கு நேர்மாறான ஸ்தாபகமாக ஆர்.எஸ்.எஸ். செயல்படுகிறது. நான் சிறு வயதில் இந்த இயக்கத்தில் இருந்திருக்கிறேன்.

– ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

● *சீண்டாதே! சீண்டாதே! கிறிஸ்தவர்களை சீண்டாதே! மன்னிப்புக் கேள்! மன்னிப்புக் கேள்! பகிரங்க மன்னிப்புக் கேள்! கலையுலக நடிகையே! கன்னிமேரியாக முடியுமா?*

– ஆர்ப்பாட்டத்தின் போது கிறிஸ்துவப் பெண்கள் கோஷம்.

● 356வது பிரிவைப் பயன்படுத்த குமரி அனந்தன் எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்? ஜெயலலிதா விரித்த வலையில் அவர் சிக்கிக் கொண்டார்!

– வாழப்பாடி ஆதரவு எம்.எல்.ஏக்கள்.





லவுட் ஸ்பீக்கர்

வட்டமேஜை

என்னவென்று சொல்வதம்மா?

♦ 'கனவு தேசத்தின் காமிரா கலைஞர்' தலைப்பே ஹைகூ போல இருந்தது. இந்த நூற்றாண்டின் இறுதியில் ஆங்காங்கே பெண்கள் பளிச்சிடுவது, பாரதியின் கனவு நனவாவதைக் காட்டுகிறது. பேட்டியாளரின் சாதுர்யமான கேள்விகளுக்கு விஜயலட்சுமியின் பதில்கள் அவருடைய தெளிவைக் காட்டியது.

வேப்பங்காடு, வி.ஆர். ரவிச்சந்திரன்

♦ கனவு தேசத்து காமிரா கலைஞரின் அட்டைப்படம் அசத்தல். சாதிக்கும் ஆற்றல் முகத்தில் தெரிகிறது. விமர்சனம் வித்யாசமாக இருந்தது. இளையராஜாவைப் பாராட்டிய விதம் கலக்கல்.

தூத்துக்குடி, சிவராமசுப்பிரமணியன்

♦ வழக்கமாக மக்கள் முகங்களில் கமிஷன்கள் தாம் கரி பூசும்; கமிஷன் முகத்திலேயே கரி பூசி விட்டாரே எறும்பார்! ரிப்போர்ட் பலே!

மடிப்பாக்கம், அய்யாறு வாசுதேவன்

♦ கல்கி 26.2.95 இதழில் எங்கள் வங்கியில் ஹோமம் நடத்ியது பற்றி எழுதியிருக்கிறீர்கள். செலவை, வரி செலுத்தும் இந்நாட்டு மக்கள் ஏற்றதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது தவறு. எங்கள் வங்கி அரசுடைமையான வங்கியல்ல. தனியார் துறையைச் சார்ந்தது. மேலும் இங்கு பணிபுரிவோருக்கு சில விபத்துக்களும் அசம்பாவிதங்களும் நடந்ததன் தொடர்பாக பரிகாரம் கருதி அவர்கள் வேண்டுகோளின் பேரிலேயே ஹோமம் நடத்தப்பட்டது. இதனை, நடவடிக்கைக்கு உள்ளான வங்கி ஊழியர் ஒருவர் திசை திருப்பி, வங்கி கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளானதாகவும் அதனால் பரிகாரம் தேடும் வகையில் ஹோமம் நடத்தப்பட்டதாகவும் கதை கட்டிவிட, பத்திரிகைகளும் பெரிது படுத்தி விட்டன.

சென்னை-2, பொதுஜனத் தொடர்பு அதிகாரி, பாரத் ஓவர்ஸீஸ் வங்கி.

♦ மக்களை எந்த வகையிலாவது கவர வேண்டும் என்பதற்காக தேர்தலுக்கு முன்பு வாக்குறுதிகளை அள்ளி வீசுவது, வெற்றி பெற்ற பின்னர் மைய அரசு உதவி செய்ய வேண்டும் என்று கூறி ஜகா வாங்க முயல்வது போன்ற விஷயங்களில் எல்லா மாநில அரசியல்வாதிகளும் ஒரே மாதிரிதான் போலும்!

மருங்கூர், பால. கிருஷ்ணமூர்த்தி.

♦ வாய்க்கு வந்தபடி வாக்குறுதி தந்து விட்டு, மத்திய அரசுதான் உதவியாக வேண்டும் என்று கூக்குரலிடும் என்.டி.ஆர். போன்றவர்களை என்னவென்று சொல்வது? 'தேர்ந்த' அரசியல்வாதி?

பூவிருந்தவல்லி, கு.ப. இரகுநாதன்.

♦ "பாகிஸ்தான் மீது விழுந்த இடி" – தலையங்கம், வெல்டன் பாருக் அப்துல்லா என சொல்ல வைத்தது.

ஈரோடு, டி. சந்திரன்

♦ 'சித்ரன்' எழுதிய "இன்னுமொரு ஞாபகம்" நினைவில் நிற்கக் கூடிய சிறு கதைதான் என்றாலும் சென்னையிலிருந்து கோவைக்கு பஸ்ஸில் பயணித்த கதாநாயகி, வழியில் திருச்சியில் இறங்கிக் கொண்டாள் என்று இருக்கிறதே! மறக்க முடியாத தவறாக அமைந்து விட்டதே!

திருச்சி-21, வெ. ஜயந்தி.

♦ தவிப்பு சிறுகதையில் வரும் செண்பகாவின் தவிப்பு, அனைத்து தாய்மார்களுக்கும் பொதுவான விஷயம். திறமையாகக் கையாண்டிருந்த ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.

திருச்சி, எஸ்.வி. ஹேமாவதி.



♦ "என்ன கணேசா... மொட்டை பழநியா... திருப்பதியா?"

"யோவ்... கிண்டலா...இப்பதான்யா 26 கூப்பனையும் கல்கிக்கு அனுப்பிட்டு வரேன்!"

சென்னை-30, புளியரை கணேசன்.

♦ சிவராத்திரி சிலிர்ப்பு கட்டுரையில் (கல்கி 26.2.95) "விஷ்ணு, சிவ வேடத்தில் என் மனசுக்குக் காட்சியளித்தார்" என்று கட்டுரை ஆசிரியர் எழுதியிருந்தால் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால், 'துளசி மாலைக்குப் பதில் வில்வமாலையும் நெற்றியில் வைர விபூதி பட்டையும் தீபாராதனை ஒளியில் பளிச்சிட்டன' என்று எழுதுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அந்தணல்லூர், எஸ். முரளி.

சரவணா பில்டர்ஸ் [பி] லிட்.,

சரவணா பல ஆண்டுகளாக நல்ல பல திட்டங்களை வகுத்து பல தொழில்களில் முதலீடு செய்து அதிகபட்ச லாபத்தையும், உத்திர வாதத்தையும் உங்கள் முதலீட்டிற்கு அளித்து வந்துள்ளது.

இப்பொழுது உங்கள் முதலீட்டிற்கு

26%

வட்டியும்,

1%

ஊக்கத்தொகையும்,

பொன், வெள்ளி நாணயங்கள்
பரிசாகவும் வழங்குகிறது.

மாதம், காலாண்டு, அரையாண்டு,
ஆண்டு வட்டி பின் தேதியிட்ட காசோலைகளாக
முன்னதாகவே வழங்கப்படுகின்றது.

சரவணா

கிரெடிட் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ்

சிட்டி சென்டர் பிளாசா (முதல் மாடி) (எல்லீஸ் ரோடு முனையில்)
3, மவுண்ட் ரோடு, சென்னை-2. © 848486, 845462, 833828

சரவணனை நம்பியவர் வளருவர்


சரவணாவில் முதலீடு செய்தவர் மேம்பெறுவர்.

சரவணா பெனிபிட் பண்ட் லிட்.,

சரவணா சிட் பண்ட்ஸ் [பி] லிட்.,

பறக்கும் பாவை!





பெயர் : கல்பனா; ஊர்: கர்னால் (ஹரியானா); கனவு: விமானி ஆக வேண்டும்.

கனவு ஜெட் வேகத்தில்... இல்லையில்லை - ராக்கெட் வேகத்தில் நிறைவேறி கல்பனாவையே 'ஓவர் டேக்' செய்திருக்கிறது!

கனவு கண்ட போது கல்பனாவுக்கு வயது எட்டு. வீட்டுக்குப் பக்கத்து மைதானத்தில் வந்திறங்கிய பயிற்சி விமானங்களை ஆசையாசையாய்ப் பார்த்து, கற்பனையில் அவற்றை ஓட்டி இளமைப் பருவம் கழித்தவர்.

அப்பா டாக்டருக்குப் படிக்கச் சொன்ன போது மறுத்து, இஞ்சினியரிங் கல்லூரி சேர்ந்து ஏரோனாடிக்ஸ் பிரிவில் 'கொடி கட்டிப்' பறந்தார். பின்னர் நிஜமாகவே பறந்தார் அமெரிக்காவுக்கு. கொலராடோ பல்கலைக் கழகத்தில் டாக்டரேட்டுக்காக உழைத்தபடி விமான ஓட்டுனர் பயிற்சி முடித்து லைசன்ஸும் வாங்கினார்.

பறப்பதே பேச்சு; பறப்பதே மூச்சு என்றிருந்தவர் பக்கத்து வீட்டுப் பைலட்டைக் காதலித்து மணந்தது அதிசயமில்லை. அமெரிக்க கணவன் ழீன்-பியரி-ஹாரிசன் கொடுத்த உந்துதலில் விமானங்களிலிருந்து விண்வெளித் துறைக்குப் பறந்திருக்கிறார் கல்பனா.

NASA (அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு) விண்வெளிப் பயணம் மேற்கொள்ள ஆட்கள் தேவை என விளம்பரம் செய்த போது விண்ணப்பித்தார் கல்பனா. முதல் முறை நிராகரிக்கப்பட்டதைப் பொருட்படுத்தாமல் மீண்டும் விண்ணப்' ஏவுகணை அனுப்ப, ஆயிரக்கணக்காக ஆர்வலர்களிலிருந்து தேர்வு பெற்ற 122 பேரின் பட்டியலில் கல்பனா பெயரும் இருந்தது.

பின்னர் இண்டர்வியூ - பொது அறிவுக்குப் பரீட்சை, ஒரு டஜன் அதிகாரிகள் மாற்றி மாற்றி கேள்விக் கணைகள் தொடுக்க, நடுங்காமல் பதில் சொல்ல வேண்டிய நேர்முகம். 24 மருத்துவப் பரிசோதனைகளில் உடம்பை அலசி எடுத்தார்கள். மேலும் பரிசோதனைகள் மூலம் மனவியல் கணித்தார்கள். இந்த மனவியல் சோதனைகளில் கல்பனா வாங்கிய மதிப்பெண்களும் பாராட்டும் எக்கச்சக்கம்.

இதற்கெல்லாம் பிறகு எஃப்.பி.ஐ.யின் (அமெரிக்க உளவுத் துறை) கழுகுப் பார்வை கல்பனா பேரில். சொந்த வாழ்க்கை, பின்னணி, பழக்க வழக்கங்கள் என்று எல்லாவற்றையும் ஒரு அலசு அலசி ஓ.கே செய்தார்கள்.

தேர்வான செய்தி டெலிபோனில் வந்தபோது நினைவுகளில் பின்னோக்கிப் பறந்திருக்கிறார் கல்பனா. சொப்பு வைத்து விளையாடும் வயதில் விமானக் கனவுகள் கண்டதெல்லாம் நினைவு வர, கண்கள் பனித்திருக்கிறார்.

சோதனைகளின் கடுமையைப் பார்க்கும் போது, விமானப் பணிக்கும் விண்வெளிப் பணிக்கும் இடையே வெகுதூரம் இருப்பது புரிகிறது. அத்தனை தூரத்தையும் வைராக்கியத்துடன் கடந்துள்ளவர்; நாசாவில் முறைப்படி பயிற்சி பெற்று, விண்வெளியில் பயணிக்கும் முதல் இந்தியப் பெண்ணாக இருப்பார்.

கல்பனாவை எப்படிப் பாராட்டலாம்...? விண்வெளியில் பறக்கப் போகிறவர், விலைவாசி அளவுக்கு நம் மனத்தில் உயர்ந்து நிற்கிறார் என்று சொல்லலாம்!

— சுப்ரபாலன்.

நன்றி : டெக்கான் ஹெரால்ட்

"வாட் இஸ் யுவர் நேம்?

✸

ராமானுஜத்தின் கன்னம் பரபரவென்றிருந்தது. பதற்றத்தில் பிளேடு கோடிழுத்து விட்டது. அவன் இண்டர்வ்யூவிற்குக் கூட இத்தனை டென்ஷன் பட வில்லை...

✸

"அப்படியில்லடா செல்லம்... 'வாட் இஸ் யுவர் நேம்'னு கேட்டா... 'மை நேம் இஸ் ஆர்.கோவர்தன்'னு சொல்லணும். சரியா..."

குழந்தை தலையைச் சம்மதித்து ஆட்டும் போது அதற்குக் கொட்டாவி வந்தது... ராமானுஜமும் ஒரு வாய் தண்ணீர் குடித்தான்.

இது ஐம்பதாவது தடவையா... இருக்கும்.. கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாவது ஆகியிருக்கும்...ராமானுஜம் வேறு நாட்களில் இந்த ஒரு மணி நேரத்தில் ஒரு தூக்கம் போட்டிருப்பான்...

பள்ளியிலிருந்து தபால் வந்திருக்கிறது. குழந்தைக்கு நாளைய தினம் இண்டர்வ்யூ. எல்.கே.ஜி. நகரத்தின் பள்ளிகளில் இந்தப் பள்ளிக்குத் தான் எக்கச் சக்கமான கிர்த்தி.

ராமானுஜம் படித்த காலங்களில் இவ்வளவு முஸ்தீபுகள் இல்லை.. வீட்டின் பின்புறத்துச் சந்தில் கமிட்டி பாய்ஸ் ஸ்கூல். அக்கா கொண்டு விடுவாள். அப்புறம் பாதிரியாரின் பள்ளிக் கூடம். அதிகபட்சக் கட்டணமே பதினோரு ரூபாய் தான். அதுவும் முழுப் பரீட்சை எழுத அவர்கள் தரும் பேப்பருக்கான தொகை... அதுவே 'கொள்ளை' என்று பாட்டி முணுமுணுப்பாள் லேசில் தராமல்...

பாட்டி இன்றில்லை...

யூனிஃபாரம், ஷூ, டை, பை, தூள் துப்பட்டை என்று இந்நாளில் கல்யாண சாமான்களைப் போல பட்டியல் நீள்கிறது.

ராமானுஜம் பாதி விலைக்கு வாங்கிய புத்தகங்களில்தான் படித்தான். அதற்கு வேலையும் கிடைத்து விட்டது. அந்நாட்களில் அனைத்தும் எளிதாய் அமைந்தன.

இப்போது பையனுக்கு ஒத்திகை நடந்தாகிறது. இவனுக்கு வேலை கிடைக்குமா. அதற்கும் ஒத்திகை பார்க்க வேண்டியிருக்குமா. 'அயம் ஆர். கோவர்தன். பி.காம்., அப்போதும் பீகாம் இருக்குமா. வழக்கொழிந்து போயிருக்குமா...'

"கண்ணு...ம்.. சொல்லு. வாட்ஸ் யுவர் நேம்?"

"வாட்டீஸ் யுவர் நேம்" குழந்தை கிளிப் பிள்ளையானது.

"இல்லடா...மை நேம் ஈஸ்..." சொல்லும் போதே ராமானுஜத்திற்குக் கொட்டாவி வந்தது.

ராமானுஜம் மதுரை மொழியில் அதற்கு விளக்கினான். ஒவ்வொரு சொல்லாகச் சொல்லி அடுக்கினான்.

குழந்தை சற்று நேரம் தயங்கினாலும் சரியாகச் சொன்னது.

"மை நேம் ஈஸ் ஆர். கோவர்தன்."

ராமானுஜம் இறுக அணைத்துக் கொண்டான். குழந்தை சிரித்துக் கொண்டே திணறியது.

'ஒரு வாட்டி சொல்லு. வாட் ஈஸ் யுவர் நேம்?'

குழந்தை நேரம் எடுத்துக் கொண்டு பின் சொன்னது. ராமானுஜம் விடவில்லை.. இந்தச் சூட்டில் கேட்டால் தான் பதியும். பின்னணி இசையை வைத்தே 'தேவையில்லே பார்மசி' என்று பாடுகிறது.

இன்னும் ஏழெட்டு தடவை கேட்டான். இம்முறை குழந்தை பளிரென்று சொன்னது.

ராமானுஜம் மூச்சை இழுத்து விட்டான். இன்னும் ஏ.பி.சி. அ.ஆ.இ.ஈ. இருக்கிறது. பாடம் போதிப்பது புது அனுபவம்தான். இவ்வளவு நேரம் மன்றாடினால்தானே பலன் கிடைக்கிறது!

"என்னாங்க! அவனுக்கு இப்ப பால் குடுக்கணும்" மனைவி இரைந்தாள்... கொடுக்க வேண்டியது தான்.. பாவம் குழந்தை. ஒரு மணி நேரமாய்ச் சிரமப்பட்டிருப்பான்.

"கண்ணு... அப்பாக்கு ஒரே ஒரு வாட்டி... வாட்..."

முடிக்கும் முன் "மை நேம்



ஸ் ஆர். கோவர்தன்..." என்றது.

"ஓடுறா... இது போதும்.." முதுகில் தட்டிக் கொடுத்தான்.

நாளை இண்டர்வியூவில் வடிகட்டல் நடக்கும் என்று தெரிகிறது. நூற்றிருபது குழந்தைகளுக்குத்தான் அட்மிஷனாம். முதலில் விண்ணப்பம் வாங்குபவர்க்கு முன்னுரிமை என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் ராமானுஜம் ஓடினான். அவனுக்குத் தரப்பட்ட விண்ணப்பத்தின் எண் நூற்று நாற்பத்திரண்டு. கவலைதான். ஏதேனும் ரத்தானால் உடனே போடக் கூடிய 'காத்திருப்போர் பட்டியலிலும்' இல்லை. இருபத்து இரண்டு குழந்தைகளையா ரத்து செய்வார்கள்.

போட்டி வைத்து எடுத்தால் நம்பலாம். என்னதான் பள்ளியென்பது பிள்ளைகளுக்குச் சொல்லித்தர என்று இருந்த போதிலும், பெற்றோர் ஓரளவாவது பிள்ளைகளைத் தயாரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்...

"கோவர்தன்.. பால் சாப்ட்டியா.. கமான்... வாட்ஸ் யுவர் நேம்."

"மை நேம் ஈஸ்..." உள்ளிருந்து பையன் தேங்காய் உடைத்தான்.

'அடிப் பட்டு..' என்று தாயார் குழந்தைக்கு மெடல் கொடுத்து கேட்டது ராமானுஜத்திற்கு...

"ம்... சாமியக் கும்புட்டுக்கோ... விபூதி இட்டாச்சா... போலாமா. ராமானுஜத்தின் கன்னம் பரபரவென்றிருந்தது. பதற்றத்தில் பிளேடு கோடி முத்து விட்டது. அவன் இண்டர்வ்யூவிற்குக் கூட இத்தனை டென்ஷன் படவில்லை...

'பாய்ங்'

எதிரே பால் சைக்கிள் வந்தது. சூப்பர் சகுனம். அழாமல் டாட்டா சொன்னான். சைக்கிளில் அமர்ந்தான்.

ராமானுஜம் பள்ளியைப் பற்றி பையனுக்குப் புரியும் படியான விதத்திலும் விரும்பத்தக்க பாணியிலும் உயர்வாகவும் மகிழ்ச்சியூட்டும் படியும் அறிமுகம் செய்தபடி சைக்கிளை மிதித்தான்...

பையன் ஒரு கட்டத்தில் உற்சாகமாகி துணைக் கேள்விகள் கேட்டபோது ராமானுஜம் பாரம் இறங்கியவனானான்.

அடுத்து நடத்தை... பள்ளியில் யார் யாரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து... குட் பாய் என்று பேர் வாங்க வேண்டியதன் அவசியத்தைச் சொன்னான். பையன் தலையசைத்ததில் சிரத்தை தெரிந்தது.

பள்ளி கசகசவென்று கூட்டமாய் இருந்தது. எல்.கே.ஜி. தவிர இன்னும் வேறு வகுப்புகளுக்கும் இன்று இண்டர்வ்யூ போலும். எப்படி செய்வார்கள் ஒரேநாளில்... பையன்களை

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

ஒருமுறை அழைத்து விட்டு அனுப்பினாலே நேரம் போதாது... ராமானுஜம் கவலைப் பட்டான். புது மனிதர்களுக்கு முன்பு பையன் சொதப்பா மல் இருக்க வேண்டும்...

மூலையில் அழும் ஒரு சிறுவனையும் சமாதானப்படுத்தும் அதன் தாயாரையும் சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந் தான் கோவர்தன்.

ராமானுஜம் மெல்லிய குரலில் 'ராஜா வாட் இஸ்...'

"மை நேம் ஈஸ் ஆர். கோவர்தன்..."

ராமானுஜம் கூப்பிடுவதை எதிர்பார்த்து அமர்ந்திருந்தான்.

'ஆர். கோவர்தன்' என்று ப்யூன் அழைத்ததில் ஒரு நிமிடம் இயல்பாய் இருந்த ராமானுஜம் திடுக்கிட்டு பையனை அள்ளிக் கொண்டு போனான். கேண்டி டேட்டின் பெயரைத்தான் கூப்பிடுவார்கள் என்பது பிறகே நியாயமாய் உறைத்தது.

இண்டர்வ்யூ என்றால் பெரிய மேஜை, டெலிபோன், ஒரு குழு எல்லாம் நிறைந்தது என்பதை அந்தத் தனிமனிதர் சிறிய அறை யில் ஒற்றை மேஜையை வைத்துக் கொண்டு பொய்ப்பித்தார்.

ராமானுஜம் வணங்க, அமருமாறு சைகை செய்தார்..

"எல்.கே.ஜி.யா... நீங்க எதில வேலை பாக் கறீங்க?" ராமானுஜத்திடம் மிக நட்புடன் கேட்டார்.

"இங்கதான் எல்.எஃப் ஆடிட்ல" ராமா னுஜம் இழுத்தான்.

"எல்.எஃப் ஆடிட்டா.. மிஸ்டர் ராஜேந் திரன்னு..."

"ஆமா சார்.. காந்தி நகர்ல இருக்காரு... எம் 80ல வருவாரு.. என் பக்கத்து சீட்தான்." ராமானுஜம் தயக்கமின்றிப் பேசினான்.

"சரியாப் போச்சு... என் சகலைதாங்க.. இவ்ளோ தூரம் அலையாம, அவர்கிட்ட சொல்லியிருந்தா சுலபமாப் போயிருக் குமே...!"

ராஜேந்திரன், ராமானுஜத்தின் நண்பர் தான். ஆயினும் அவரது சகலை இந்த ஸ்திதி யில் இருப்பது தெரியாத ஒன்று.

"ஓ.கே. ஃபீஸ் நூத்தம்பது. டொனேஷன் டூ தௌஸண்ட், எல்லாருக்கும் அதான். ரிபேட் குடுத்துடுவோம். நீங்க கௌம்புங்க. என்ன பையா ஸ்கூலுக்கு அழாம வரு வியா?" என்றார் கோவர்தனின் கன்னத்தை நிமிண்டி.

"வாட் இஸ் யுவர் நேம்?" என்றான் கோவர்தன்.



அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்
(ஸ்ரீராகு ஸ்தலம்)
திருநாகேசுவரம் - கும்பகோணம் வட்டம்
நித்திய ஆராதனை கட்டளை வைப்பு நிதி

தமிழகத்தின் தொன்மையான திருக்கோயில்களில் திருநாகேசுவரம் அருள்மிகு நாகநாத சுவாமி ஆலயம் ஒன்றாகும். ஸ்ரீராகு பகவானால் பூஜிக்கப்பட்டு அவர் பெயர் விளங்க திருநாகேசுவரம் என இவ்வூர் வழங்கப்படுகிறது.

பூர்வ புண்ணிய பிராப்தம் இருந்தால்தான் இத்திருத்தலம் வர முடியும் என்பது அப்பர் சுவாமிகள் அருள்வாக்கு.

இத்திருத்தலத்தில் ஸ்ரீராகு பகவான் தன் இரு தேவியருடன் திருமண கோலத்தில் தனி சன்னதி கொண்டு தன்னை வணங்கி வருவோர்க்கு அருள்பாலித்து வருகின்றார்.

ஸ்ரீராகு பகவானுக்கு பால் அபிஷேகம் செய்தால் பகவானின் திருமேனியில் பால் நீல நிறமாவது இவரது அற்புதத்தை கண்கூடாக காட்டுவதாகும்.

தார தோஷம், திருமாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், கால சர்ப்ப தோஷம், ராகு திசை, ராகு புத்தி ஆகிய நடப்பில் ராகு பகவானால் ஏற்படக்கூடிய தோஷங்கள் நிவர்த்தியாகி ராகு பகவானின் அனுக்கிரகம் பெற பகவானுக்கு பால் அபிஷேக ஆராதனை செய்வதன் மூலம் சகல பாக்யமும் பெறலாம்.

இத்திருக்கோயிலில் தினசரி ஆறு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. தினசரி நடைபெறும் ஆறு கால பூஜைகளில் அன்பர்கள் கலந்து கொள்ளும் வகையில் நித்திய ஆராதனை கட்டளை வைப்பு நிதி திட்டம் துவக்கப்பட்டுள்ளது. நித்திய ஆராதனை கட்டணை வைப்பு நிதியாக ரூ. 1,000/- செலுத்தினால், அத்தொகை முதலீடு செய்யப் பெற்று, அதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து வருடத்தில் தாங்கள் குறிப்பிட்ட (பிறந்த நாள் அல்லது திருமண நாள்) ஒருநாளில் ஆறு கால பூஜைகளும் தங்களது குடும்பத்தாரின் பெயரில் நடத்தப் பெறும். மேற்கண்ட நித்திய ஆராதனை கட்டளையில் செலுத்தப் பெறும் தொகை மற்றும் பூஜைகளில் தாங்களும் தங்களது சந்ததியினரும் கலந்து கொண்டு இறைவனின் அருளை பூரணமாக அடைய கேட்டுக் கொள்கிறோம்.

கட்டணை விபரம்

பால் அபிஷேகம் (சாமான்கள் உட்பட)	ரூ. 50.00
கட்டளை அர்ச்சனை (12 மாதம்)	ரூ. 72.00
கோடி தீபம்	ரூ. 1.00
நித்தியாராதனை கட்டளை	ரூ. 1000.00

மற்ற விவரங்களுக்கு ஆலய அலுவலகத்தில் நேரிலோ (அல்லது) தபால் மூலமோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்,
ஆலய நிர்வாகிகள்

முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்,
திருநாகேசுவரம் (அஞ்சல்) - 612 204.
தஞ்சாவூர் மாவட்டம்.

எங்களது வங்கி : பாரத ஸ்டேட் பாங்கு, கும்பகோணம் - 612 001.

மதுரையில் அண்ணா, பெரியார் பஸ் ஸ்டாண்டுகளில்
●● பயணிகளின் சுமைகளை "தூக்கி வருகிறேன்" என்று கேட்பார்கள்.
"வேண்டாம்" என்று மறுத்தாலும் கூடவே சும்மா நடந்து வந்துவிட்டு,
வண்டியில் ஏறியதும் கூலி கேட்பார்கள்! கொடுக்காவிட்டால் ரவுடிகள்
போல நடந்து கொள்ள ஆரம்பிப்பார்கள்! காவல் துறை, உறக்கமா
உடந்தையா தெரியவில்லை!

எம். முருகேசன்.
இராமேசுவரம்.

1953 ஆம் ஆண்டில் முதலமைச்சர் ராஜாஜி திருவண்ணாமலைக்கு
●● விஜயம் செய்தார். நகர சபையினரால் புதிதாகக் கட்டப்பட்டிருந்த மார்க்
கெட்டைத் திறந்து வைத்தார். "ராஜாஜி மார்க்கெட்" என்ற பெயர்ப்
பலகையைப் பார்த்துவிட்டுக் கோபமும் அதிர்ச்சியும் அடைந்தார். "ஆண்ட
வன் திருவண்ணாமலையில் ஜோதி வடிவாக விளங்குகிறான். என் பெயரை
எடுத்துவிட்டு, 'ஜோதி மார்க்கெட்' என்று வையுங்கள்" என்று உத்தரவிட்
டார். ராஜாஜியின் எளிமையோடு இன்றைய அரசியல்வாதிகளின் ஆடம்
பரத்தை ஒப்பிடும்போது— ஹூம்.

எச். சுப்பிரமணியன்.
மதுரை.

●● பல்லவன்பேருந்துகளில் LSS. PP என்று மஞ்சள் போர்டு இருந்தாலும்
எல்லா ஸ்டாப்பிங்குகளிலும் நின்று ஆடி அசைந்துதான் போகின்றன.
கட்டணம் மட்டும் கூடுதல்! போதாக்குறைக்கு காலை அலுவலகம் விரை
யும் அவசர நேரத்தில்தான் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் ஏறித் தாமதம்
செய்கின்றனர். இதையெல்லாம் தாண்டி பீச் ரோடு வந்தால் முத
லமைச்சருக்காகப் போக்குவரத்து நிறுத்தப்படுகிறது!

சந்திரா ஜானகிராமன்.
சென்னை - 4.

●● யூகலிப்டஸ் மரங்கள் தமது வேர்களால் ஒரு மணி நேரத்
துக்குச் சுமார் 100 லிட்டர் தண்ணீரை உறிஞ்சும்! இலைகளோ
தங்களைச் சுற்றி ஓர் எண்ணெய்ப் பசையுள்ள மண்டலத்தை
உருவாக்கிக் கொள்ளும். இந்த எண்ணெய்ப் பசை மண்டலம்,
உருவாகும் மழைக் கருவைக் கலைத்துக் கொண்டே
இருக்கும். ஆக, அதிர்ஷ்டவசமாக மழைபெய்தால்தான்
உண்டு! இவ்வாறிருக்க, கொடைக்கானல் அரசு
நிலங்களில் யூகலிப்டஸையே மேலும் மேலும்
பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால்,
மழை பெய்வதும் குறைகிறது; இருக்கும்
நிலத்தடி நீரும் குறைகிறது. வெப்பம்
கூடிக் கொண்டே போகிறது.
இந்த அழகில் கொடைக்
கானலை, 'இந்தியாவின்
சுவிட்சர்லாந்து' என்று
விளம்பரப்படுத்துகிறது
அரசு!
மதுரை,

எம். ஜேசு பல்தசார்.

காவல் துறை :
உறக்கமா? உடந்தையா?

குமுறல் :

அடுத்த பிரதமரை நியம்

● என். கார்த்திகேயன், சென்னை.

? கள்ளர் பள்ளம் நீர் மின் நிலையத்தைக் கைவிடுவதாக முதல்வர் அறிவித்துவிட்டாரே?

! 'நீலகிரியைக் காப்போம்' இயக்கத்தின் முக்கியமானதொரு வெற்றி. இன்னும் பல வெற்றிகளுக்குப் போராட வேண்டியது பாக்கியிருக்கிறது.

● சாந்து உஸ்மானி, சென்னை - 4.

? பராசக்தி, மரியன்னையாக அவதாரமெடுத்த முதலமைச்சர் வருகிற ரம்ஜான் அன்று உருவமில்லாத இஸ்லாமியக் கடவுளாக அவதாரம் எடுப்பாரா?

! அ.தி.மு.க.வினரை அத்தனை முட்டாள்களாக எடை போடாதீங்க ஸார். யாரை ஏமாற்றலாம்; யாரைச் சமாளிக்கலாம், யாரிடம் வாலாட்டினால் முதுகு வீங்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

● செந்தில்நாதன், மதுரை.

? 'தேர்தலின் போது ஒரு தொகுதிக்கு அண்ணா சென்று பேசினால் அங்கு கட்சி ஜெயிக்கும், எம்.ஜி.ஆர் முகம் காட்டினால் கட்சி ஜெயிக்கும், ஆனால் புரட்சித் தலைவி பாதம் பட்டாலே வேட்பாளர் ஜெயித்து விடுவார்' என்கிறாரே சேடப்பட்டி முத்தையா?

! நல்ல வேளை, 'புரட்சித் தலைவி பாதத்தால் உதை பட்டாலே வேட்பாளர் ஜெயித்து விடுவார்' என்று சொல்லாமல் போனாரே, அந்த மட்டில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் தப்பித்தார்கள்!

● சீதாமகன், மதுரை.

? நடிகர் ராதா ரவியின் அரசியல் துறவு பற்றி?

! அரசியல்வாதியாக நடிப்பதிலிருந்து துறவு பூணவில்லையே. ஒரு சான்ஸ் கிடைத்தால் தூள் பரத்தி விடுவார்! அனுபவம் உதவும்.

● கு. அருணாசலம், தென்காசி.

? தமிழ் கேபிள் டீவிக்களின் எண்ணிக்கை பெருகுவது பற்றி?

! சினிமாக்கள் 'டப்பா' ஆகிவிடுமோ என்ற கவலை இல்லை. எப்படியும் மாறி மாறி பல் வேறு டீவிக்களில் இடம் பெற்று தேறிவிடும்!

● தென்றல் பிரியன், மேலூர்.

? குமுதம் அரசு, தமிழக அரசு ஒப்பிடுக.

! முன்னவர் அவ்வப்போது சிரிக்க வைப்பார்; பின்னது சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கும்.

● ஆர். தமிழரசி தேவசேனாபதி, மூலக்குப்பம்.

? தெற்கே நூறு வயது வாழ்ந்த காஞ்சி முனிவர், வடக்கே நூறு வயது வாழும் மொரார்ஜி - இருவருக்கும் என்ன ஒற்றுமை சார்?

! பொது வாழ்வில் கறை படியாதவர்கள்.

● தெ.கு. திலீபன், வத்ராயிருப்பு.

? ஆறுமுகநேரி பத்திரகாளியம்மன் கோவிலில் முதல்வர் ஜெயலலிதாவின் துதிப்பாடல் பாடியது பற்றி தங்கள் கருத்து?

! இப்படியே போனால் — மக்களும் அனுமதித்துக் கொண்டிருந்தால் — கோயில்களின் மூலஸ்தானத்தில் இருக்கிற சிலைகளை அகற்றிவிட்டு, ஜெ.யின் திருவுருவங்கள் நிறுவப்படும் நாள் அதிக தூரத்தில் இல்லை!

● பத்மாமணி, சென்னை - 18.

? புரசைவாக்கத்தில் ஒரு யானை சாலையில் நடந்த சிறுவனை அடித்துக் கொன்றது, மயிலாப்பூரில் பாதசாரிகளை கடித்த குரங்கு சுடப்பட்டது... சாலைகள் மிருகங்களுக்கா, மனிதர்களுக்கா?

! நீங்கள் நேரடி தாக்குதல்களை மட்டும் கவனித்துக் கேள்வி எழுப்பியிருக்கிறீர்கள். இவை தவிர ஆடுகள், மாடுகள், பன்றிகள், கோழிகள், நாய்கள், பூனைகள் புறாக்கள் போன்றவை நகருக்குள் வளர்க்கப்படுவதால் பரவுகிற வியாதிகள் கணக்கில் அடங்காது!

● எல். கோபாலகிருஷ்ணன், அரக்கோணம்.

? வோட்டுப் போடுவதால் மட்டும் மக்கள் எஜமானர்களாகி விட முடியுமா?

! முடியும். புத்திசாலித்தனமாக அதைப் பயன்படுத்துவதன் மூலம். ஆனால் அப்படி



• அரசியல் துறவு



• ஜெயிப்பதற்கு வழி!



• மோதிப் பார்த்து...



• உருவமில்லாக் கடவுள்?

...க்கப் போவது ஜெயாமே?

நடந்து விடக் கூடாது என்பதற்காகத்தானே, பெரும்பான்மை மக்களைக் கல்வியறிவு அற்றவர்களாக அரசியல்வாதிகள் வைத் திருக்கிறார்கள்!

● தேன்மொழிமன்னவன், கோனாபட்டு.

? பெண்கள் குடும்ப வேலை செய்வது அடிமைத்தனம் என்னும் பெண்கள், அதே வேலையை ஆண்கள் செய்தால் 'ஆண் அடிமை' என்று சொல்வார்களா இல் லையா?

! பெண் உரிமை என்பது ஆண்கள் இடத்தில் பெண்களையும் பெண்கள் இடத்தில் ஆண்களையும் இடம்மாற்றுவதில் இல்லை. மரபு ரீதியான தளைகளை உடைப்பதிலும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதிலும் தான் இருக்கிறது.

● இராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? 'எருமைமாடு மீது மழை பெய்தால் லேசாக வாலையாவது ஆட்டும். ஆனால் நரசிம்ம ராவ் பாறாங்கல்லைப் போல் அசையாமல் இருக்கிறார்' என்று வாழப் பாடி கூறியுள்ளாரே?

! ஆக, கனமான பாறாங்கல் போலிருந்து பதவிக்காலம் முடியும் வரை நிலையான ஆட்சியைத் தருவார் என்று ஒப்புக் கொள் கிறார், மோதிப் பார்த்து ஏமாற்றமடைந்த வாழப்பாடியார்.

● ச. ஆ. கேசவன், கழுகாசலபுரம்.

? தமிழகத்து அனைத்து ஆலயங்களிலும் உள்ள நகைகளைப் புகைப்படம் எடுக்கும் படி அரசு ஆணையிட்டிருப்பது பற்றி...?

! அனைத்து ஆலய நகைகளுக்கும் ஆல்பம் தயாரித்து விட்டால் எதை, என்றைக்கு, யாருக்குப் பூட்டி அழகு பார்க்கலாம் என்று யோசித்து முடிவு செய்வது வசதியாக இருக்கும், பாருங்க!

● க. சேகர், செங்குன்றம்.

? 'எம்.ஜி.ஆர் தொண்டர்கள் என்னை ஆதரிக்கிறார்கள்' என்று வை.கோ. சொல் கிறார்; 'எம்.ஜி.ஆர் தொண்டர்களை வை.கோ. ஏமாற்றுகிறார்' என்று அமைச்சர் கண்ணப்பன் கூறுகிறார்... எதை நம்புவது...?

! ஆக மொத்தம் இரு தரப்பினருக்குமே எம்.ஜி.ஆர். தொண்டர்கள் தேவைப்படு கிறார்கள்; இரு தரப்பினருமே எம்.ஜி.ஆர் தொண்டர்களை இழந்து விடுவோமோ என்று பயப்படுகிறார்கள். இந்த நிலையில் எம்.ஜி.ஆர். தொண்டர்கள் தங்கள் கை ஓங்கியிருப்பதைப் புரிந்து கொண்டு, புத்தி சாலித்தனமாக நடந்து கொள்ள வேண் டுமே!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? 'இந்தியாவின் அடுத்த பிரதமரை நிய மிக்கப் போவது ஜெயலலிதாதான்' என்று அமைச்சர் சத்தியமூர்த்தி கூறியுள்ளாரே?


❑ ரூ. 25 பரிசு பெறுபவர்: வே. முருகேசன், 16, X பிளாக், விசாலாட்சி தோட்டம், சென்னை - 600 004.

! அவர் அசத்தியமூர்த்தி சார்! நான் சொல் கிறேன், அடுத்த அமெரிக்க அதிபரைத் தீர் மானிக்கப் போவதே 'ஜெ'தான்!

● வே. முருகேசன், சென்னை - 4. ❑

? வாக்குறுதிகளை அள்ளி வீசுமுன் என். டி.ஆர். யோசித்திருந்தால் இன்று டில்லி யிடம் கையேந்தி நிற்கும் நிலை வந்திருக் குமா?

! அதுவாவது எவ்வளவோ தேவலாம் ஸார்! ஆனால் கல்கத்தாவைச் சேர்ந்த பீர்லெஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தில் 400 கோடி கடன் வாங்கியிருக்கிறாரே, அதை எண்ணித் தான் கதிகலங்குகிறது. வரி விதிக்கும் அரசாங் கங்களே தனியார் துறை நிறுவனங்களிடம் கடன் வாங்குவது என்ற நிலைக்குத் தள்ளப் படுமானால் அங்கு பொருளாதாரச் சீர் குலைவு எந்த அளவுக்கு உள்ளது என்பதை எவரும் எளிதில் உணரலாம்.



• எம்.ஜி.ஆர். தொண்டர்...



• ...தகுக்குப் போட்டி



• பிரதமர் நியமனம்!



• 400 கோடி கடன்!



• மதுராந்தகம் ஆறுமுகம்

1995 - காலண்டர் ஸ்டோரி!

சத்துணவு முட்டையில் கமிஷன், சீருடையில் கமிஷன், பாடப் புத்தகம் அச்சடிப்பதில் கமிஷன், காண்டிராக்ட் கமிஷன் என்று ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சியினர் அடுக்கிக் கொண்டே போக, இதோ ஆளும் கட்சியின் இன்னொரு புதிய வடிவ ஊழல் :

தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவுத் துறையில் பதினான்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. லட்சக் கணக்கான கரும்பு விவசாயிகள் இந்த ஆலைகளில் பங்குதாரர்களாக உள்ளனர். இந்த வருடம் பத்து ரூபாய் கூடப் பெறுமானம் இல்லாத காலண்டரை அவர்கள் தலையில் கட்டி விட்டு, அதற்கு நாற்பத்தி ஒன்பது ரூபாய் வாங்கிக் கொண்டு லட்சக்கணக்கில் 'ஸ்வாஹா' செய்யப்பட்டிருக்கிறது. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பங்குதாரரும், ம.தி.மு.க.வின் செங்கை மாவட்டச் செயலாளருமான மதுராந்தகம் ஆறுமுகம், காலண்டர் கொள்ளையைப் பிட்டு வைக்கிறார் :

"பொதுவாகவே கூட்டுறவு நிறுவனங்களில் காலண்டர்கள் போன்ற அன்பளிப்புப் பொருட்கள் போடக் கூடாது என்பது பல காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபு. இதற்குக் காரணம், இதுபோன்று செலவினங்களெல்லாம், உறுப்பினர்களின் (விவசாயிகளின்) லாபத்தைப் பாதித்து விடும் என்பது தான்.

"ஆனால் இந்த வருடம் தமிழ்நாடு பூராவும் உள்ள உறுப்பினர்களுக்கு, ஒன்றரை கோடி ரூபாய் செலவு செய்து காலண்டர்கள் வாங்கி வழங்கியிருக்கிறார்கள். காலண்டரில் யாருடைய படம் இருக்கும் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

"கரும்பு ஸீஸனின் போது விவசாயிகளுக்குத் தற்காலிகமாக அக்கவுண்ட் செட்டில் செய்தது போக, மிச்சம் மீதி ஆண்டுக் கடைசியில் கொடுக்கப்படும். இந்த வருடம் அந்தப் பணத்தைக் கொடுக்கும்போது காலண்டருக்குச் சில ஆலைகளில் 49 ரூபாயும், சில ஆலைகளில் 53 ரூபாயும் கழித்துக் கொண்டு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் காலண்டர் அடித்த கம்பெனிக்கு முன்னதாகவே - ஆலைகளின் பொது நிதியிலிருந்து - பணம் எடுத்துக் கொடுத்து விட்டார்கள்! எனக்கு வந்த தகவல்படி ஜெயா பப்ளிகேஷன்ஸ் தான் காலண்டர் அச்சடித்துக் கொடுத்திருக்கிறது. மொத்தம் அடிக்கப்பட்ட காலண்டர்களின் மதிப்பு அதிகபட்சம் 25 லட்சத்தைத் தாண்டாது. ஆனால் ஒன்றரை கோடி கொடுத்திருக்கிறார்கள். அப்படியென்றால் யாருடைய பாக்கெட்டுக்கு மீதிப் பணம் போனது? உங்கள் ஊகத்துக்கே விட்டுவிடுகிறேன்" என்று மதுராந்தகம் ஆறுமுகம் தொடர்ந்து, பொருமினார் :

"கூட்டுறவுத் துறையில் ஒரு சின்ன பில் புத்தகம் அடிக்க வேண்டுமென்றால் கூட, கூட்டுறவு அச்சகங்களில்தான் அடிக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆனால் இவ்வளவு பெரிய தொகைக்கான ஆர்டர் ஒரு தனியார் கையில் - அதுவும் முதல்வர் பெயரைத் தாங்கிய நிறுவனத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது...

"கூட்டுறவுத் துறையில், இதுபோன்ற ஊழல்கள், மோசடிகள் நடக்காமல் இருக்க வேண்டுமானால் தேர்தல்கள் நடத்தப்பட்டு நிர்வாக இயக்குனர்கள், தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் அ.தி.மு.க. அரசு தேர்தலைச் சந்திக்கப் பயப்படுகிறது. அதனால் அதிகாரிகளும் ஆளும் அரசியல்வாதிகளும் கூட்டுக் கொள்ளையடிக்க வசதியாகப் போய் விட்டது" என்று முடித்தார் மதுராந்தகம் ஆறுமுகம்.

- தில்லப்பா

படம் : ராஜன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M, 4392
Registered as Newspaper in Srilanka